
April 2019

# தமிழ்

10-ம் ஆண்டில்

நற்றமிழரின் நாடித்துடிப்பு



சித்திரைச் சிறப்பிதழ்

# VARSHA™

Ready to Cook

Made with Quality Natural Products

## Idli / Dosa Wet Mix • இட்லி / தோசை மாவு

## ఇడ్లీ దోస పిండి • ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು

## ഇഡ്ഡലി / ദോശ മാവ്



CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI



100% Pure Vegetarian

ઈડલી ડોસા નું ખીરું

इडली/ दोसा आटा

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

April 2019

சுவடி — 9
ஓலை — 2

## உள்ளே...



சர்வாதிகார ஜனநாயகம்

பொறுத்தவர் பொங்கி எழுந்தால்

ஆளத்துடிக்கும் சீனா

ஏன் வேண்டும் அழிவுப் பாதை?

தாயுமானவர்

பாரதி கண்ட பெண்ணியம்

அறிவோம் தமிழர் பெருமை

சிவகாமியின் சபதம்

காற்றைச் சுத்தி

மருத்துவத் தமிழ்

களவு போகும் காலம்

## வணக்கம் பல

உலக நாடுகள் பலவும் முடியாட்சியை துறந்து குடியாட்சியை ஏற்றுக்கொண்டபின் ஜனநாயகத்தின் மிகப் பெரிய நம்பிக்கையாக விளங்குவது பொதுத்தேர்தலே ஆகும். அந்தப் பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று மக்களின் ஏகோபித்த நம்பிக்கையையும் ஆதரவையும் பெறுபவர்கள், அந்நாட்டின் தலையெழுத்தையும் அம்மக்களின் நலனையும் தீர்மானிக்க கூடியவர்களாக மாறுகிறார்கள். ஆட்சி எனும் அதிகார நாற்காலியில் அமர்ந்த பின்பு எதை மக்கள் தங்களிடம் எதிர்பார்த்தார்களோ அதனை நேர்மையாக மனச்சுத்தியோடு தாங்கள் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுகிறார்களா என்றால், பெரும்பாலும் இல்லை என்பதே உண்மை நிலையாக இருக்கிறது.

சமீபத்தில் நடந்து முடிந்த தாய்லாந்து பொதுத் தேர்தல் முடிவுகளும் இம்மாதம் இந்தியாவில் நிகழவிருக்கிற பொதுத் தேர்தல் முடிவுகளும் மக்களின் மனநிலையின் வெளிப்பாடுதான் என்றாலும், மக்களின் நம்பிக்கையை அந்த ஆட்சியாளர்கள் மெய்யாக்குவார்களா என்றால் பெரிதும் கேள்விக்குறியே! இருப்பினும் மக்கள் ஒவ்வொரு தேர்தலிலும் தளராது தங்களது நம்பிக்கையை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கிறார்கள். கிடைத்தற்கரிய தலைமைப் பொறுப்பு தங்களுக்கு கிடைக்கப்பெற்று, ஆளும் அதிகாரத்துக்கு வருபவர்கள் திறம்பட நேர்மையாக மக்களின் நல்வாழ்வுக்காக உழைத்தார்கள் என்றால் வரலாற்றில் அவர்களது பெயர் பொன்னேட்டில் பொறிக்கப்படும். தவறினால், காலம் முழுதும் அவர்களது பெயர் தூற்றப்படும்! எனவே போற்றப்படவேண்டுமா? தூற்றப்பட வேண்டுமா என்பதை நாளும் நினைவில் நிறுத்தியபடி பதவி நாற்காலியில் அமர்வது, அவர்களுக்கும், அந்நாட்டு மக்களுக்கும் செய்யும் மிகப்பெரிய நன்மையாகும்! சித்திரை திருநாள் மலர்ந்திருக்கும் இவ்வேளையில் பொதுத் தேர்தல் நடைபெற்ற நாடுகளில் நல்ல தலைமை அமைந்து, உலக அளவில் ஒவ்வொரு நாடும் தங்களது பெயரைத் தனித்துவமிக்க உயர்ந்த நாடுகளாக அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற அவாவையும் சிந்தனையையும் மலராகத் தூவுகிறோம்!

கதம்ப மலர்களென அற்புதமான பனுவல்களையும் கவிதைகளையும் கட்டுரைகளையும் சித்திரை திருநாள் சிறப்பிதழாக வாசக நெஞ்சங்களுக்கு சமர்ப்பித்து, வளம்தரும் நலம்தரும் முத்திரை பதிக்கும் ஆண்டாக இந்தத் தமிழ்ப் புத்தாண்டு சித்திரைத் திருநாள் தொடங்கட்டும் என வாழ்த்துக்களை வழங்கி மகிழ்கின்றோம்!

நேசப்பகிர்தலுடன்

ஆசிரியர் குழு

**IThamil Monthly Magazine**

**Chief Editor & Publisher**
Sivanesan

**Editor**
Khottravan

**Editorial Team**
Ganesan
Navani
Shanthakumar

**Art Editor**
Sriram

**Art & Marketing Director**
Jaya

**Printers**
Kanagam Pathippagam

**Contact us:**
*editor@ithamil.com*

*இதழில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் படைப்பாளரின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியது



# சர்வாதிகாரா

## ஆட்சிக் கவிழ்ப்புக்கு பிறகு நடைபெறும் தாய்லாந்தின் பொதுத் தேர்தல்

**தா**ய்லாந்தில் 2014—ல் நடந்த ஆட்சி கவிழ்ப்புக்கு பின்னர் ராணுவத்தின் பிடியில் அரசு இருக்கிறது. அதன் பிறகு முதன்முறையாக தாய்லாந்தில் பொதுத்தேர்தல் நடந்தது. ஆனால் தேர்தல் ஆணையம் முடிவுகளை முழுமையாக



அறிவிக்காமல் இருப்பதால் தாய்லாந்தில் குழப்பம் நிலவுகிறது.





தாய்லாந்தில் பல வருடங்களாக அரசியல் ஸ்திரமற்ற தன்மை இருந்து வந்தது. அங்கு ராணுவ ஆதரவாளர்கள் மற்றும் பதவியிலிருந்து விலக்கப்பட்ட முன்னாள் பிரதமர் தக்சின் ஷின்னவாட்ரா ஆகியோரின் ஆதரவாளர்களுக்கு மத்தியில் மோதல் போக்கு நிலவி வந்தது.

ஆட்சியை கைப்பற்றிய பிறகு ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதாக ராணுவம் தெரிவித்திருந்தது. ஆனால் தேர்தலுக்கான ஏற்பாடுகளை தள்ளிப் போட்டுக் கொண்டே இருந்தது. ராணுவத்தால் அறிமுகப்படுத்தப்படும் புதிய அரசியலமைப்பில், ராணுவம் தனது தாக்கத்தை கொண்டிருக்கும் என விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.


50 மில்லியனுக்கும் அதிகமான வாக்காளர்கள் இந்த தேர்தலில் பங்கேற்றனர். வாக்கெடுப்பின்போது கொந்தளிப்புகள் ஏற்பட 80 சதவிகித வாய்ப்புகள் உள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. 18—26 வயதுக்குட்பட்ட வாக்காளர்கள் ஏழு மில்லியனுக்கும் அதிகமானோர் இருப்பதால் அனைத்து கட்சியினரும் அவர்கள் மீது கவனம் செலுத்தினர்.



# ஜனநாயகம்

தேர்தலின் போது அமைதியை காக்க வேண்டும் என தாய்லாந்து அரசர் மஹா வஜ்ரலங்கோன் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார். தேசிய தொலைக்காட்சியில் வெளியான அந்த அறிக்கையில் நல்ல மனிதர்களுக்கு ஆதரவளியுங்கள் என அவர் தெரிவித்தார். இந்த தேர்தலில் முக்கியமாக ராணுவத்துக்கு ஆதரவு வழங்கும் அணிகள் மற்றும் தக்சினுடன் கூட்டணி வைத்துள்ளவர்களும் மோதுகின்றனர்.

2006ஆம் ஆண்டு நடைபெற்ற ஆட்சிக் கவிழ்ப்பு சதியில் தக்சின் பதவியிலிருந்து இறக்கப்பட்டார். மேலும் அதிகார துஷ்பிரயோகம் குற்றத்திலிருந்து தப்பிக்க அவர் நாட்டை விட்டு வெளியே வாழ்ந்து வந்தார். இருப்பினும் அவருக்கு கிராமப்புற பகுதிகளில் பெரும்







ஆதரவு இருந்தது.

இன்று நடைபெறும் தேர்தலில் வாக்காளர்கள் நாடாளுமன்றத்தின் கீழவையின் 500 உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பர். ஆனால் அரசியல் சாசனம்படி 250 செனேட் உறுப்பினர்களை ராணுவம் அமர்த்தியுள்ளது. இரண்டு அவைகளும் இணைந்து பிரதமரை தேர்ந்தெடுக்கும்.

ராணுவத்தின் ஆதரவு பெற்ற ஜென் பிரயூத் கீழவைகளின் 126 வாக்குகளை பெற்றால் வெற்றி பெற முடியும்.

அரசாங்கம் மற்றும் கூட்டணி கட்சிகள் நாடாளுமன்ற உறுப்பினர் அல்லாத ஒருவரை பிரதமராக தேர்ந்தெடுக்க முடியும்.


ராணுவ ஆதரவு பெற்ற கட்சியான பாலங் பிரச்சா ரத் கட்சி தேர்தல் முடிவுகளில்




முன்னணியில் இருப்பதாக தேர்தல் ஆணையம் முதலில் கூறியது. இதன் படி தற்போதைய பிரதமர் ஜெனரல் ப்ரயுத் சான்—ஒகாவின் தலைமையில் அரசு அமைக்கப்படவேண்டும். ஆனால் தொடர்ச்சியான புகார்கள் மற்றும் முறையற்ற தரவுகள் காரணமாக குழப்பம் ஏற்பட்டுள்ளது.

வாக்குப்பதிவு முடிந்தபிறகு 90%—த்துக்கும் அதிகமாக வாக்கு எண்ணிக்கை முடிந்துவிட்டது. பாலங் பிரச்சா ரத் கட்சி 7.6 மில்லியன் வாக்குகள் பெற்றுள்ளது என தேர்தல் ஆணையம் தெரிவித்திருந்தது.

அதாவது முந்தைய பிரதமர் தக்ஷின் ஷினவத்ராவுடன் தொடர்புடைய ப்யு தாய் கட்சியை விட அரை மில்லியனுக்கும் மேல் அதிக வாக்குகள் பெற்றுள்ளது. 2001—லிருந்து ஒவ்வொரு தேர்தலிலும் ஷினவத்ரா ஆதரவாளர்களே வெற்றி பெற்று வந்தது குறிப்பிடத்தக்கது.





இந்நிலையில் தேர்தல் குறித்த முழு முடிவுகளையும் வெளியிடாமல் தாமதப்படுத்தும் தேர்தல் ஆணையம், ஏன் முழுமையாக முடிவுகளை வெளியிட முடியவில்லை என்பதற்கான காரணங்களை கூறவில்லை.

பல்வேறு உள்ளூர் ஊடகங்களும் தேர்தல் ஆணையம் கூறிய எண்ணிக்கைகளை மேற்கோள்காட்டி ஒவ்வொரு கட்சியும் எத்தனை இடங்களில் வென்றிருக்கின்றன என்பதில் வெவ்வேறு எண்ணிக்கையை கூறுகின்றன.

செய்தியாளர் சந்திப்பில் தேர்தல் ஆணையம் முதல்கட்ட முடிவுகளை தெளிவுபடுத்தும் என எதிர்பார்க்கப்பட்டது ஆனால் தேர்தல் ஆணையம் மீண்டும் தேர்தல் முடிவுகளை அறிவிப்பதில் தாமதம் ஏற்பட்டுவருகிறது. மேற்கொண்டு தகவல்களை இன்று வெளியிடுகிறோம் என கூறியுள்ளது ஆனால் அதிகாரப்பூர்வமாக முழுமையான முடிவுகள் மே 9 வரை வெளியிடப்படாது என தெரிவித்துள்ளது,

50 மில்லியனுக்கும் அதிகமானோர் வாக்களிக்க தகுதியானவர்களாக இருந்தனர். இருப்பினும் 2014—க்கு பிறகு முதல் முறையாக நடந்த தேர்தலில் எதிர்பாராதவிதமாக 64% வாக்குப்பதிவுதான் பதிவானது. பலர் இந்த எண்னிக்கை குறித்து கேள்வி எழுப்பினர் மேலும் தேர்தல் முடிவுகளில் பதிவான வாக்குகள் மற்றும் வாக்கு எண்ணிக்கை இடையே இருந்த முரண்பாடுகள் குறித்தும் கேள்வி எழுப்பினர்.

தேர்தல் ஆணையத்தின் செயலர் சாருங்வித்




பும்மா செய்தியாளர்களிடம் பேசுகையில் இது 'மனித தவறு' என்றார்.

ஒருபுறம் தேர்தல் ஆணையம் முழுமையாக முடிவுகளை அறிவிக்காத நிலையில் ப்யு தாய் மற்றும் பிபிஆர்பி கட்சியினர் கூட்டணி ஆட்சி அமைக்க விருப்பம் தெரிவித்துள்ளனர்.

ராணுவ ஆதரவு கட்சி மூன்றாமிடம் பிடிக்கும் என பலரும் கணித்திருந்த நிலையில் எப்படி பெரு வாரியான மக்களின் வாக்குகளை பெற்றது என தாய்லாந்தில் பலரும் குழப்பத்தில் உள்ளனர்.

தேர்தல் ஆணையத்தின் தலைமை அலுவலகத்தில் செயற்பாட்டாளர்கள், செய்தியாளர்கள் கேள்வி கேட்டனர்.

ஏன் வாக்குப்பதிவு குறைந்தது? ஏன் பல ஓட்டுகள் தள்ளுபடி செய்யப்பட்டது? ஏன் நியூசிலாந்தில் போடப்பட்ட 1500 ஓட்டுகள் எண்ணப்படவில்லை என பல்வேறு பிரத்யேகமான கேள்விகள் கேட்கப்பட்டன.

## தாய்லாந்து தேர்தலில் முறைகேடு: எதிர்க்கட்சிகள் புகார்

தாய்லாந்து பொதுத் தேர்தலில் முறைகேடுகள் நடைபெற்றதாக ராணுவத்துக்கு எதிரான கட்சிகள் தேர்தல் ஆணையத்திடம் புகார் தெரிவித்துள்ளன.

இந்த நிலையில், தேர்தல் முடிவுகளை அறிவிப்பதில் குழப்பம் நீடித்து வந்தது.தேர்தலில் ராணுவத்துக்கு எதிரான பியூ தாய் கட்சி முன்னிலை வகிப்பதாக தொடக்கத்தில் கூறிய தேர்தல் ஆணையம், ராணுவத்துக்கு ஆதரவான பலங் பிரசாரத் கட்சி வெற்றி பெற்றதாக வியாழக்கிழமை அறிவித்தது. மேலும், 21 லட்சம் செல்லாத வாக்குகள் பதிவாகியுள்ளதாக முதலில் தெரிவித்த தேர்தல் ஆணையம், பிறகு அது தொடர்பான கேள்விகளுக்கு பதிலளிக்க மறுத்துவிட்டது.




நாடாளுமன்றத் தொகுதிகளின் இறுதி நிலவரம் இன்னும் வெளிவராத நிலையில், தங்களுக்கு போதிய வலிமை இருப்பதாகக் கூறி இரு கட்சிகளுமே ஆட்சியமைக்கும் உரிமையை கோரி வருகின்றன.

இதற்கிடையே, இந்தப் பொதுத் தேர்தலில் முறைகேடுகள் நடைபெற்றதாக தேர்தல் ஆணையத்திடம் ஏற்கெனவே புகார்கள் தெரிவிக்கப்பட்ட நிலையில், தற்போது ராணுவத்துக்கு எதிரான ஃப்யூச்சர் ஃபார்வர்டு மற்றும் பியூ தாய் கட்சிகள் தேர்தல் ஆணையத்திடம் வெள்ளிக்கிழமை தனித்தனியாக அளித்த புகார்களில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:





கடந்த 24—ஆம் தேதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஏராளமான முறைகேடுகள் நடைபெற்றன. தேர்தலின்போது ராணுவத்துக்கு ஆதரவான பலங் பிரசாரத் கட்சி உள்ளூர் அதிகாரிகளுக்கு பணமும், பரிசுப் பொருள்களும் அளித்தது. இது வாக்குகளை விலை கொடுத்து வாங்கும் செயலாகும்.




இது தவிர, வாக்குச் சாவடிகளில் ராணுவ அதிகாரிகள் இருந்துகொண்டு, அதிகாரிகள் தங்களுக்குத் தேவையான வேட்பாளர்களுக்கு வாக்களிக்கிறார்களா என்பதை கண்காணித்தபடி இருந்தனர். இதுவும் தேர்தல் நடத்தை விதிமீறலாகும்.

மேலும், இருட்டான இடத்தில் வாக்கு எண்ணிக்கை நடத்தப்பட்டதால், வாக்குச் சீட்டுகளை எண்ணுவதில் குளறுபடி ஏற்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சிகள் தங்களது புகார் மனுக்களில் தெரிவித்துள்ளன.

தேர்தல் முடிவுகளில் குழப்பம் நிலவுவதையொட்டி ஒரு பிரபல செயற்பாட்டாளர் சோம்பட் பூங்கமாஓங் தேர்தல் ஆணைய தலைவருக்கு ஒரு மிகப்பெரிய கால்குலேட்டரை பரிசளித்தார்.

வாக்கு எண்ணிக்கை குறித்த அறிவிப்பை வெளியிடும் போது தேர்தல் ஆணையர் ''என்னிடம் கால்குலேட்டர் இல்லை.அதனால் தேர்தல் முடிவை வெளியிடுவதில் தாமதம் ஏற்படும்'' எனக் கூறியிருந்தார்.

தேர்தல் முடிவுகளில் முறைகேடுகள் நடந்திருப்பதாக கூறப்படுவது குறித்து இந்த சூழலில் உறுதியாக சொல்வது கடினம்.

ஆனால் எதிர்பாராத நிகழ்வுகள் காரணமாக இம்முறை கோப அலைகள் உருவாக்கியுள்ளன.

# கருத்துப் ப(ா)டம்




'மோடி நமக்கு அப்பா... ராகுலுக்கு, மோடி தாத்தா... அப்ப, ராகுல் நமக்கு புள்ளை முறை வருது... அதனால, ராகுலை யாரும் திட்டி தீர்க்காதீங்க'ன்னு தலைமையிலிருந்து உத்தரவு வந்திருக்கு... பேச்சாளர்கிட்ட சொல்லிடுப்பா...!

http://www.dinamalar.com/




## சொல்றாங்க... சொல்றாங்க...



"தமிழர்களுக்கு ஐ.நா தீர்மானம் ஏமாற்றத்தை அளித்துள்ளது

**சி.வி. விக்னேஸ்வரன்**

(இந்த உண்மையை இவ்வளவு நாள் கழிச்சு கண்டுபிடிச்சதுக்கு உங்களுக்கு டாக்டர் பட்டம் கொடுக்கலாமான்னு ஐ.நா. பரிசீலிக்கிறதாம்! )



"விடுதலைப் புலிகள் காலத்தில் வன வளம் பாதுகாக்கப்பட்டது"

**மைத்திரிபால சிறிசேன**


(எத்தனை ஆண்டுகள் ஆனாலும் உண்மையைப் புதைக்க முடியாது! என்ற உண்மை வெளிப்பட்டிருக்கிறது!)



"பிரமதர் மோடி ஒன்றும் மன்மோகன் போன்று மௌன சாமியார் அல்ல!"

**அமித் ஷா**

(வாய் தவறி உண்மையை உளறிக் கொட்டுகிறீரய்யா...)



"ராதாரவியின் பெண் வெறுப்பு பேச்சுக்கு எதிராக துரிதமாக செயல்பட்டு நடவடிக்கை எடுத்த திமுக தலைவர் ஸ்டாலினுக்கு எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்"

**நயன்தாரா**

(கனல் கக்கும் வார்த்தைகள் வரும்னு நினைச்சா, கனிந்த நன்றி வந்திருக்கு! நயன மொழிதான் நயன் மொழியோ?)

# பொறுத்தவர் பொங்கி

இலங்கையின் அரசியல் அமைப்பின் பிரகாரம் வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றத்தை அமைக்க முடியாது என்ற அரசாங்கத்தின் கூற்று பொருத்தமற்றது. நீதியரசர் பகவதி தலைமையிலான சர்வதேச சுயாதீன குழுவை உதாரணமாக கொண்டு கலப்பு நீதிமன்றம் அமைக்க முடியும் என வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்



ஜெனீவா மனித உரிமை அமர்வு தொடர்பில் அவர் கருத்தை வெளியிடும் போதே மேற்கண்டவாறு கூறினார்.




அவர் மேலும் கூறுகையில், ஐக்கிய நாடுகள் சபையில் 2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு மேலும் இரண்டு ஆண்டு காலம் வழங்கி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் கடந்த மார்ச் 21 அன்று உறுப்பு நாடுகள் இலங்கை அரசாங்கத்தின் அனுசரணையுடன் 40/1 என்ற தீர்மானத்தினை நிறைவேற்றி இருப்பது தமிழ் மக்களுக்கு பெரும் ஏமாற்றத்தை அளித்திருக்கின்றது.


போர்க்குற்றம் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களை இழைத்தவர்கள் தண்டனையில் இருந்து தப்புவதற்கும் எமது மக்களுக்கு எதிராக மனித உரிமை மீறல்கள் தொடர்ந்து இழைக்கப்படுவதற்குமே இந்தப் பிரேரணை வழிவகுக்கப்போகின்றது.

இனப் படுகொலை புரிந்து எமது பெண்களை நூற்றுக்கணக்கில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய ராணுவத்தை தண்டனையில் இருந்து காப்பாற்றும் வகையில் தமிழ் தேசிய கூட்டமைப்பு இந்த பிரேரணைக்கு சார்பாக செயற்பட்டமையும்

# எழுந்தால்

வேதனையை அளிக்கின்றது.

30/1 தீர்மானம் நிறைவேற்றப்பட்டு சுமார் 3 ஆண்டுகளுக்கும் மேல் கடந்துள்ள நிலையில் அதனை நிறைவேற்றுவதற்கான எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவோ அல்லது அவற்றை நிறைவேற்றவோ விருப்பம் எதனையும் வெளியிடாத இலங்கை அரசாங்கம், மாறாக இந்த தீர்மானத்தின் முக்கிய பல விடயங்களை மீண்டும் மீண்டும் நிராகரித்தே வந்துள்ளது.




வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றம் உருவாக்கப்படவேண்டும் என்ற 30/1 தீர்மானத்தினை நிறைவேற்ற வலியுறுத்தும் 40/1 தீர்மானத்துக்கு அனுசரணை வழங்கிக்கொண்டே கலப்பு நீதிமன்ற யோசனையை இலங்கை அரசாங்கம் மனித உரிமைகள் சபையில் கடந்த வாரம் உத்தியோகபூர்வமாக நிராகரித்திருக்கின்றது.

இது எந்த அளவுக்கு இலங்கை அரசாங்கம் 30/1 தீர்மானத்தினை நிறைவேற்றுவதற்கு அக்கறை கொண்டிருக்கிறது என்பதனையும் அதன் நேர்மைத் தன்மையையும் அதன் ஏமாற்று தந்திரத்தையும் வெளிச்சம்போட்டு காட்டுகின்றது.

ஐ. நாவுக்கு எழுத்துமூலம் கொடுத்த வாக்குறுதிகளையே அடுத்த நிமிடம் காற்றில் பறக்கவிடும் இலங்கை அரசாங்கம் கடந்த பல தசாப்த கால இனப்பிரச்சினையில் எத்தனை ஒப்பந்தங்களை




உதாசீனம் செய்திருக்கும் என்பதனையும் இது எந்தளவுக்கு தமிழ் மக்களுக்கு ஏமாற்றத்தையும் விரக்தியையும் கொடுத்திருக்கும் என்பதையும் சர்வதேச சமூகம் புரிந்துகொள்ள வேண்டும்.

இலங்கையில் ஒரு இனப்படுகொலை நடைபெற்றபோது அதனைத் தடுப்பதற்கு தவறி இருந்த ஐ. நா மற்றும் சர்வதேச சமூகம் ஆகியவை யுத்தத்தின் பின்னர் பொறுப்புக்கூறல் மற்றும் நீதிச் செயற்பாட்டை உறுதிப்படுத்துவதற்கான பெரும் கடப்பாட்டை கொண்டிருந்தன.

ஆனால், ஐ. நா மனித உரிமைகள் சபையினூடான நீதி மற்றும் பொறுப்புக்கூறல்

செயன்முறையை அலட்சியமாகவும் விளையாட்டு போலவும் இலங்கை அரசாங்கம் கையாளுவதற்கு சர்வதேச சமூகம் இடமளித்திருப்பது இலங்கையில் பாரதூரமான மனித உரிமை மீறல்கள் மீண்டும் இடம்பெறுவதற்கும் உலகில் ஒரு பிழையான முன்னுதாரணம் ஏற்படுவதற்குமே வழிவகுக்கப்போகின்றது.

இறுதி யுத்தத்தில் நடைபெற்ற போர்க்குற்றங்களானவை சர்வதேச சட்டங்கள் மற்றும் கோட்பாடுகளுக்கு அமைவாக விசாரிக்கப்பட்டு காரணமானவர்கள் தண்டிக்கப்பட்டிருந்தால் உலகின் பலநாடுகளிலும் இன்று போர்க்குற்றங்கள் இடம்பெறாமல் சர்வதேச சமூகம் தவிர்த்திருந்திருக்கக்கூடும்.

ஆகவே, 40/1 பிரேரணையை நிறைவேற்றுவதற்கு அனுசரணை வழங்கிய அனைத்து நாடுகளும் 30/1 தீர்மானத்தை இலங்கை அரசாங்கம் முழுமையாக நிறைவேற்றுவதற்கு காத்திரமான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றேன். அத்துடன், ஐ. நா மனித உரிமைகள் சபையின் ஆணையாளரின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கும் இந்த நாடுகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பொதுமக்களின் காணிகளில் இருந்து ராணுவம் விலகவேண்டும் என்று மூன்று வருடங்களுக்கு முற்பட்ட 30/1 தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆனால், பொதுமக்களின் காணிகளில் இன்னமும் ராணுவம் நிலைகொண்டுள்ளது. பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படவில்லை. நீக்குவதானால் அதனிலும் கொடிய ஒரு சட்டத்தை ஏற்ற பின்னரே முன்னையதை நீக்கலாம் என்று அரசாங்கம் கூறி வருகின்றது.

முல்லைத்தீவு, வவுனியா மற்றும் திரிகோணமலை மாவட்டங்களில் சிங்கள குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

காணாமல் போன தமது உறவுகளைத் தேடி அவர்களது உறவினர்கள் ராணுவ முகாம்களுக்கும் போலிஸ் நிலையங்களுக்கும் அலைந்து திரிந்து கொண்டிருக் கின்றார்கள். வீதிகளில் நின்று போராடுகின்றார் கள். ஆனால் பலன் ஏதும் கிடைப்பதாக இல்லை. அதனால்தான் ஐ. நா மனித உரிமைகள் சபை இலங்கைக்கான விசேட பிரதிநிதி ஒருவரை நியமிக்க வேண்டும் என்றும் தனது நிரந்தர அலுவலகம் ஒன்றை வடக்கு கிழக்கில் நிறுவவேண்டும் என்றும் நான் மீண்டும் வலியுறுத்துகின்றேன்.




இதன் மூலம், வடக்கு கிழக்கில் தொடரும் மனித உரிமை மீறல்களை நிறுத்த முடிவதுடன் 30/1 தீர்மான விடயங்கள் நிறைவேற்றப்படுவதை கண்காணிப்புச்செய்யவும் முடியும். இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தும் நடவடிக்கைகள் குறித்தும் உறுப்புநாடுகள் தீவிர கவனம் செலுத்தவேண்டும். அதேவேளை, போர்க்குற்றங்களை விசாரணை செய்ய வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றத்தை நிறுவுவதற்கு உடனடியாக உறுப்புநாடுகள் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

இலங்கையின் அரசியல் அமைப்பின் பிரகாரம் வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றத்தை அமைக்கமுடியாது என்ற அரசாங்கத்தின் கூற்று பொருத்தமற்றது. 2005 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 1 ஆம் திகதி அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியாவின் முன்னாள் பிரதம நீதியரசர் பி. என். பகவதி தலைமையில் 16 மனித உரிமை மீறல் சம்பவங்களை விசாரணை செய்யும் உடலகம ஆணைக்குழுவின் விசாரணைகளைக் கண்காணிப்பதற்கு அமைத்த முன்னணி நபர்களைக் கொண்ட சர்வதேச சுயாதீன குழுவை உதாரணமாக கொண்டு கலப்பு நீதிமன்றத்தை உருவாக்கலாம்.

வெளிநாட்டு நீதிபதிகளின் உள்ளடக்கம் எவ்வாறு மனித உரிமைகள் மீறல் பொறிமுறைகளில் சர்வதேச தராதரத்தையும் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் நம்பகத்தன்மையையும் ஏற்படுத்தும் என்பதற்கு நீதியரசர் பகவதி குழு ஒரு சிறந்த உதாரணமாகும்.

அதேபோல, இலங்கை அரசாங்கத்தின் உடலகம ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பிலான விசாரணைகள் சர்வதேச தராதரம் மற்றும் கோட்பாடுகளுக்கு அமையாமலும் வெளிப்படைத்தன்மை இன்றியும் நடைபெற்றது என்று கூறி ஆணைக்குழுவின் செயற்பாடுகளுக்கு அங்கீகாரம் கொடுப்பதை தவிர்க்கும் வகையில் ஒரு வருடத்துக்கு பின்னர் "சர்வதேச சுயாதீன குழுவை" நீதியரசர் பகவதி கலைத்தமையானது ஏன் உள்நாட்டு பொறிமுறை இலங்கைக்கு பொருத்தமற்றது என்பதற்கான ஒரு சிறந்த உதாரணமாகும்.

அப்போது காலஞ்சென்ற நீதியரசர் மார்க் பர்ணாண்டோவுடனும் என்னுடனும் குறித்த சர்வதேச சுயாதீனக் குழுவானது கலந்து பேசி அறிவுரைகளை பெற்றிருந்தது என்பதை இத்தருணத்தில் கூறி வைக்கின்றேன் என தெரிவித்தார்.

# VARSHA™

Ready to Cook

Made with Quality Natural Products

**Idli / Dosa Wet Mix** • இட்லி / தோசை மாவு

ఇడ్లీ దోస పిండి • ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು

ഇഡ്ഡലി / ദോശ മാവ്




ઈડલી ડોસા નું ખીરૂં


इडली/ दोसा आटा

# ஆனத்துடிக்கும்

### சீனாவின் பட்டுப்பாதை திட்டம்: தேச எல்லைகளை கடந்த பெருங்கனவின் வரலாறு

புதிய பட்டுப்பாதை திட்டம் எனும் சீனாவின் கனவுத் திட்டத்தில் இத்தாலியும் இணைந்திருக்கிறது.

சீன அதிபர் ஜின்பிங்கின் ரோம் பயணத்தின் போது 2.8 பில்லியன் டாலர்கள் மதிப்பிலான 29




ஒப்பந்தத்தில் இத்தாலி மற்றும் சீன தலைவர்கள் கையெழுத்திட்டுள்ளனர். ஆனால், அதே நேரம் இத்தாலியின் இந்த முடிவானது அதன் மேற்கத்திய கூட்டாளி நாடுகளை கவலையுற செய்துள்ளது.




சீனாவின் புதிய பட்டுப்பாதை திட்டத்தில் இணையும் முதல் வளர்ந்த மேற்கத்திய நாடு இத்தாலி. இந்த சூழலில் புதிய பட்டுப்பாதை திட்டம், அது பிறந்த கதை ஆகியவற்றை குறித்து விரிவாக காண்போம்.

### பட்டுப்பாதை பிறந்தது எப்படி?

அமெரிக்காவின் பிரௌன் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் டமாரா சின் எழுதியிருக்கும் புத்தகம் "பட்டுப் பாதையின் கண்டுபிடிப்பு" எனப் பொருள்படும் "தி இன்வெண்ஷன் ஆஃப் சில்க் ரோட்."

காதல் கருத்துகளை போல் அற்புதமானது "பட்டுப் பாதை. ஆனால் வரலாற்று உண்மையுடன் மிகக் குறைந்த தொடர்பையே கொண்டுள்ளது," என்று கூறும் டமாரா சின், முதலில் பட்டுப் பாதை என்பது ஒற்றைப் பாதை இல்லை என்கிறார்.



# சீனா

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்தது பட்டுப் பாதை. அமெரிக்கா, உலக மேலாதிக்க வர்த்தக சக்தியாக உருவெடுத்தபின், 1500ஆம் ஆண்டு வாக்கில், பட்டுப்பாதை பட்டுப்போனது.

சீனாவின் புதிய பட்டுப்பாதை வெறும் அபிலாஷை திட்டமா?




இருந்தாலும், அதன்பிறகு, ஜெர்மனி 1877— இல், ஃபெர்டினண்ட் வொன் ரிச்தோஃபென் என்ற புவியியலாளரை சீனாவுக்கு அனுப்பியது.

சீனாவில் இருக்கும் நிலக்கரி இருப்பு மற்றும் அதை ஐரோப்பாவிற்கு கொண்டு வருவதற்கான சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்வதுதான் அவருக்கு பணிக்கப்பட்ட வேலை.

சீனாவிலிருந்து ஐரோப்பாவிற்கு கண்டங்களை இணைக்கும் ரயில்பாதை என்ற கருத்தின் அடிப்படையில் பெர்டின்ண்ட் பல கட்டுரைகளை எழுதியிருக்கிறார்.

அதில், சீடென்ஸ்ட்ராப், பட்டுப் பாதை என்ற வார்த்தைப் பிரயோகத்தை அவர் முதன்முதலாக அறிமுகப்படுத்தினார். ஆனால், அவர் கூறிய கருத்துக்கள் அந்த சமயத்தில் பெரிதாக எடுத்துக் கொள்ளப்படவில்லை. 1920—களில் அவரது மாணவர்களின் ஒருவர் இந்தத் திட்டத்தை முன்னெடுத்தார்.

ஸ்வென் ஹெடின், ஸ்வீடன் ஆராய்ச்சியாளர். இவர் பிரபலமானவர்.




ஜெர்மன் மற்றும் சீன அரசுகளுடன் இணைந்து பணிபுரிந்த இவர் ஒரு விமானி. சீனாவிற்கான விமானப் பாதை ஒன்றையும், சாலை வழி ஒன்றையும் ஸ்வென் ஹெடின் திட்டமிட்டார். 'பட்டுப் பாதை' என்று இந்த புதிய வழித்தடங்களை சந்தைப்படுத்தினார்.

## ஐரோப்பாவுக்கு மாற்று

சீனாவில், பட்டுச்சாலை என்ற பதத்தை சில கல்வி சஞ்சிகைகள் அவ்வப்போது பயன்படுத்தி வந்தன. அதன்பிறகு, 1950களில், தங்களுடைய அண்டை நாட்டினர் உடனான உரையாடல்களில் சீனர்கள் இந்த வார்த்தையை பயன்படுத்தத் தொடங்கினார்கள். மேற்கத்திய சக்திகளுக்கு மாற்றாக பயன்படுத்த பட்டுப் பாதைத் திட்டம் சீனாவுக்கு உதவியது.

தற்போதும் அதே எண்ணம் மீண்டும் வெளிப்படுகிறது. கடந்த சில வாரங்களுக்கு முன்னர், சர்வதேச அளவிலான ஒரு கூட்டத்தில் உரையாற்றிய சீன அதிபர் ஷி ஜின்பிங், பட்டுப் பாதை திட்டம் பற்றி சீனா மற்றும் உலக வங்கி அதிகாரிகள் ஆலோசித்து வருவதை கோடிட்டுக் காட்டினார்.



பட்டுப் பாதை என்பது இனிமேல் ஒரு முத்திரைச் சொல்லாக மட்டுமே இல்லாமல், சீனாவின் மையக் கொள்கையாகவும், முன்னணிக் கொள்கையாகவும் இருக்கும்.

## சீனாவின் ஆசியக் கனவு

அடுத்த நிபுணத்துவம் கொண்ட சாட்சியாக நாம் எடுத்துக் கொள்ளும் புத்தகம் ‘சீனாவின் ஆசியக் கனவு’ ஆசியா முழுவதும் பயணம் செய்திருக்கும் கஜகஸ்தானின் அல்மட்டியின் மாணவரான டாம் மில்லெர் எழுதிய புத்தகம் அது. பட்டுப் பாதையில் சீனப் படைவீரர்கள் அணிவகுத்து நடப்பதை யாரும் பார்ப்பது சாத்தியமற்றது என்று டாம் மில்லெர் கூறுகிறார்.




அனைத்து நாடுகளுக்கும் பயனளிக்கும் விதத்தில் இந்தப் பட்டுப் பாதை திட்டம் செயல்படுத்துவதாக சீனா சொல்கிறது. ஆனால் இதுபற்றி டாம் மில்லெர் உறுதி கூறவில்லை. அந்தத் திட்டத்தின் பெயரைச் சொல்லி, மற்ற நாடுகளுக்கு சீனா பணம் கொடுக்கும்போது, அதை வட்டியும் முதலுமாக எடுக்கத்தானே பார்க்கும் என்று அவர் கேள்வி எழுப்புகிறார்.

சீனாவின் தென்பகுதியில் இருக்கும் மலைப்பிராந்திய நாடான லாவோஸில் மக்கள் தொகை குறைவாக இருந்தாலும் கூட, அது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 10 பில்லியன் டாலர்கள் அளவுக்கு பங்களிப்பதை அவர் சுட்டிக்காட்டுகிறார்.

லாவோஸ் நாட்டு அரசுடன் இணைந்து, அந்த நாட்டின் ஊடாக செல்லும் ரயில் திட்டத்தை உருவாக்கும் முயற்சியில் சீனா ஈடுபட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்கு ஏழு பில்லியன் டாலர்கள் செலவாகலாம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது; இது லாவோஸின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் சுமார் மூன்றில் இரண்டு பகுதி. லாவோஸ் இதை எப்படி திருப்பச் செலுத்தும்?

## மிக மிக மெதுவாக?

தனது இயற்கை வளங்களிலிருந்து மெதுவாக திருப்பச் செலுத்த தொடங்குவதே நடைமுறை வழக்கம். எனவே, இந்த ரயில் திட்டம், லாவோஸில் இருக்கும் விலை மதிப்புமிக்க இயற்கை வளங்களை சீனாவிற்கு கொண்டுச் செல்லும் ஒரு ‘கன்வேயர் பெல்ட்’ ஆக பயன்படும்.

இந்தக் கோணத்தில் ஆராயும் டாம் மில்லெர்,


தேவி!
வானுலகில், பூவுலகில், வேறெங்கும்
தேடினாலும் கிடைக்காத
indian express foods
இட்லி / தோசை மா
இலண்டனில் மட்டுமே கிடைக்கும்
indian express foods
+44 20 8133 5144
+44 7878 89 68 37



சீனாவின் முதலீட்டால் பிற நாடுகள் உடனடி ஊக்கம் பெற்றாலும், நீண்டகால அடிப்படையில் அவை பாதிப்பை சந்திக்க நேரிடும் என்கிறார்.

அண்டை நாடுகளில் பெரிய அளவிலான முதலீடுகளை செய்யும் சீனா, துறைமுகங்கள், சாலைகள், ரயில்பாதைகள் மூலம் அவற்றை தன்னுடன் இணைத்துக்கொள்ளும்.

அடிப்படையில், பட்டவர்த்தனமான லஞ்சம் என்றே இதனைச் சொல்லலாம்.

## பாகிஸ்தானுக்கு ஏன் உதவுகிறது?

சாலைகள், ரயில்பாதை, மின் தொகுப்பு, வேளாண் மேம்பாடு என்று பாகிஸ்தானுக்கு சீனா செய்யும் உதவிகளுக்கு பதிலாக, எல்லை தாண்டி வளர்ந்து வரும் இஸ்லாமிய பயங்கரவாதத்தின் மீது நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று சீனா விரும்புவதாக டாம் மில்லெர் கூறுகிறார்.

இமயமலையில், இந்தியா — சீனா இடையே உள்ள நாது லா கணவாய். முந்தைய பட்டுப்பாதையின் அங்கமாக விளங்கியது. ஆசிய நாடுகள் முழுவதிலும் இதுபோன்ற ஒப்பந்தங்கள் ஏற்படும்.

கிர்கிஸ்தானோ, தஜகிஸ்தானோ, அங்கு மின் தொகுப்பு அமைப்பை நிறுவியிருப்பதே சீனா. அங்கு தனது கண்காணிப்பை பலப்படுத்த உதவியிருக்கிறது. அதேபோல் சீனாவின் உதவியைப் பெற்ற எந்தவொரு நாடாக இருந்தாலும், சீனாவுடன் நெருக்கமாக இருக்கமுடியாது என்று மறுக்கமுடியுமா?




அண்மை ஆண்டுகளில் கட்டமைப்புத்துறைக்காக சீன முதலீடுகளை பெற்ற கம்போடியாவை டாம் மில்லெர் சுட்டிக்காட்டுகிறார். தென்சீனக் கடலில் ஏற்பட்டிருக்கும் பதற்றம் குறித்து சீனாவை விமர்சிக்க முடியாமல் இருக்கும் கம்போடியாவுக்கு பிற நாடுகள் அழுத்தம் கொடுக்கின்றன.

இந்தியா எப்படிப் பார்க்கிறது?

சீனாவின் ஒப்பந்தங்களில் சில ஆசிய நாடுகளில் கையெழுத்திட்டால், பல நாடுகள் கையெழுத்திடவில்லை.

இதில் இருந்து விலகியிருக்கும் நாடுகள், குறிப்பாக இந்தியா, சீனாவின் இந்தத் திட்டத்தை பொருளாதார கண்ணோட்டத்தில் பார்க்கவில்லை. ஆனால், ஆசியப் பிராந்தியத்தைக் கட்டுப்படுத்துவதற்கு அதிலும் குறிப்பாக, இந்தியப் பெருங்கடலை கட்டுப்படுத்தும் ஒரு கண்துடைப்பு நடவடிக்கையாக பட்டுப் பாதைத் திட்டத்தை இந்தியா உட்பட பிற நாடுகள் பார்க்கின்றன.

இந்த நோக்கத்திலேயே, பாகிஸ்தான், மியான்மர், இலங்கை போன்ற நாடுகளில் சீனா முதலீடுகளை செய்கிறது. ஆனால் இந்தியர்கள் தற்போதும் இவற்றை, இந்தியாவை சுற்றிவளைக்கும் ராணுவத் தளங்களை கொண்ட 'முத்துச்சரம்' என்று கருதுகின்றனர்.

சீனாவுடன் பிராந்தியம் தொடர்பான மோதல்களை கொண்டுள்ள இந்தியா, அதன் உள்நோக்கங்கள் மீது அவநம்பிக்கைக் கொண்டுள்ளது.


தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
புத்தாண்டு
வாழ்த்துக்கள் !
இனிய தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்து


# ஏன் வேண்டும்?

# அழிவுப்

## போரும் மனித வாழ்க்கையும்

சாதாரண வாழ்க்கை வாழும் நாம் சாதாரணமாகவே நம் வீட்டில் உள்ளவர்களுடனோ, நண்பர்களுடனோ சண்டையோ, சச்சரவிலோ ஈடுபட்டு விட்டோமென்றால் அன்றைய நாள் முழுக்க நமக்கு மனசில் ஒரு வருத்தம் இருந்து கொண்டே இருக்கும், இது உண்மைதானே?

ஆனால் யோசித்து பாருங்கள் இந்த உலகம்




தோன்றிய நாள் முதல் நம் மனித இனம் பல்வேறு போர்களை நடத்திக்கொண்டே இருக்கிறது. இந்த கட்டுரை படித்துக்கொண்டிருக்கும் போதே எங்கோ ஒரு இடத்தில் ஒரு வெடி விபத்தோ அல்லது, மற்ற நாட்டுடன் சண்டைகளோ, இல்லை உள் நாட்டிலேயே கலவரங்களோ நடந்து கொண்டேதான் இருக்கிறது. அவ்வாறு சண்டையிட்டு கொள்பவர்கள் அனைவருமே இதை விரும்பி செய்கிறார்களா, இல்லையா என்பது நம் கேள்வியன்று? அதன் காரண




காரியங்களை பற்றி ஆராய்ச்சி செய்வதும் இக்கட்டுரையின் நோக்கம் அன்று.. மனித வாழ்க்கை என்பது நாகரிக வளர்ச்சியோடு "போரிடுதல்" என்பது சார்ந்தே இருந்திருக்கின்றது.

## மனித இனம்

மனித இனம் இயற்கையுடன் வாழ்ந்த காலத்தில் மனித வாழ்க்கைக்காக வேட்டையாடியும், பழம் கொட்டைகளை உண்டும் வாழ்ந்து வந்தார்கள். இவைகள் இயற்கையிலேயே கிடைப்பவைகளாக இருந்தமையால் பெரும் போராட்ட களமாக வாழ்க்கை இருந்திருக்க வாய்ப்பு இல்லை. அதன் பின்னர் அவன் தன் இடத்தை விட்டு நகர்ந்து உணவு தேடலில் ஈடுபடும் போதுதான் இந்த பிரச்சினை ஆரம்பிக் கிறது எனலாம்.

ஆனால் முதலில் மனிதன் தன் இடம் பெயர்தல் வாழ்க்கையில் ஆற்றோராமாக தன் இருப்பிடத்தை அமைத்துக்கொள்கிறான். அப்பொழுது கூட வாழ்விடம் அமைப்பது என்பது அவனுக்கு தெரியாமல்தான் இருந்திருக்கிறது. கிடைக்கும் பாறை சந்துகளிலும், பொந்துகளிலுமே வாழ்ந்திருக்கிறான். இப்படி அமைந்திருப்பதால்தான், அவனால் இடம் விட்டு இடம் நகர ஏதுவாக இருந்திருக்கிறது. அதற்கு பின் அவன் தாங்கள் நிரந்தரமாக இருக்க வசிப்பிடங்களை ஏற்படுத்திக்கொள்ள நினைக்கிறான். அப்பொழுது அவனுக்கு தேவையான உணவுகளுக்காகவும், தங்குவதற்காகவும் புகலிடங்களை ஏற்படுத்தி கொள்கிறான். அவர்கள் கூட்டமாக இருப்பதால் ஒரு சமூகமாக அமைந்து விடுகிறது. இந்த சமூகத்தின் பாதுக்காப்புக்கு சில ஏற்பாடுகளை செய்ய தொடங்குகிறான். அதனால்தான் பெரிய பெரிய அரண்கள் அமைக்க தொடங்குகிறார்கள் அப்படிபட்ட அரண்களை ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள். அவைகளின் காலம் 7000 வருடங்கள் என்று மதிப்பிட்டிருக்கிறார்கள்


இவர்களின் வாழ்விடங்கள் மரங்களாலும்,

# பாதை

ஸ். தாமோதரன்

மண்ணாலும் குடிசை கட்டி வாழ்ந்த காலம் கி.மு.5700 என்று கூறுகிறார்கள். இதன் மூலம் அவர்களின் மனித பெருக்கமும் தொடங்கியிருக்கலாம்.

இப்படி ஒவ்வொரு குழுக்களாக தொடங்கி அது ஒரு சமூகமாக மாறும்போது அதாவது கற்களை, எலும்புகளை கொண்டு ஆயுதங்கள் தயாரித்து கொண்டு ) தங்களை பாதுகாத்து கொள்ளவோ, அல்லது எதிர்க்குழுக்களின் பொருட்களை களவாடவோ அவர்கள் மீது தாக்குதல்களை ஆரம்பிக்கிறார்கள். இது "ஆரம்ப கால போர்"




என்று வைத்துக்கொள்ளலாம்.

அடுத்ததாக நிலைத்த வாழ்க்கைக்கு வேட்டையாடுதலோ, அல்லது காய் கனிகள் உண்பதிலோ அல்லாமல் "விவசாயம்" என்னும் தொழிலை ஆரம்பிக்கிறார்கள். விவசாயம் ஆரம்பிக்கபடும் முன்னரே கால்நடைகளை "மேய்த்தல்" தொழில் தொடங்கி விட்டது..சில காட்டு விலங்குகளை பழக்கி மனித இனத்தோடு ஒத்து வாழ அவைகளை பழக்கி விடுகிறான். இதன் காரணமாகவும் இனங்களுக்குள் அல்லது சமூகத்துக்குள் சண்டை ஏற்பட வாய்ப்பு இருந்திருக்கிறது. இந்த சண்டைகள் பெரும் மனித அழிவை ஏற்படுத்தும் அளவுக்கும் இருந்திருக்காது என்பது திண்ணம். காரணாம் அப்பொழுது எந்த உலோகங்களும் மனிதர்களால் கண்டு பிடிக்கபடாமல் இருந்தது.

கி.மு.3000ல் செம்பின்





கண்டு பிடிப்பும், கி.மு.1000 ல் இரும்பின் கண்டு பிடிப்பும் மனித இனத்திற்கு பெரிய கண்டு பிடிப்பாக ஆயுதங்கள் உருவாக்க காரணமாக இருந்தது. இதனால் மனித வாழ்க்கையில் பெரும் புரட்சி மாற்றம் ஏற்பட்டது. இவர்கள் சேர்ந்திருக்கும் கூட்டம் ஒரு அரசுவாக செயல்பட்டன. அவற்றிற்கு ஒரு தலைமை உருவாக்கப்பட்டது. மாற்றார் நிலத்தை ஆக்ரமித்தலும், அவர்கள் கூட்டத்தை வசப்படுத்த யுத்தங்களும் ஆரம்பித்தன.

இப்படி குழுக்களாக பிரிந்து அவைகளுக்கு ஒரு தலைமை ஏற்பட்டு அவர்களை மஹாராஜாவாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவர்களின் வாரிசு தோன்றல்களும் வளர ஆர,ம்பித்தன. இப்பொழுது இரும்பின் தோற்றமும், செம்பின் தோற்றமும் பல்வேறு ஆயுதங்களை உற்பத்தி செய்வதன் மூலம்

தங்கள் அரசை காப்பாற்றிக்கொள்ளவும், மற்ற அரசுகளை தாக்கி அழிக்கவும் ஆரம்பித்தனர். இப்படி யுத்தங்களும் மனித வாழ்க்கை நாகரிகத்தில் பரிணாம வளர்ச்சி பெற்றது.

இப்படி குழுக்களுக்குள் வரும் மோதலை தவிர்த்து குழுக்களுக்குள்ளே ஏற்படும் சண்டை சச்சரவுகளை தீர்க்க நீதி நிர்வாகம் போன்றவைகள் மெல்ல தோன்ற ஆரம்பித்தன. இவைகளுக்கு தலைமை ஏற்க ஒரு சில தகுதிகள் ஏற்படுத்தப்பட்டு அந்த இடத்துக்கு வர சில




போராட்டங்களும் தேவைப்பட்டன. மனித வளர்ச்சி நாகரிக வழ்க்கையை நோக்கி மெல்ல மெல்ல முன்னேறலாயிற்று.

இப்படி ஆரம்பித்த குழுக்கள் அரசுகளாகி அவைகளுக்குள் தலைமை ஏற்படுத்தி அவர்கள் மற்ற அரசுகளை மண்டியிட வைக்க போர்களை நடத்த வேண்டிய சூழ்நிலைக்கு வந்தார்கள். அப்படி வந்தவர்களில் முக்கியமானவர்கள்

## மாவீரன் அலெக்சாண்டர் (கி.மு. 356–323)




இளம் வயதிலேயே உலகம் முழுவதையும் கைப்பற்றி ஆட்சி புரிவேன் என்ற வேட்கையோடு மாசிடோனியாவிலிருந்து படையுடன் புறப்பட்டான். மாசிடோனியா கிரேக்க நாட்டின் வட புறத்தில் இருந்தது., இவன் தொடர்ச்சியாக எகிப்து, பாபிலோனியா போன்ற நாடுகளை கைப்பற்றி ஆசியாவுக்குள் நுழைந்தான். சிந்து நதியை கடந்து இந்திய பஞ்சாப் நகரை கைப்பற்ற முயன்றான். அவன் வைத்திருந்த குதிரைப்படையே அவனை பெரும் வெற்றி பெற வைத்தன. ஆனால் இந்தியாவில் இருந்த யானைப்படையால் அவனது வெற்றி என்பது சற்று கேள்விக்குறியாயிற்று. அதனால் அவனது வீர்ர்களின் மன சோர்வும், தன் நாட்டுக்கு திரும்ப வேண்டும் என்ற அவர்களின் எண்ணமும் அலெக்சாண்டரை தன் நாட்டுக்கு திரும்ப வைத்தது. பாபிலோனை அடைந்த வேளை கி,மு,323 ல் நோயுற்று இறந்தான்.

## செங்கிஸ்கான்

அடுத்ததாக மங்கோலியத்தலைவன் செங்கிஸ்கான் 1157—1227) குதிரை படையுடன் சீனாவின் ஒரு பகுதி, துருக்கி, ஆப்கானிஸ்தான், உள்பட தென் கிழக்கு ஐரோப்பாவையும் ஆக்ரமித்து ஆண்டான். இவனின் இவ்வளவு நீண்ட தூர பயண வெற்றி கண்டிப்பாய் அவனது குதிரைப்படை மூலமே சாதித்து இருக்க முடியும். ஏனெனில் இவனது எண்ணற்ற வெற்றி பயணம் மிக நீண்ட தொலைவு கொண்ட்தாய் இருக்கிறது.

## சிலுவை யுத்தம்

முஸ்லீம்களிடமிருந்து கிறிஸ்துவ நிலத்தை மீட்க மேற்கு ஐரோப்பியர்கள் நடத்திய சிலுவை யுத்தம் இரண்டு நூற்றாண்டுகள் நீடித்த போதும் அவை தொடர்ந்து நடை பெறவில்லை. இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் 1095 ம் ஆண்டில் இருந்து விட்டு விட்டு நடந்தன.

நாகரிக வளர்ச்சியினாலும், கல்வியினால் ஏற்பட்ட மாற்றங்களாலும் பல்வேறு நாடுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகள் தோன்றலாயிற்று. அதே போல் மனித அடிமைத்தனமும் வேர் விட்டு வளர்ந்தன.தேர்ந்தெடுத்த அரசுகள் தோன்றினாலும், ஒரு சில நாடுகளில் தேர்ந்தெடுத்தவர்களின் நாடு பிடிக்கும் ஆசையினால் பெரும் போர்கள் தோன்ற காரணமாயிற்று.. இவற்றிற்கெல்லாம் முன்னோடியாக ஐரோப்பாவில் நெப்போலியன் நடத்திய யுத்தமாகும். இந்த யுத்தம் 1815 ம் ஆண்டு முடிவுக்கு வந்தது.. அதற்கு பின் 1914 வரை அங்கங்கு பல நாடுகளுக் கிடையில் சிறு சிறு யுத்தங்கள் நடந்து கொண்டுதான் இருந்தன.

அதன் பின் உலகையே திரும்பி பார்க்க வைத்த இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட இரு உலகப்போர்களை உதாரணமாக கொள்ளலாம்.

முதலாவது உலகப்போர் 1914— 1918 வரை நடந்து முடிந்தது, இந்த போருக்கு பின் , இப்படிப்பட்ட போர்கள் இனிமேல் ஏற்படா வண்ணம் தடுக்க சர்வதேச சங்கம் (League of Nations) பிரெஞ்சு நாட்டில் அமைக்கப்பட்டது.. எனினும் இச்சங்கத்தால் இரண்டாம் உலகப்போர் நடை பெற்றதை தடுக்க முடியவில்லை.

இரண்டாம் உலகப்போர் —1939—1945 வரை நடந்தது. இது மிக கொடூரமாக நடைபெற்றது. இது வரை போரிடுவதற்கு உபயோகமாய் இருந்த கனரக ஆயுதங்கள் வளர் நிலை மாறி அணு ஆயுதமாக உரு கொண்டு இந்த போர் நடைபெற்றது. 1945 ஆகஸ்டு 6 ல் அமெரிக்காவால் ஜப்பானில் "ஹிரோசிமா" நகரில் போடப்பட்ட அணு குண்டால் 90,000 பேர் உடனே இறந்தனர். 1,45,000 பேர் அணுக்கதிரால் பாதிக்கப்பட்டனர். மீண்டும் மூன்று நாட்கள் கழித்து ஆகஸ்டு 9ல் ஜப்பானில் "நாகசாகி" என்னும் நகரில் போடப்பட்ட அணு குண்டால் நகரே அழிந்தது. 40,000 பேர் சம்பவ இடத்திலேயே இறந்தனர். 70,000 பேர் அணு கதி வீச்சால் பாதிக்கப் பட்டனர். இவைகள் தவிர இந்த போரினால் கொல்லப் பட்டவர்களின் எண்ணிக்கை சுமார் ஏழு கோடிக்கு மேல் இருக்கும், ரஷ்யா,அமெரிக்கா பிரெஞ்சு, ஜெர்மனி, போன்ற நாட்டவர்கள் அதிகம் பேர் மாண்டு போயினர். பல லட்சக்கணக்கான யூதர்கள் சித்திரவதை செய்யப்பட்டு மரணிக்கப்பட்டனர்.

இந்த இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட இரு உலகப்போர்களிலும் அறிவியல் வளர்ச்சியின் காரணமாக உருவாக்கப்பட்ட ராக்கெட் லாஞ் சர்கள், ஜெட் விமானக்க்ள், மற்றும் பல்வேறு உபகரணிகளும் இந்த யுத்த்த்தில் ஈடுபடுத்தபட்டன.

இந்த யுத்த்த்தின் அழிவை மனித குலம் பார்த்து இனிமேல் இப்படிப்பட்ட போர்கள் நடக்க கூடாது என்ற எண்ணத்தில் ஐக்கிய நாடுகள் சபை அமைக்கப்பட்டது. இவற்றில் சுமார் இரு நூறுக்கும் உட்பட்ட நாடுகள் உறுப்பினர்களாக உள்ளனர். ஒரு சில நாடுகள் ஐ.நா. சபையின் அறிவிறுத்தலையும் மீறி போர் நடத்திக்கொண்டிருந்தாலும் பெரிய அளவில் போர்கள் ஏற்படா வண்ணம் தடுத்துக்கொள்ள ஐ.நா.சபை முடிந்த அளவில் முயன்று கொண்டுதான் உள்ளது.

இந்தியாவில் பேரழிவுக்கு உட்பட்ட போர்கள் என்று பார்த்தால் அசோக சக்கரவர்த்தி காலத்தில் நடைபெற்ற "கலிங்க போர்" எனலாம். வெறும் வில், வாள், வேல், குதிரைப்படை, யானைப்படை, காலாட்படை இவைகள் கொண்டே நடந்ததென்றாலும் நம் நாட்டை பொருத்தவரை அது பேரழிவுக்கான போர்தான். இதன் மூலம் இந்த போரினால் அசோகர் புத்த மத்தை தழுவி, அதை வளர்ச்சி அடைய செய்தார். இதனால் "கொல்லாமை" என்னும் அத்தியாயம் தொடங்கப்பெற்றது.

மற்றபடி முகலாயர் படையெடுப்பு, ஆங்கிலேயர் படையெடுப்பு, போன்ற படையெடுப்புக்கள் நடைபெற்று இந்தியாவும் ரத்தக்களறியான சரித்திரம் உண்டு.

## முடிவுரையை நோக்கி

மானிடவியல் அகழ்வாய்வு, சமூகவியல், வரலாறு சார்ந்த ஆய்வில் இன்றும் உறுதிப்படுத்தி கூற முடியாத சில நிகழ்வுகள் உள்ளன. யுத்தம் என்றால் என்ன? இந்த பகைமை, போராட்டம் இவைகள் மனித இயற்கையாக வாழ்ந்த போது ஏற்பட்டதா? இல்லை நிரந்தரமாக ஒரு இடத்தில் நிலை பெற்ற போது யுத்தங்கள் ஏற்பட்டதா? அல்லது அரசு,நகரம் போன்றவைகள் தோன்றியபோது ஏற்பட்டதா? ஆரம்பிக்கப்பட்ட யுத்தம் பல்வேறு வகைப்பாடுகளில் வளர்ச்சி பெற்று இன்று வரை மனித இனத்தோடு பின்னி பிணைந்து வளர்ந்து கொண்டிருக்கிறது என்பது மட்டும் உண்மை.




இன்றும் சிரியா, மற்றும் சூடான்,நைஜீரியா போன்ற ஆப்பிரிக்க நாடுகளிலும், மற்றும் சில அரபு நாடுகளிலும் போர்கள் நடந்து கொண்டுதான் உள்ளன. சில நாடுகளில் உள் நாட்டு போர்களும் நடந்து கொண்டுதான் இருக்கின்றன.

மீண்டும் தொடங்கிய இடத்துக்கே வருகிறேன். "போர்" எங்கு தோன்றி நடந்தாலும், மனித குலம் தோன்றியது முதல் என்று வைத்துக்கொண்டாலும், இன்று வரை பாதிப்படைவது அங்கு வாழ்ந்து கொண்டிருக்கும் சாதாரண மக்களே. அங்கு வாழ்ந்து கொண்டிருக்கும் ஆண்கள், பெண்கள், குழந்தைகள், இவர்கள் சொந்த நாட்டிலே, இல்லை என்றால் பக்கத்து நாடுகளிலோ அகதிகளாக இருப்பது இன்று வரை மாறவே இல்லை.

பார்வை : இந்த கட்டுரை திரு கணேசலிங்கன் அவர்களின் "தாயின் குரல்" என்னும் நாவலில் "நாவல் பற்றிய சில குறிப்புகள்" என்ற முன்னுரையில் இருந்து எடுத்துள்ளேன். போர்களின் காரண காரியங்களையும் சொல்லியிருக்கிறார். நம் கட்டுரைக்கு அவைகள் எடுத்துக்கொள்ளப்படாமல்"போர்" மனித வாழ்க்கையில் எங்கனம் பின்னி பிணைந்துள்ளது என்பது மட்டும் சொல்லப்பட்டுள்ளது.

# தமிழே

## மின் நூலகம் தமிழுக்கு மகுடம்!

அண்ணா பல்கலைக்கழகத்தில் 2003—ஆம் ஆண்டு நடைபெற்ற ஆறாவது உலகத் தமிழ் இணைய மாநாட்டிற்கு முன்னாள் குடியரசு தலைவர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் மின் நூலகம் அமைப்பது குறித்து கீழ்க்கண்டுள்ள கருத்துகளைக் குறிப்பிட்டார்.




நமது தமிழ் மொழியை வளர்ப்பது என்பது பழம்பெருமை பேசுவது அல்ல. 21—ஆம் நூற்றாண்டில் ஒரு மொழியின் தேவை என்பதைக் கண்டறிந்து அதனை 21—ஆம் நூற்றாண்டின் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நிறைவேற்ற வேண்டும். ஆங்கிலத்தில் தேடுதல் சாதனம் வழியாக உலகின் அறிவுச் செல்வங்கள் அனைத்தையும் நாம் தெரிந்து கொள்கிறோம்.




இந்த வாய்ப்பு தமிழ் மொழிக்குக் கிடைக்குமாறு செய்யவேண்டும். அதற்கு நவீன முன்மாதிரியான தமிழ் மின்நூலகத்தை உருவாக்க வேண்டும். அப்போது உலகெங்கிலும் உள்ள தமிழர்களுக்கு உலக அறிவுச் செல்வங்கள் அனைத்தும் அவரவர்கள் வீடு தேடிச் சென்றடையும். தமிழ் மொழிக்கு உலக மொழி என்ற பெருமை கிடைக்கும். இதுவே தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு நாம் செய்யத்தக்க மிகப் பெரிய தொண்டாகும்.

கணினியிலிருந்து இணைய இணைப்பு மூலமாக எந்தவிதமான தகவல்களையும், விஞ்ஞான நிகழ்ச்சிகளையும், தொழில்நுட்ப அறிவுத்தாள்களையும், எண்ணக் களஞ் சியங்களையும் தேடுதல் சாதனம் மூலமாக ஒரு சில விநாடிகளில் ஆங்கிலத்தில் அறிய முடிகிறது.

ஆங்கிலத்தில் கிடைக்கக்கூடிய தகவல்கள் ஆங்கிலம் தவிர சில மேற்கத்திய மொழிகளான பிரெஞ்சு, ஜெர்மன், இத்தாலி, போர்ச்சுகீஸ், ரஷ்யன் ஆகியவற்றில் மட்டுமே இயந்திர மொழிபெயர்ப்பு மூலம் கிடைக்கிறது.

நாம் எந்த மொழியில் தரவுத் தளம் தயாரிக்கிறோமோ அதே மொழியில்தான் நாம் தகவலைப் பெற முடியும். இதே போல், ஆங்கிலத்திலும் மற்ற மொழிகளிலும் தகவல் களஞ் சியங்கள் கிடைப்பதைப் போல் தமிழர்களுக்குத் தமிழிலேயே கிடைக்கவேண்டும். அதற்கு, தமிழ் சார்ந்த இணைய மென்பொருள்களை தமிழ்

# தமிழே

மொழியில் ஒருங்குறி மூலமாக வடிவமைக்க வேண்டும்.

சிறந்த நூலகர் என இந்திய அரசின் தேசிய விருது பெற்றவரும், உலகின் 10 சிறந்த நூலகர்களில் ஒருவர் என பாராட்டப் பெற்று அனைத்து நாட்டு விருதும் பெற்றவருமான பாலம் கல்யாணசுந்தரம் உண்மையான மக்கள் தொண்டர் என்பது




அனைவரும் அறிந்ததே. என் கடன் பணி செய்து கிடப்பதே என்ற நாவுக்கரசரின் அடியொற்றி வாழ்பவர். இந்தத் திட்டத்தை நிறைவேற்ற ஆவன செய்ய வேண்டும் என்ற கோரிக்கையையும், அதற்கான ஒரு திட்ட வரைவையும், அப்போதைய முதல்வர் ஜெயலலிதாவிடம் நேரில் அளித்து இந்தத் திட்டத்தின் பயன்பாடு பற்றியும் விளக்கிக் கூறினார். அவரது வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு அப்போதைய முதல்வர் ஜெயலலிதா, ஆசியாவிலேயே சிறந்த மின் நூலகம் அமைப்பது தொடர்பான சிறப்புமிக்க தீர்மானத்தைத் தமிழக சட்டப்பேரவையில் 27—

## பழ.நெடுமாறன்

09—2005—இல் முன்மொழிந்து நிறைவேற்றினார்.

ஆனால், இந்தத் திட்டத்தை நிறைவேற்ற உலகில் உள்ள அனைத்துத் தகவல்களையும் கொண்ட தகவல் தளத்தை தமிழில் கொண்டு வரவேண்டும். இதற்கு பிற மொழிகளில்




உள்ள தகவல்களை மொழிபெயர்க்க, தளப்படுத்தத் தேவையான மென்பொருள்களை உருவாக்கவும், இந்தப் பணி தொய்வின்றிச் செயல்படுத்தப்பட நிதி ஒதுக்கீடும், நிறுவனப்படுத்துதலும் அவசியமாகும். ஆனால், ஆட்சி மாற்றம் ஏற்பட்டபோது இந்தத் திட்டம் கிடப்பில் போடப்பட்டது.

பிறகு, மறுமுறையும் முதல்வர் பொறுப்பை ஜெயலலிதா ஏற்றபோது, இந்தத் திட்டம் புத்துயிர் பெற்றது. 2014—ஆம் ஆண்டில் உலகத்தரம் வாய்ந்த அளவில் இந்த மின் நூலகத்தை சென்னையில் அமைப்பது என முடிவு செய்தார். அதற்கு முதல் கட்டமாக கல்விப் பூங்கா ஒன்றை உருவாக்கவும், அதில் நடுநாயகமாக மின் நூலகம் அமைக்கவும் அவர் முடிவு செய்தார்.

பல்வேறு காரணங்களினால் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுவது தாமதமாயிற்று.

இந்தத் திட்டத்தை அரசோ, பெரிய நிறுவனமோ, செல்வந்தர்களோதான் நிறைவேற்ற முடியும். இந்தத் திட்டத்தை அரசு தொடங்கினால், அதற்குத் தேவையான உதவிகளை இலவசமாக அளிக்க, எச்.சி.எல்., மைக்ரோ சாஃப்ட் ஆகிய நிறுவனங்கள் முன்வந்துள்ளன என்று பாலம் கல்யாணசுந்தரம்



கூறுகிறார். இந்த உதவியைப் பயன்படுத்திக் கொள்ள தமிழக அரசு முன்வரவேண்டும்.

ஏற்கெனவே, தமிழ் இணையக் கல்விக் கழகம் ஒரு மின்நூலகத்தை ஏற்படுத்தி, சங்க காலம் முதல் தற்காலம் வரையுள்ள நூல்கள், அகராதிகள், கலைக்களஞ்சியங்கள், கலைச் சொற்கள், சுவடிக் காட்சியகம், பண்பாட்டுக் காட்சியகம் போன்ற பகுதிகளுடன் செய ல்பட்டு வருகிறது.

தமிழ் இணைய கல்விக் கழகத்தின் சார்பில் ரூ.12.26 லட்சம் செலவில் மேம்படுத் தப்பட்ட ஒரு புதிய இணையதளத்தை 12—10—17 அன்று முதல்வர் எடப்பாடி பழனிசாமி தொடங்கி வைத்தார். இதில் மாணவர்கள், தமிழ் ஆய்வாளர்கள் மற்றும் மக்கள் பயன்பெறும் வகையில் கல்வித் திட்டங்கள், நூலகம், கணினித் தமிழ் ஆய்வு உள்ளிட்ட விவரங்கள் கிடைக்கும். மேலும், தமிழ் இணைய கல்விக் கழகத்தால் ரூ.59 லட்சத்தில் உருவாக்கப்




பட்டுள்ள தமிழ் இணையம் மென்பொருள்—2 என்பதையும் முதல்வர் தொடங்கி வைத்தார். இதுதவிர தமிழக அரசின் பிற துறைகளில் ஆவணப்படுத்தப்பட்டவற்றை தொகுத்து முதல் கட்டமாக ரூ. 20 லட்சத்தில் உருவாக்கப்பட்டுள்ள தகவல் ஆற்றுப்படை என்னும் இணையதளம், தமிழ் மின்உலகம் என்ற இணைய தளம் ஆகியவற்றையும் அவர் தொடங்கி வைத்தார்.

தற்போது தமிழ், தமிழர், தமிழ்மொழி, இலக்கியங்கள், கலைகள், தமிழ்நாட்டின் நிலவியல், வரலாற்றுச் சிறப்புமிக்க ஊர்கள், ஆறுகள், மலைகள், தமிழகத் திருவிழாக்கள், பண்டையப் பெயர்கள், தமிழக மரம், செடி, கொடி, விலங்கினங்கள், கோயில்கள், சிற்பங்கள் குறித்த புள்ளிவிவரங்கள் அனைத்தையும் தகவல் தளங்களாக உருவாக்க தமிழ்ப் பல்கலைக்கழகமும், தமிழ் இணையக் கல்விக் கழகமும் கூட்டாக முயன்று வருகின்றன. இதற்கென அரசு நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. மதுரைத் திட்டம் என்னும் தளம் அரிய பல தமிழ்நூல்கள், ஓலைச்சுவடிகள், படங்கள், ஒலிப்பதிவுகள் என தமிழில் மரபுச் செல்வங்களை இலவசமாகப் பயன்படுத்த வழி செய்துள்ளது.

அனைத்தும் முறையாக பட்டியலிடப்பட்டு தரவுகளாகப் பதிவு செய்யப்படவேண்டியது இன்றியமையாததாகும். மூலப் படைப்புகள் எவ்வளவு முதன்மை வாய்ந்ததோ, அதைப் போலவே மூலத் தரவுகளும் மிக முதன்மை வாய்ந்தவையாகும். தரவுகளும், அறிவார்ந்த ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட வேண்டும். இந்தத் தரவுகளைக் கொண்டே மேம்பட்ட உரைப்



பதிப்பாய்வு, இயற்கை மொழியாக்கம், மொழி வகைப்பாடு, வேர்ச்சொல், ஒப்பீட்டுப் பகுப்பாய்வு, மேம்பட்ட தேடல் போன்ற நவீன தொழில்நுட்ப ஆய்வு கருவிகளை உருவாக்க உதவிட வேண்டும். மொழி வளர்ச்சிக்கு இவை போன்ற தரவுகளும், அதற்கேற்ற கருவிகளும் மிக அவசியமாகும். மின்மயமாக்கப்பட்ட படைப்புகள், தரவுகள் ஆகியவற்றை உலகளாவிய அளவில் எவரும் தேடவும், மேற்கோள் காட்டவும், பதிவிறக்கம் செய்யவும் வழிவகை செய்யப்பட வேண்டும்.

தமிழ் இணைய கல்விக் கழகத்தின் இயக்குநர் 30—05—2012—இல் அரசுக்கு எழுதியுள்ள கடிதத்தில், மின்நூலகப் பணிகளில் அனுபவமுள்ள தமிழ் இணைய கல்விக் கழகத்தின் செயல்பாடுகளை விரிவுபடுத்தி இந்தத் திட்டத்தை நிறைவேற்றலாம். ஆனால், இதற்கு தமிழ் இணைய கல்விக் கழகம் ஒரு முழுமையான பல்கலைக் கழகமாக நிலை உயர்த்தப் படவேண்டும். அப்போதுதான், மின்நூலகப் பணிகளுக்கென ஒரு தனித் துறையை உருவாக்கி அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் ஒருங்கிணைத்து தமிழ் மின்நூலகத்தை உருவாக்கும் பணியை மேற்கொள்ள முடியும்.

அல்லது தமிழக அரசின் உயர் கல்வித் துறை, தகவல் தொழில்நுட்பவியல் துறை ஆகியவற்றின் கீழ் புதிதாக ஒரு நிறுவனத்தை உருவாக்கி அவற்றின் மூலம் செயல்படுத்தலாம். அல்லது இந்தப் பணியை நிறைவேற்ற தகுதிவாய்ந்த நிறுவனங்களையோ, தனியார் அமைப்பினரையோ கண்டறிந்து அவர்கள் மூலமும் இந்தத் திட்டத்தை நிறைவேற்றலாம். அதற்கு அரசு தேவையான நிதி ஆதரவை நல்கலாம் எனப் பரிந்துரைத்துள்ளார்.

எனவே, தமிழ் மின்நூலகம் அமைக்கும் இந்தத் திட்டத்திற்கு உதவ முன்வந்துள்ள தனியார் அளிக்கும் நிதி, தொழில்நுட்ப உதவி ஆகியவற்றை முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி பயன்படுத்திக் கொள்

வதோடு, இந்த நூலகத்தை உருவாக்க கணினிப் பொறியாளர்கள், பல்துறை அறிஞர்கள், நூலக அறிவியலாளர்கள், தமிழ் அறிஞர்கள், வரலாற்று ஆய்வாளர்கள் மற்றும் இந்தத் திட்டத்தோடு தொடர்புடைய அரசுத் துறைகளின் செயலாளர்கள் ஆகியோரை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டு உலகத் தமிழ் மின் நூலகத்தை அமைப்பதன் மூலம் நமது தமிழ் மொழியை உலக மொழியாக உயர்த்த முன்வருமாறு வேண்டுகிறேன்.

முன்னாள் முதல்வரின் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுவதன் மூலம் ஆசியாவிலேயே நவீன முன்மாதிரியான நூலகமாக இது அமையும்; உலகெங்கிலும் உள்ள தமிழர்கள் இதைப் பயன்படுத்த முடியும். தமிழகத்தில் சமூக, கல்வி, பொருளாதாரத் துறைகளில் விரைவான முன்னேற்றத்தை ஏற்படுத்தும்; உலக அறிவுக் களஞ்சியங்கள் அனைத்தையும் உடனுக்குடன் வீட்டிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்; படிக்காதவர்கள்கூட இந்த நூலகத்தைப் பயன்படுத்த முடியும். இந்த நூலகத்தின் மூலம் தொலைக்காட்சி, பத்திரிகைகள், செல்லிடப்பேசி, நூலகம், கணினி ஆகிய ஐந்தின் பயன்களையும் ஒருங்கே பெறலாம்.




தகவல் தொழில்நுட்பத் துறையில் தமிழ்நாடு மிக விரைவாக வளர்ச்சி பெற்று வருகிறது. அதன் உச்சகட்ட சாதனையாகவும், 21—ஆம் நூற்றாண்டில் இந்தியாவின் முதலாவது மின் நூலகமாகவும், தகவல் தொழில்நுட்பத் துறையில் ஒரு மைல்கல்லாகவும் இந்த நூலகம் திகழும். இந்த மின் நூலகத்தால் தமிழ் மொழிக்கு பன்னாட்டு மொழி என்ற பெருமை கிடைக்கும்;

அதனால் உலகெங்கிலும் தமிழ் ஒலிக்கும்; தமிழன் தலைநிமிர்வான்.

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!
என பாரதி கண்ட கனவை நனவாக்குவது தமிழக அரசின் தலையாய கடமையாகும்.



# சோழ ரகசியம்

## ஜெகதீஸ்வரன்

மும்முடிச் சோழப் பிரம்மராயர் நிதம்பசூதனியைப் பார்த்தார். அந்த தீப்பந்தங்களின் ஒளியில் அவளுடைய உக்கிர கோலம் அவருக்குள் உற்சாகம் தந்தது. "தாயே. இந்த சோழ தேசத்திற்கும், சோழ பரம்பரம்பரைக்கும் நீயே துணை. நீயே துணை" என்று வணங்கினார். உடனிருந்த மூன்று நபர்கள் "ஜெய நிதம்பசூதனி" என்று ஒன்றாக வணங்கினார்கள். காதில் குண்டலமும், கைகளில் காப்பும், கால்களில் வீரத்தண்டும், மார்பில் சன்னவீரமும், கழுத்தில் சிறு அட்டிகையும், இடையில் குறுவாள் பட்டையும் அணிந்த வீரன் எதிரே வந்தான். அவனுடைய நெற்றியில் நிதம்பசூதனியின் குங்குமப் பிரசாதம் விரவியிருந்தது. "வீரனே உன் பெயரென்ன?"

"அருண்மொழி"

"உடையார் ராஜராஜ சோழரின் பெயரா? தாயே.. நிதம்பசூதனி. நீயே துணை" என அவனை ஆரத்தழுவினார். "நீயே நம் சோழத் தேசத்திற்காக உயிர்துறக்கப் போகும் இறுதி மனிதனாக இருக்க வேண்டும்." என்று கூறினார் பிரம்மராயர்.

அன்னையின் முன் மண்டியிட்டான். அவன் கரத்தில் ஓர் கூரிய அரிவாள் தரப்பட, முடிந்த கூந்தலினை வலக்கையால் இறுகப்பற்றி, இடக்கையால் தலையை அரிந்துக் கொண்டான். அனைவரும் அவனை பரவசமாகப் பார்த்தனர். உயிர்த்துடிப்பு அடங்கும்வரை பிரம்மராயர் கண்களை மூடியபடியே இருந்தார். பிரம்மராயரை நீலன் அணுகினான். "அய்யனே, அரிகண்டம் நிறைவாய் நடந்தேறியது."




"நீலா.. உரிய முறையைச் செய், நடுகல்மட்டும் ஒருவாரம் பின் நடப்படட்டும். ஏராளமானப் பணிகள் இருக்கின்றன. நான் அரண்மனைக்குச் செல்கிறேன். வாழ்க சோழம். வாழ்க உடையார் சிறீ ராஜராஜர்"

சுற்றியிருந்தோர் "வாழ்க வாழ்க" என்றனர்.

***

ஏற்ற தருணம் வந்துவிட்டது. மும்முடிச்சோழப் பிரம்மராயர் கர்ஜித்தார். அவரது கர்ஜனையில் அருகில் கேட்டுக்கொண்டிருந்த ஏழு தலைமை படைவீரர்களும், ஒரு ஒற்றர் தலைவனும் சிலிர்த்தார்கள். ஒற்றை தீப்பந்தத்தில் அந்த நான்குகால் மண்டபம் கொஞ்சம் ஒளிப்பெற்றிருந்தது. திருமண் நெற்றியில் ஒளிர, இடையில் உறைவாளும், குறுவாளும் இருந்தன. முப்புரிநூல் அவரின் குறுக்கே ஓடிற்று. பிரம்மராயர் தீவிர வைஷ்ணவராக இருந்தாலும் சாக்தத்தின் கோட்பாடுகளை சோழத்திற்காக கற்று வைத்திருந்தார். அவை வெளியே தெரியாதவாறு ஒரு மெல்லிய துணியை போர்த்தியிருந்தார். அவருடன் இருந்தவர்கள் வேளாளன், குடியோன் என பல வேடத்தில் இருந்தார்கள். சோழதேசத்தில்



அனைவரும் உறங்கிக் கொண்டிருந்த வேளையில் யாவரும் அறியாவண்ணம் திட்டங்கள் வகுக்கப்பட்டுக் கொண்டிருந்தன.

"சோழப் பேரரசர், எவருக்கும் ஈடில்லா வீரச் சிம்மம் ஆதித்த கரிகாலர் கொலை வழக்கு நாளையோடு முடிவுக்கு வருகிறது. சிறீ ராஜராஜ உடையார் அவர்களுக்கு நாளை தீர்ப்பு நல்குவார். அப்போது அத்தீர்ப்பிலிருந்து எவரும் தப்பிவிடாதபடி இருக்க, நெடுநாட்களாய் சேகரம் செய்த தகவல்களை உறுதி செய்ய வேண்டும். உடையார்குடியும் அதன் சுற்றுப்புறக் கிராமங்களும் நம் காவலுக்கு கீழ் இன்று நள்ளிரவுக்குள் வந்துவிடும். பணி நிமிர்த்தம் பயணத்திலும், உறவினர்கள் ஊர்களுக்கு சென்றவர்களும் கூட சோழ வீரர்கள் கட்டுப்பாட்டில் இருக்கிறார்கள். நாளை வரலாறு நோக்கும் தினமாக இருக்கும்"

அனைவரும் ஒரு சேர "ஓம்" என்றார்கள்.


"கவனமாயிருங்கள். திட்டத்தில் சிறிதளவு பிசகினாலும், இராஜராஜரின் அன்பை இழப்போம். அது மரணத்தினைவிடக் கொடியதாக இருக்கும். பணிகள் நிறைய இருக்கிறன்றன. எனவே விடைபெறுகிறேன். நீங்கள் நாளைக் காலை ஆயத்தமாக இருங்கள்." என்று அந்த மண்டபத்திலிருந்து வெளியேறினார் பிரம்மராயர். அவர் சென்றதும் அதுவரை பரவியிருந்த சந்தனவாசமும் குறைய ஆரமித்தது.

"மாமன்னர் இராஜராஜ உடையார் நாளை எந்தத் தீர்ப்புத் தந்தாலும், நாம் பிரம்மராயரின் சொற்படி நடப்போம். இதனால் மன்னரின் கோபத்திற்கு ஆளானாலும், அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு பொறுப்பாவோம். இது சோழத்திற்காக. உறுதியளியுங்கள்" என தலைமை ஒற்றர் வாமதேவம் கைகளை நீட்டினார். அனைவரும் அவருடைய கையின் மீது கைகளை வைத்து உறுதியளித்தனர்.




***

உடையார்குடி கிராமம் சோழப்படைகளால் சூழந்திருந்தது. மன்னர் உடையார் சிறீ ராஜராஜர் தனித்தேரிலும், மும்முடிச் சோழப் பிரம்மராயர், தளபதிகள், படை தலைமையாட்கள், ஒற்றர் படைத் தலைவர் போன்றோர் குதிரையுடனும் நின்றிருந்தார்கள். மண்டபத்தின் நடுவே நின்று பறையை மிகவும் வேகமாக அடித்து, "இதனால் சகலருக்கும் தெரிவிப்பது என்னவென்றால், ஆதித்த கரிகாலர் கொலையில் இங்கிருக்கும் ஒவ்வொரு பிஞ்சுகளுக்கும் கூட சம்மந்தம் இருப்பதை அறிகிறோம். நெடுநாட்கள் நடந்த விசாரணையில் அவை தெளிவாக மக்களுக்கு நிறுபனம் செய்யப்பட்டன. அதனால் உடையார் குடியில் இருக்கும் அந்தணர்களையும், பெண்டுகளையும், சிறார்களையும் அவர்களோடு உறவுமுறை



கொண்டுள்ள அனைவரையும் சோழ தேசத்தினை விட்டு நாடு கடத்துகிறோம். அவர்கள் அனைவரின் சொத்துகளும் அரசாங்கம் எடுத்துக் கொள்ளும். வாழ்க சோழம். வாழ்க உடையார் சிறீ இராஜராஜர்!" என்று அறிவித்தனர்.

அந்தணர்களிடமிருந்த அனைத்தையும் எடுத்துக்கொள்ளப்பட்டு, ஆடைகளோடு அவர்களை அணிவகுக்க வைத்தார்கள் சோழவீரர்கள். மும்முடிச் சோழப் பிரம்மராயர் தனியாக ஆட்களை நியமித்து அவர்களின் அடையாளங்களை சரிபார்த்தார். சில வீரர்கள் அந்தணர்களின் உறவுகளையும் அவர்களின் உறவு முறைகளையும் அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறிக் கொண்டிருந்தனர். பெண்களில் சிலரும், ஆண்களில் சிலரும், ஆதித்த கரிகாலரின் கொலையில் தங்களுக்கு சம்பந்தமில்லை




என சத்தம் எழுப்பினார்கள். சிலர் கர்ப்பிணிப் பெண்களுக்கும் இதே தீர்ப்பா எனவும், பச்சிளம் குழந்தைகளுக்கு இதிலென்ன சம்பந்தம் எனவும் கூச்சல் போட்டார்கள்.

மும்முடிச்சோழப் பிரம்மராயரே அனைத்தும் விடையளிக்கும் விதமாக, "நாங்கள் இங்கிருக்கும் அனைத்து நபர்களும் சோழ இளவரசர் ஆதித்த கரிகாலரின் கோரக் கொலையில் சம்பந்தம் இருப்பதை அறிந்தோம். உடையார் சிறீ இராஜராஜ சோழர் ஆட்சிப் பொறுப்பேற்றதும் முறையாக வழக்குகளும், வாதங்களும் எடுத்துரைக்கப்பெற்று அவற்றை நிரூபனம் செய்தும் உள்ளோம். சோழமக்களும் அதனை உறுதி செய்துள்ளார்கள். மாமன்னர் தீர்ப்பு வழங்கியதும், மீண்டும் ஒன்றுமறியாதது போல நீங்கள் பேசுவதில் ஞாயம் இல்லை. சோழத்தேசத்திற்கு எதிராக தேசத்துரோகத்தில் ஈடுபட்ட போதும், உங்கள் அனைவரையும் உயிரோடு நாடுகடத்தவே மாமன்னர் உடையார் சிறீ இராஜராஜர் தீர்ப்பு தந்துள்ளார். சோழமக்களின் கோபத்திற்கு ஆளாவதற்குள், இங்கு மக்கள் கிளர்ந்து எழுவதற்குள் நீங்கள் நாட்டினைக் கடப்பதே உத்தமமான காரியம்." என்றார்.

ஒரு பெரிய வீரர்களின் வளையத்திற்குள் அத்தனையும் நிகழ்ந்து கொண்டிருந்தது. அனைத்தும் சரிபார்க்கப் பட்டதாய் பிரம்மராயருக்கு தகவல்கள் தெரிவிக்கப்பட்டவுடன், அவர் இராஜராஜரைப் பார்த்தார். அந்தப் பார்வையின் அர்த்தத்தினை உணர்ந்த இராஜராஜர், கைகளை முன்நோக்கி அசைத்தார்.

வீரர்கள் சூழ்ந்திருக்கும் அந்தணர்க் கூட்டம் நகர்ந்து சென்றது. எதிர்த்துப் பேசியவர்களும், மறுத்து நின்றவர்களும் பிரம்பால் தாக்கப்பட்டார்கள். ஒரு ஊரே காலிச் செய்து செல்வதைக் கனத்த மனதோடு பார்த்துக் கொண்ட இராஜராஜர், அங்கிருந்து தன்னுடையத் தேரில் கிளம்பினார். இதுவரை ஆதித்த கரிகாலனின் மரணத்திற்கு தக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்ற அவரது மனவலி அகன்றது. உறவைக் கொன்றவர்களுக்கும் தயவுக்காட்டி, நாடுகடத்த கூறியிருக்கும் நல்மனதுடன் அவர் அரண்மனை நோக்கிச் சென்றார். எல்லாவற்றையும் கவனித்துவந்த பிரம்மராயர் குதிரையை வேறுபக்கம் செலுத்தினார்.

பிறகு உயிரோடு நாடுகடத்தப்படுவதை அறிந்த சோழ மக்கள் வெகுண்டு எழுந்து, அந்தணர்கள் வாழ்ந்த வீடுகளை தீவைத்தார்கள். அவ்வூரே தீப்பிழம்பாக மாறியது. அந்நேரத்தில் மிகவும் சாமர்த்தியமாக சோழர் படை அந்தணர்களையும், அவரது உறவுகளையும் சேர நாட்டை நோக்கிக் கொண்டு சென்றுகொண்டிருந்தது. அவ்வாறு போகின்ற வழியில் சில விசயம் அறிந்த சோழமக்கள் அவர்களை துன்புறுத்தினர். சோழப் படைவீரர்கள் அதனை தடுத்து அந்தணர்களை முன்நோக்கி அழைத்துச் சென்றனர்.

***

பெண்கள் கத்திக் கதறிக் கொண்டிருந்தார்கள். குழந்தைகளும், சிறுவர்களும் நடப்பது புரியாது தாய் தந்தையோடு ஒடுங்கி ஓலமிட்டுக் கொண்டிருந்தனர். ஆண்களுக்குள் இதுவரை இருந்த சோழப் பகைமை கொழுந்துவிட்டு எரிந்துக் கொண்டிருந்தது. கர்ப்பிணியாய் இருந்த ஒரு பெண் எப்படி இந்த சோழ தேசத்தினை நிர்மூலம் ஆக்குவது என வயிற்றுக்குள் இருந்த குழந்தைக்குச் சொல்லித் தந்துகொண்டிருந்தாள். வெற்றிலை எச்சிலை துப்பி, கல்லெடுத்து எரிந்து கனல் பொங்கும் கண்களோடு சோழ மக்கள் ஏசியதை வழியெல்லாம் சொல்லிக் கொண்டே வந்தார்கள்.

சோழத்தை ஏசுவதிலேயே கவனம் கொண்டமையால் அவர்களின் இருபுறமும் கிராமத்திற்கு கிராமம் படைவீரர்கள் கூடிக்கொண்டு போவதையும், ஏற்கனவே அவர்களோடு வந்த ராஜராஜரின் படைவீரர்கள் விலகிக்கொள்வதையும் அவர்கள் கவனிக்கவில்லை.

காடுகளின் ஊடே நடந்து ஒரு சமவெளியை கூட்டம் அடைந்தபோது, அந்தக்கூட்டத்தினை விட பெரிய அளவில் படைவீரர்கள் இருந்தார்கள்.

“வாழ்க பாண்டிய தேசம்!” என்றொரு சத்தம் கேட்ட திசையை நோக்கினான் வாமதேவம். ஒரு வயதான மூதாட்டி கையில் கம்பினை ஊன்றி நடைதளர்ந்து வந்தவளிடமிருந்து அந்த சத்தம் வந்திருக்கக் கூடும். அவளின் மீது கண்களைப் பதித்தான். அவள் மீண்டும் “வாழ்க பாண்டிய நாடு!” என்று கத்தினாள். இடைப்பட்ட கூச்சலிலும் அந்த மூதாட்டியின் அருகில் இருந்த சிறுவர்களும் பாண்டியர் புகழ் உரைப்பதைக் கேட்ட வாமதேவம் அதிர்ந்தான்.

“சோழதேசத்தில் அந்நியர்களுக்கு அடைக்கலம் தந்தது எத்தனை பெரியக் குற்றம். மன்னர்களின் நல்மனதினை இவர்கள் இப்படி நயவஞ்சமாக அல்லவா பயன்படுத்திக் கொண்டார்கள். இந்தப் பிஞ்சுகள் சோழ தேசத்தில் பிறந்தும் வாழ்ந்தும் இம்மண்ணை நேசிக்கவில்லையே. எத்தனை வன்மம். இதோடு அனைத்தும் நிறைவடையட்டும்.” என தனக்குள் உரையாடிக் கொண்டிருந்தவன், தன் இடையிலிருந்த சங்கை முழங்கினான். அந்தச் சத்தம் நிறைந்த காட்டில் மரங்களிடைப் புகுந்து அனைவருக்கும் கேட்டது. சோழ வீரர்கள் அப்படியே நின்றர். குதிரைகள் கூட ஒரு அடி எட்டுவைத்து அப்படியே நின்றன.

சோழ தேசத்திற்கு எதிராய் இவர்கள் இடும் கூச்சலையும், வசவுகளையும் கேட்டுக் கொண்டே பயணித்துவந்தோம். மாமன்னர் சிறீ இராஜராஜப் பெருவுடையார் இவர்களை நாடு கடத்த உத்தரவிட்டிருந்தாலும், முக்காலமும் அறிந்த நம் மும்முடிச் சோழப் பிரம்மராயரின் கட்டளைப்படி இவர்களில் சிறு பிஞ்சுகளைக் கூட உயிரோடு விடுவதென்பது நாளைய சோழப் பேரரசின் பேரழிவுக்கு ஒப்பாகும். மாந்திரிக தாந்திரிகத்திலும், அதர்வண வேதத்திலும் வல்லவர்களான இவர்கள் நேரடிப் போரில் நம்மை வீழ்த்த முடியாது என்றாலும், பிற மந்திர வேலைகளில் ஈடுபட சகல வழிகளும் உண்டு. ஆகவே அனைவரையும் மண்டியிட வையுங்கள்.




வீரர்கள் விரைந்து செயல்பட்டார்கள்.

முன்சென்ற சேனைத் தலைவன் தன்னுடைய இடத்திலிருந்து ஒரு மஞ்சள் நிறக் கொடியைக் காண்பித்தான். வீரர்கள், கூட்டத்திற்குள் நுழைந்து ஆண், பெண், சிறார்கள் என மூன்றாய்ப் பிரித்தனர். “என்ன செய்கின்றீர்கள். எதற்காக என் மனைவியைப் பிரிக்கின்றீர்கள், எதற்காக என் பேரனை கொண்டு செல்கின்றீர்கள்” என எல்லாபக்கமும் கேள்விகள் எழுந்தன. ஆனால் அக்கேள்விகளுக்கு விடை சொல்வாரில்லை.


தலைமை படைவீரனான மங்களநேசன் அக்கூட்டத்தின் முன் தன் குதிரையை செலுத்தி அவர்கள் முன்பு நின்றான்.

“இறுதி கிராமத்தினையும் கடந்து வந்துவிட்டோம். இன்னும் இரண்டு பரலாங்களுகள் கடந்தால், நீங்கள் வேறு தேசத்திற்கு உரியவர்களாகிவிடுவீர்கள். அதனால் கூட்டத்திற்குள் இருக்கும் நம் தேசத்து ஒற்றர்கள் எழுக” என்றான்.

அந்தணர்கள் திகைத்தார்கள். என்ன நம் கூட்டத்திற்குள் சோழ தேசத்து ஒற்றர்களா? இதெப்படி சாத்தியம். நாம் மிகவும் சாமர்த்தியமாக நம் குலத்தவர்களை மட்டுமே உடையார்குடியைச்

சுற்றி குடியமர்த்தி வைத்தோம் என்று தங்களுக்குள் பேசிக்கொண்டிருக்கும் போது, ஆங்காங்கே.. சிலர் எழுந்து நின்றனர். அவர்களை முன்நோக்கி வருமாறு சைகை செய்தான். அவர்களை வீரர்கள் சோதித்தார்கள். அடையாளங்கள் சரியாக இருந்தன.

சருகுகள் உதிரும் சத்தம் மட்டுமே கேட்டது. அனைவரும் அமைதியானார்கள். அப்போது குதிரைகள் விரைந்துவரும் சத்தம் கேட்டது. அனைவர்



பார்வையும் அங்கு செல்லஞ் மூன்று குதிரைகள் அவர்களை நோக்கி வந்தன. அதில் இரண்டில் இருந்தவர்கள் தங்களுடைய அடையாளங்களை மறைத்திருந்தார்கள். பிரம்மதேவராயரை மட்டுமே அடையாளம் காண முடிந்தது. “பிரம்மதேவராயர் ஒழிக” என கூட்டத்தில் யாரோ சத்தமிட அனைவர் கழுத்துகளின் மேலும் வீரர்களின் வாள் அடுத்தநிமிடம் இருந்தது.


“அதர்வண அந்தணர்கள். சோழப் பேரரசின் கீழ் நீங்கள் வந்தபோதே நாங்கள் உங்களையும் சோழர்களாகவே எண்ணினோம். நான் பார்த்து வளர்ந்த பிள்ளையை கோரமாய் கொலை செய்துவிட்டு அதனைப் பெருமை பேசி குழந்தைகளை வளர்க்கின்றீர்கள்.




அனைத்தும் அறிந்தும் தர்மக் கடவுளான இராஜஇராஜ சோழர் வழக்கு எடுத்து ஆதாரம் கொண்டு நிறுவி உங்களையெல்லாம் கொல்ல மனமின்றி நாடுகடத்த ஆணையிட்டிருக்கிறார். ஆனால் அத்தகைய மாண்புகொண்டோரையும் உங்களால் மதிக்க முடியவில்லை. வரும் வழியெல்லாம் சோழத்துக்கு எதிராய் உங்கள் ஏச்சுகளும், பேச்சுகளும் இருந்தன.”

“இனி உங்களால் படைதிரட்டி சோழத்தினை ஒன்றும் செய்ய முடியாது. நாங்கள் அந்நிலையை கடந்துவிட்டோம். சோழப்பேரரசின் மகாசேனைக்கு இவ்வுலகே பயம்கொள்ளும். ஆனால் பேடிகளைப் போல மறைந்து திட்டம் தீட்டி, தந்திர மந்திர யாகம் வளர்த்து உங்களால் தொடர்ந்து இடையூறுகள் உண்டாகும். எனவேஞ்” என கட்டளைப் பிறப்பிக்கும் முன் தன்னுடைய இடபக்கம் நின்ற குதிரையின் மீதிருந்தவரைப் பார்த்தார். அவர் கைகளில் ஏதோ செய்கை செய்ய, பிரம்மதேவ ராயர் அதிர்ந்து கண்களை விரித்தார். பின்பு தன்னை மீட்டுக் கொண்டு சிறார்கள் பக்கம் இருக்கும் வீரர்களுக்கு உத்தரவிட்டார். அடுத்தகணம் குழந்தைகளும், சிறார்களும் கொல்லப்பட்டனர். அதர்வணப் பெண்களும், ஆண்களும் திகைத்து கதறினார்கள்.


பிரம்மதேவராயர் மீண்டும் அந்த குதிரைமேலிருந்த உருவத்தினைப் பார்த்தார். இம்முறையும் அவருக்கு செய்கையால் கூறப்பட்டது. “ஓம்” என்று அந்தண ஆண்கள் பக்கம் இருக்கும் வீரர்களுக்கு கட்டளைகள் செல்ல அனைவர் தலையும்



10
ANNIVERSARY
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
10th
Happy
Anniversary
10
Years

உருண்டது.

ஒருபக்கம் ஆண்கள் மடிந்து கிடக்க, மறுபக்கம் சிறார்களும், குழந்தைகளும் சிதைந்து கிடக்க. நடுவே பெண்கள் கூட்டம் பெரும் ஓலம் இட்டு கதறிக் கொண்டிருந்தது. அடுத்தது அவர்கள் தான்



என்று நினைக்கையில் பிம்மதேவராயர் அருகில் இருந்த உருவம் தன்மேல் போர்த்தியிருந்த ஆடையை சுழற்றி வீசியது. அதைப் பார்த்த அனைவருமே கண்களை முடிந்தமட்டும் திறந்து தங்களது வியப்பை வெளிப்படுத்தினார்கள். அது குந்தவை நாச்சியார்.

"கூட்டத்தில் கற்ப்பிணிகள் இருக்கிறார்கள். அவர்களையாவது விடுங்கள். சூலிப் பெண்களை கொல்வது சோழ தேசத்தை நிர்மூலமாக்கும்." என்று கத்தினாள் ஒரு மூதாட்டி. அதனை மற்றப் பெண்களும் ஆமோதித்து குரல் எழுப்பினார்கள்.

குந்தவை பேசத்தொடங்கினாள். "ஆலகால விஷத்திற்கெல்லாம் கருணை காட்டுதல் என்பது இயலாது. பாரதத்தில் அர்ஜுனன் செய்த தவறை நாங்களும் செய்ய மாட்டோம். உங்கள் கண்முன்னே உறவுகள் கொல்லப்பட்டமைக்கு காரணம், பெண்களாகிய நீங்களே சோழ தேசத்திற்கு எதிரிகள். நீங்களே எய்தவர்கள். ரவிதாசனும், உங்களுக்கு துணை போனவர்களும் வெறும் அம்புகள். சோழத் தேசத்து பெண்கள் மீது




நீங்கள் வன்முறையை உங்கள் உறவுகளைக் கொண்டு ஏவினீர்கள். எங்கள் பெண்களின் முலைகளையும், மூக்கினையும் அறுத்தீர்கள். குறிகளைக் காயம் செய்தீர்கள். சூலிப் பெண்கள் என்றும் நீங்கள் கருணை கொள்ளவில்லை. இப்போது அதே கருணையை உங்களுக்கு எதிர்ப்பார்க்கின்றீர்கள். இதுகண்டு பொறுக்காது பாண்டியனைத் தண்டித்த ஆதித்த கரிகாலரையும், வஞ்சமாய்க் கொன்றீர்கள். உண்மையில் இப்போது வழங்கப்பட்ட தீர்ப்பு ஆதித்த கரிகாலருக்காக அல்ல. உங்கள் மனதில் ஈரமில்லாமல் செய்த காரியத்திற்காக."

"பிரம்மராயரே, இவர்களை தீவைத்து எரித்து சாம்பலை காவேரியில் கரையுங்கள். மிஞ்சும் எலும்புகளைப் பொடியாக்கி வையுங்கள். சோழ தேசத்தில் நாம் கட்டப்போகும் பெருங்கற்றளிக்கு இவர்களே அஸ்திவாரம். இங்கு நடந்தவை அனைத்தும் சோழ ரகசியமாக இருக்கட்டும். எக்காரணத்தைக் கொண்டும் எவருக்கும் தெரியாமல் பார்த்துக் கொள்வது உங்கள் பொறுப்பு. அதற்காக நீங்கள் எது செய்தாலும் இந்தக் குந்தவை முழு ஆதரவு தருவாள்."

பிரம்மராயர் "ஓம்!" என்றார். எஞ்சிய பெண்கள் ஒருசேர பிணைக்கப்பட்டு முழுக்க எண்ணைய் ஊற்றினார்கள். ஓலக்குரல் எழும்ப எழும்ப தீ வானோக்கி எரிந்தது.

"அந்தணர்களைக் கொல்லக்கூடாது என்பது பரவலான கருத்தாக்கம். ஆனால் இன்று நாம் கொன்றது அந்தணர்களை அல்ல. இம்மண்ணின் எதிரிகள். நம் குலக்கொழுந்து நிகரற்ற வீரன் ஆதித்த கரிகாலனை நயவஞ்சகமாய் கொன்ற

துரோகிகள். அந்தணன் என்றால் அறவோன் என்ற கூற்றின் படி பார்த்தால், இந்த துரோகிகளை மன்னித்து நாடுகடத்த சொன்ன நம் மன்னன் இராராஜ உடையாரே அந்தணன்". என்றார் மும்முடிச் சோழப் பிரம்மராயரின் அருகில் தன் அடையாளம் காட்டாத நபர்.

ஆதித்த கரிகாலன் இறந்தபிறகு கடமை தவறியதாக நினைத்து வருந்திக் கொண்டிருந்த கரிகாலனின் மெய்க்காவல் படையினர் நெடுநாட்களுக்குப் பிறகு சிரித்தார்கள். குந்தவை கண்களிலிருந்து நீர் திரண்டு சோழத்தாயின் மடிமீது விழ, வீரர் பெருங்கூட்டம் இராஜராஜ உடையாரின் மெய்கீர்த்தியை பாடியது.



***

பிரம்மராயர் அமைதியாய் இருந்துவிட்டு, "அம்மா.. பெருங்கற்றளி என்று சொன்னீர்களே.. அது என்ன. இவர்களைக் கொன்றமைக்காகவா அதனை எழுப்பப் போகிறோம்."

"தேவராயரே. ஒருவகையில் அந்தக் கற்றளிக்கு இவர்களும் காரணம். ஆனால் நெடுநாட்களாய்.. இராஜராஜ சோழருக்கென ஒரு கனவு இருக்கிறது. அவர் கனவு இந்த உலகில் நிறைவேறும் போது சோழ தேசத்திற்கு எதிரிகள் என்று எவரும் இருக்க கூடாது."

"அம்மாகோபிக்க வேண்டாம். எல்லா எதிரிகளையும் தான் நாம் அழித்துவிட்டோமே. இன்னுமா எதிரிகள் இருப்பதாக கருதுகிறீர்கள்."

"பிரம்மதேவராயரே.. நீங்கள் இதற்கு முன்கண்ட அரசியல் அல்ல இவை. நேருக்கு நேர் நின்று பகைமை தீர்க்கும் வல்லமையும் துணிச்சலும் அற்றுப்போய் கோழைகளுடன் யுத்தம் செய்து கொண்டிருக்கிறோம். இதோ எரிந்து கொண்டிருக்கும் இவர்கள் வெறும் சல்லிவேர்கள். ஆணி வேரொன்று இருக்கிறது. அதுவும் சோழ தேசத்திலேயே இருக்கிறது. அதனையும் இராஜராஜ சோழருக்கு தெரியாமலே அகற்ற வேண்டியிருக்கும். அதன்பின் எல்லாம் சுபமாகும்."

"அம்மா. யார் அந்த ஆணிவேர் என்று கூறுங்கள். அவர்களை நான் பார்த்துக் கொள்கிறேன்."

"அவசரம் வேண்டாம், பிரம்மராயரே. இங்கு நடந்ததையே இராஜராஜருக்கு தெரியாமல் மறைத்தாக வேண்டிய சூழ்நிலை. இதைச் சரியாக செய்து முடிக்கவே நமக்கு சில காலங்கள் ஆகும். அதற்குள் தக்க காலத்தில் மற்றவற்றை எடுத்துரைக்கிறேன். வீரர்கள் எவரேனும் சந்தேகப்படும் நபர் உண்டா?"

"அப்படியிருந்தால் இவ்விடத்திற்கு வந்திருக்க மாட்டார்கள் அம்மா. அனைவருமே மிகவும் நம்பிக்கைக்கு உரியவர்கள். கடுகளவும் இந்த விசயம் வெளியே தெரியாது. நாளைய வரலாறு.. இவர்கள் தூரதேசத்திற்கு




அனுப்பப்பட்டார்கள் என்பதோடு முடிந்துபோகும். அத்துடன் பேச்சின் இடையே கற்றளி என்று கூறினாயே. அது யாருக்காக சோழர்களின் குலதெய்வமான நிதம்பசூதனிக்கா?"

"இல்லை பிரம்மராயரே. சாக்தம் இம்மண்ணில் தழைத்தால் மீண்டும் சோழ தேசம் அல்லல்படும். மந்திரங்களும், தந்திரங்களும் முடக்கப்பட்டு, அன்பு சமயமொன்று இங்கு எழவேண்டும். அத்தோடு ஆதித்த கரிகாலரும், அவர் பொருட்டு இதுவரை இறந்த அத்தனை உயிர்களும், இனி இறக்கப்போகிற உயிர்களுக்கும் நல்வழிகாட்ட ஈசனையே சரணடைய வேண்டும். அதனால் பெருங்கற்றளி ஈசனுக்கு உரித்தாகும்.

ஈசன் இனி சோழநாட்டினை பாதுகாப்பான். அன்பே வடிவான அருண்மொழிக்கு இனி ஈசனே துணை."

சோழம்.. சோழம்.. சோழம்..

# சிவராத்திரி

இடுப்பு எலும்பில்
ஓராயிரம் யானைகள் மிதிக்கும்
மாதவிடாய் வலியோடு

மயக்கமும் மன எரிச்சலும்
பிசுபிசுக்கும் பொழுதுகளில்
தனிமையில் வலிகளோடு
சாலையோரம் படுத்துக் கிடக்கும்

இரவின் விழிகளை
குத்திக் குதறும் மின்விளக்குகள்
பொங்கும் முதல் சாமத்தில்

இறுக்கமான ஆடைகளில்
உருக்கமான உருகிடும் கனவுகளில்
தகவல் தொழில்நுட்பப் பூங்காவில்
விடிய விடிய கண்விழித்து
களிப்புடன் முகம்தெரியா

அகங்களுடன் சிரித்துப் பேசி
விடியாமலே விடிவதற்குள்
வீடு வந்துசேரும் எல்லா ராத்திரியும்
அவளுக்கு
சிவராத்திரிதான் எம்பாவாய்!...

**சதீஷ் குமரன்**

# குடையேந்தும் வானம்

பெருமழை வீதியெங்கும்
வெண்பூக்கள் உதிர்கின்றது!

சாரலில் முகிழ்க்கும் ஈசல்கள் உயிர்பிழைக்க தன்
சிறகுகளை அந்திமக் காலத்து ஆசையாய் இறைக்கிறது!

வஞ்சிக்கப்பட்ட இலைகள் மட்டும்
இடம்பெயர்ந்து கிளை நிரப்புகிறது!

பிசிரற்றுக் கிடந்த ஒருதலை நேசங்கள்
புத்துயிர்ப்புடன் ஞாபகத்தை மீட்டிக் கொண்டிருந்தது!

ஊன்றி சிந்தித்ததில் தனிமையின் விநோதம்
எரிகின்ற தணலாகி பின்பு இருண்டு பரிகசித்தது!

குரல் கசிந்துருக அவனையும் அவளையும் ஊடல்,
கொடும் வெயிலுக்குள் சுவடு பதிக்கிறது!

அடம்பிடித்த குழந்தைகள் ஏதுவாய்
குதூகலத்தோடு கப்பலை அரங்கேற்றம் செய்தது!

நத்தவனத்து புத்தருக்கு
அமைதியாய் சிறகு முளைத்தது!

மழைக்கு நீலநிறம் கசிந்துவிடாதபடி
ஒதுங்கி
தன்னை வானம் குடையேந்தி காத்து நின்றது!

**ஆனந்தி ராமகிருஷ்ணன்**

# É ê£Aò ï£ ¡

## வான்மதி செந்தில்வாணன்

*1.*

*மிக அற்புதத் தோரணையுடன்
என்னெதிரே நின்றபடி
உங்களை மிக அறிவாய்க் காட்டிக்கொண்டபோது
வியப்பு மேலோங்க அதிசயித்திருந்தேன்.
சொல்லப் போனால் அப்போதெல்லாம்
திடமாகத் தானிருந்தேன்.
"நீயெல்லாம் ஒன்றுமேயில்லை" எனும்படியான பார்வையை என்மீது படியவிட்டவாறு
உங்கள் சப்பாத்துக் கால்களுக்கடியில் கிடத்தி புழு நசுக்குவதுபோல்
நசுக்கித் தேய்த்துக் காரியுமிழ்ந்த அன்றுதான்
நான் தூசானேன் முதன்முதலாய்.*

*2.*

*நானொரு தூசுதான்.
அதற்காகவெல்லாம்
உங்கள் தும்மலுக்கு
தொடர் காரணியாக்கி
என்னை சிறைப்படுத்தியிருப்பது
மாபெரும் குற்றம்.
நம்புங்கள்
உங்கள் விழிகளில் நீங்கள் ஏந்தும்
உறுத்தல்மிக்க தூசு நானில்லை.
தும்மலுக்குக் காரணமான தூசு
நானில்லை.*

*3.*

*தூசாகிய நான்
நீங்கள் உதிர்த்த இறகுகளால்
ஒருபோதும் பயன்கொள்ளவில்லை.
விலைமதிப்பற்ற சிறகுகளை
அவசரத்திற்கென உங்களிடம்
கடன் கேட்டதில்லை இதுவரை.
நான் காற்றை சிறகாய் உடுத்திருக்கிறேன்.
அதன் உந்துதலில்தான்
உயரம் சஞ்சரிக்கிறேன்.
காற்றில் மட்டுமே என் சாகசம்.
காற்றில்லாதுபோனால்
அதோ தெரிகிறதே அந்த வானம்
அதன் இரவுகளில் துளி நட்சத்திரமாய்
மினுமினுத்திருப்பேன்.*




*4.*

*இச்சமயம் முதல் அனுமதியின்றி
உங்கள் சிறையிலிருந்து
நிரந்தரமாக என்னை
விடுவித்துக்கொள்கிறேன்.
எமக்கான இலக்கு வானம் தொடுவதே.
ஆக, விடுபடுதலுக்குப் பிறகு உறுதியாகத் தடையின்றி
பறக்கத் துவங்கிவிடுவேன்.
தேடவேண்டாம்.
ஒருவேளை
கண்டடைய வேண்டுமெனில் வாருங்கள்
காற்றின் விளிம்பில்தான்
மிதந்து கொண்டிருப்பேன்.*

## அதகள ஆண்டனி!



முதலீட்டுக்கு இழப்பை ஏற்படுத்தாத நடிகர் எனப் பெயரெடுத்திருக்கும் விஜய் ஆண்டனி, அடுத்தடுத்து வெளியாக இருக்கும் ‘கொலைகாரன்’, ‘அக்னிச் சிறகுகள்’, ‘தமிழரசன்’, ‘காக்கி’ படங்களிலும் நடிப்பதோடு நில்லாமல், இசையையும் படத்தொகுப்பு வேலையிலும் தீவிரமாக இயங்கி வருகிறார். கேட்டால், ‘இசையைப் போலவே எடிட்டிங்கும் எனக்குப் பிடித்தமான கலைதான். எடிட்டிங்கும் ஒரு லயத்தோடு சம்பந்தப்பட்டிருப்பது காரணமாக இருக்கலாம்.’ அத்துடன், ‘கடவுளே நடித்தாலும் கதை இருந்தால்தான் படம் ஓடும்’ என்று அடித்துச் சொல்லி தனக்கான கதைத் தேர்விலும் மிக கவனமாக இருக்கிறார்.

## ஆண்டவன் பற்றி ஆண்டனி!



## பரபரப்பான கதாநாயகி ஆகட்டும்!!

சமீபத்தில் திரைக்கு வந்த ‘நெடுநெல் வாடை’ படத்தில் கதாநாயகியாக நடித்திருக்கும் அஞ்சலி நாயர், விமான பணிப்பெண்ணாக பணிபுரிந்து வருகிறார். தத்ரூபமாக திருநெல்வேலி சீமை துறுதுறு இளம்பெண்களை நம் கண்முன் நிறுத்திய இவரின் வசீகர முகத்துக்கு ரசிகர்கள் மத்தியில் வரவேற்பு அதிகமாகி இருக்கிறது. இதனால் முன்னணி நாயகிகளுக்கு சவால்விடும் அளவுக்கு பத்திரிகைகள் பாராட்டு மழையில் நனையும் அஞ்சலிக்கு தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் என தென்னிந்திய சினிமா வரவேற்பு கம்பளம் விரிக்கின்றன.

## பறக்கும் கதாநாயகி!

கன்னடப் பொண்பெண்ணாக இருந்து, வெறித்தனமா தமிழ் கத்துக்கிட்டேன். ஒரு நடிகை திரையில தெரியிறது பாதி நடிப்புதான். குரலில் காட்டும் உணர்ச்சிகள்தான், நடிப்பை முழுமையடையச் செய்யும். அதுக்காகத்தான் தமிழ் கத்துக்கிட்டேன். சம்ஸ்கிருதத்தைவிடப் பழைமையான தமிழ் மொழியைக் கத்துக்கிட்டத்தில் பெரிய மகிழ்ச்சி!" என்று திருவாய் மலர்ந்தருளியிருப்பவர் 'காளி' படம் மூலம் தமிழுக்கு வந்து இப்போது 'இஸ்பெட் ராஜாவின் இதயராணி' ஆகியிருக்கும் ஷில்பா மஞ்சுநாத்.

## மொழியுடன் வந்திருக்கும் பெண்புலி!



**புலிப்பாய்ச்சல் இதுதானோ?!**

தமிழ் சினிமாவில் முன்னணி நடிகர்களில் ஒருவரான விஷ்ணு விஷால், ஒரே தயாரிப்பு நிறுவனத்திற்கு தொடர்ந்து மூன்று படங்களுக்கு கால்ஷீட் கொடுத்துள்ளதுதான் சமீபத்திய கோலிவுட் கலாட்டாவாக இருக்கிறது. அதிலும் பாலிவுட் சினிமாவின் முன்னணி தயாரிப்பு நிறுவனங்களில் ஒன்றான வயாகாம் நிறுவனத்திற்காக மூன்று படங்களுக்கு கால்ஷீட் கொடுத்திருப்பதால், விரைவில் மிகப் பெரிய வரவேற்பு அவருக்கு இந்திய சினிமாவில் காத்திருக்கிறது. எனவே, தமிழிலும் அடுத்தடுத்து படங்கள் வந்தவண்ணம் இருக்கின்றன.

**புலி பதுங்காமல் இருந்தால் சரி!**

**வந்தாரை வாழவைக்கும் தமிழ்நிலம்!**



# தாயுமானவர்



## முதன்முறையாக திரு.எம்.சி.இராமமூர்த்தி அவர்கள் மனம் திறக்கும் நினைவலைகள்...

கடந்த நூற்றாண்டில் தமிழகத்து மக்கள் ஒரு மனிதரைத்தன் வாழ்வில் ஒருமுறையாவது கண்குளிர பார்த்திட மாட்டோமா என்றும், அவரைத் தொட்டுப் பேசி அளவளாவிட மாட்டோமா என்றும் காத்துக்கிடந்தார்கள் என்றால்...

எங்காவது அவர் உருவம் பதிந்த பதாகைத் தென்பட்டு விட்டால் அதனை நின்று நிதானித்து தங்கள் மனதில் படியெடுத்துச் சென்று, அவர் எப்போது எங்கு வருகிறாரோ அதனை எதிர்பார்த்து இரவு பகல் பாராது, மழை வெயில் பாராது அம்மனிதர் வரும் திசையை நோக்கி காத்துக்கிடந்தார்கள் என்றால்...

மக்களின் உள்ளமே கோயில் என்ற உன்னதத் தத்துவத்தை வெளிப்படுத்திய ஒரு கலைஞனை ரசித்த அம்மக்கள், தங்களின் ரசிகத் தன்மையிலிருந்து ஒருபடி உயர்ந்து, ஒரு தேவதூதனைத் தரிசிக்கும் பக்தி பெருக்குடன் இருந்தார்கள் என்றால்...

அந்த ரசவாத அதிசயத்தை நிகழ்த்திய மாமனிதர்... பொன்னார் மேனியனாய்... பொன்மனம் கொண்ட மாமணியாய்... தமிழக மக்கள் மனத்தில் என்றென்றும் நிலைத்தவராய்... 'மக்கள் திலகம்' 'பொன்மனச் செம்மல்' 'புரட்சித் தலைவர்' 'வாத்தியார்' 'இதயதெய்வம்' போன்ற எண்ணிலடங்கா பட்டங்களுக்கு சொந்தக்காரரான திரு. எம்.ஜி.ஆர் அவர்கள் மட்டுமே!




### கொற்றவன்

எம்.ஜி.ஆர் என்பது மூன்றெழுத்து ஆங்கில வார்த்தை அல்ல!

காலை எழுந்தது முதல் உறங்கச் செல்லும் ரசிகர்கள், பக்தர்கள் எனப் பெருந்திரளான மக்கள் ஓதும் மந்திரச் சொல் அது!

அந்த மந்திரச் சொல்லின் உருவகமாக விளங்கும் திரு எம்.ஜி.ஆர் அவர்களின் திறமையையோ, பெருமையையோ பறைசாற்ற வேண்டுமென்றால், அதற்கு பற்பல நூல்கள் கிடைக்கின்றன. தமிழகத்தில் அதிக எண்ணிக்கையில் ஒருவரைப் பற்றி நூல்கள் வந்திருக்கின்றன என்றால், அது மக்கள் திலகம் திரு. எம்.ஜி.ஆர் ஒருவருக்கு மட்டுமே! உலகளாவிய அளவிலும் இதுவொரு சாதனையே! அந்தச் சாதனை முற்றுப் பெறாமல், இன்னமும் ஆண்டுதோறும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது!

வாழுங்காலத்திலும், வாழ்ந்தபின்னும் பலப்பல அற்புதங்களை நிகழ்த்திவரும் யுகபுருஷரான மக்கள் திலகம் திரு. எம்.ஜி.ஆர் அவர்களின் கரங்களில்... பிறந்தது முதல் தவழ்ந்து வளர்ந்து, ஒரு மகனாக விளங்கியவர் திரு.எம்.சி.ராமமூர்த்தி.

மக்கள் திலகத்தின் அண்ணன் திரு.எம்.ஜி.சக்கரபாணி அவர்களின் மூத்த மகனான திரு.எம்.சி.ராமமூர்த்தி, 'சத்யா ஸ்டுடியோ' நிர்வாக இயக்குனர்களில் ஒருவராகவும், 'எம்.ஜி.ஆர் பிக்சர்ஸ்' நிர்வாக இயக்குனர்களில் ஒருவராகவும் விளங்கியவர்!



'சத்யராஜா பிக்சர்ஸ்' என்ற நிறுவனத்தைத் தொடங்கி அதன் மூலம் மக்கள் திலகத்தின் நடிப்பில் 'அரச கட்டளை' எனும் மாபெரும் வெற்றிப் படத்தைத் தயாரித்தவர்!

மக்கள் திலகம் தனது திரையுலக ஆரம்ப காலகட்டத்தில், சிறுசிறு வேடங்களில் நடித்த இளமை காலம்தொட்டு, அவருடனே தனது வாழ்க்கையைத் தொடங்கி, மக்கள் திலகத்தின் இறுதிக்காலம் வரை பயணித்தவர் திரு.எம்.சி.ராமமூர்த்தி அவர்கள்.

மக்கள் திலகத்தின் நூற்றாண்டு விழா, அவரது ஆதரவாளர்களாலும் ரசிகர்களாலும் உலகளாவிய அளவில் கொண்டாடப்பட்டு வரும் இவ்வேளையில், தன் ஒவ்வொரு மணித்துளிகளும் மக்கள் திலகத்தை மனதில் வைத்து உருகும் திரு.ராமமூர்த்தி அவர்கள், மக்கள் திலகத்தின் வாழ்க்கையில் நடந்த அற்புதமான நிகழ்வுகளையும் அறியப்படாத செய்திகளையும், தான் அருகிருந்து பார்த்த, பங்குபெற்ற தருணங்களை முதன்முறையாக நம்மிடம் பகிர்ந்து கொள்கிறார்.

எண்பது ஆண்டுகளுக்கும் மேலாக தன்னுள் பொதிந்து வைத்திருக்கும் வைர நினைவுகளை மக்கள் திலகத்தின் நூற்றாண்டைச் சிறப்பிக்கும் விதமாக நினைவஞ்சலியாக இத்தொடர் மூலம் சமர்ப்பிக்கிறார்.

இத்தொடருக்கு என்ன தலைப்பிடுவது என்று யோசிக்கும்போது, உள்ளமுருக அவர் சொல்லும் வார்த்தைகள்...

"இளம் வயதிலேயே தாயை இழந்த எனக்குத் தாயுமாகி... தந்தையுமாகி... ஆசானுமாகி... எனக்கு எல்லாமுமானவர்...எனது...சித்தப்பா..." உணர்ச்சி பெருக்கோடு அந்த வார்த்தைகள் வெளிப்பட, கன்னங்களில் தாரையிட்டு வழிந்த கண்ணீரில் வெளிப்பட்டது மக்கள் திலகத்தின் மீதான அவருடைய அளவிடமுடியாத... அபரிமிதமான... பேரன்பு!

"அன்பிற்கும் உண்டோ
அடைக்குந்தாழ் ஆர்வலர்

புன்கணீர் பூசல் தரும்" என வள்ளுவம் கூறும் குறளின் உருவமாக திகழும் திரு. ராமமூர்த்தி அவர்கள் பகிர்ந்தளிக்கும் இத்தொடருக்கு "தாயுமானவர்" என்ற தலைப்பையே தேர்வு செய்தோம்.




இனி, அந்தத் 'தாயுமானவர்' பற்றி அவரது 'சேயுமானவர்' பயணிக்கும் நினைவுகளோடு நாமும் பயணிப்போம்...

"எனது சித்தப்பா பற்றி நான் எதைக் கூறுவது? என்பதுதான் எனது தடுமாற்றமே!.. பிறந்தது முதல் அவரது கரங்களில் தவழ்ந்த நினைவுகளில் எதனைச் சொல்வது? என்னை அவர் தாயுமாய் தந்தையுமாய் ஆசிரியருமாய் இருந்து வளர்த்த விதத்தை எவ்விதம் நான் பகிர்வது?" அந்தக் கேள்வியுடன் மீண்டும் வார்த்தைகள் தடைப்பட... கண்களில் நீர் பெருக்கெடுக்க... அவர் கேட்கும் கேள்வியில், கனத்த வலியுடன் நமக்குள்ளும் கேள்வி எழுகிறது.

உணர்வுக் கொந்தளிப்புடன் இருப்பவரிடம் எவ்விதம் ஒரு சமநிலையை ஏற்படுத்துவது? என்ற கேள்வியும் நமக்குள் ஏற்படுகிறது.

சில மணித்துளிகள் அவர் ஆசுவாசப்படுவதற்கான நேரம் எடுத்துக்கொண்டு அமைதியாய் கண்களை மூடி காத்திருந்தோம்.

கண்கள் மூடி அமர்ந்திருந்த அவரது

விழித்திரையில், கடந்த கால காட்சிகள் சடசடவென பலப்பல நிகழ்வுகளோடு பின்னிப்பிணைந்து முன்னும் பின்னுமாக ஓடியிருக்க வேண்டும்...

சில நிமிடங்கள் அமைதியில் கரைந்தன.

திரு.ராமமூர்த்தி அவர்கள் தன் சித்தப்பா... (இனி, இத்தொடரில் ‘சித்தப்பா’ என்ற வார்த்தை, மூன்றெழுத்து மந்திரமான திரு.எம்.ஜி.ஆர் அவர்களைக் குறிக்கும். அவரது ரசிகர்கள், அபிமானிகள் அவரை எவ்விதம் அழைத்து மகிழ்கின்றனரோ அந்தச் சொல்லையே இந்தச் ‘சித்தப்பா’ எனும் வார்த்தையின் மாற்றாகக் கொள்ளலாம்!) தன்னைத் தோளில் தூக்கிச் சுமந்த அந்த நாளை பசுமையாக நினைவு கூர்ந்தார்.



“அப்பொழுது ‘அபிமன்யு’ படம் வெளிவந்த நேரம், சேலத்தில் படப்பிடிப்பு நடக்கும் பொழுது ரயில்வே கிராசிங் மேம்பாலத்தில் ஏறி இறங்கும் போதெல்லாம் சித்தப்பா என்னைத் தோளில் தூக்கிச் சுமந்தபடி வந்த அந்த நினைவுகளை மறக்கவே முடியாது!

அப்போதுதான் அவர் திரையில் கதாநாயக அந்தஸ்துக்கு வந்து கொண்டிருந்த நேரம்! என் மீது சித்தப்பா வைத்திருக்கும் அன்பு ஒரு ல தாயைப் போல, தந்தையைப் போல காட்டிய பேரன்பு!

அவர் சுடப்பட்டு மருதுவமனையில் இருந்த சமயத்தில் அவர் உடனேயே அருகில் இருந்து அவரைப் பார்த்துக் கொண்ட அந்த நாட்களைத் தான் என் வாழ்க்கையில் நான் பெற்ற பெரும் பேறாக நினைக்கிறேன்!

காரணம், காலம் முழுதும் அவர் எங்களுக்காக எடுத்துக்கொண்ட அக்கறையும் அன்பும் உழைப்பும் அலாதியானது. அதற்கு எந்த வகையிலும் சிறிதளவேனும் அவருக்குத் திருப்பித் தரமுடியாத நன்றிக் கடனைப் பெற்றிருக்கும் எங்களுக்கு, குறிப்பாக எனக்கு, அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது ஒரு மகனைப் போல அவருக்கு நான் பணிவிடை செய்யக் கிடைத்த அந்த நாட்கள்தான் இந்த நேரத்தில் எனக்கு சட்டென நினைவுக்கு வருகிறது.




அவர் சுடப்படுவதற்கு முன்பாக, எனக்கென ஒரு நல்வழி ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக ‘சத்யராஜா பிக்சர்ஸ்’ என்ற பெயரில் ஒரு நிறுவனத்தைத் தொடங்கி, அதற்கு என்னை முதலாளியாக்கி ‘அரசகட்டளை’ படத்தில் அவர் நடித்தார்.

‘அரசகட்டளை’ படத்தின்போது மிகப் பெரிய நடிகர்கள் அப்படத்தில் பணியாற்றினார்கள். சரோஜாதேவி, ஜெயலலிதா, நாகேஷ், அசோகன், நம்பியார், மாதவி போன்ற மிகப்பெரிய நட்சத்திர பட்டாளங்கள் கொண்ட படமாக அந்தப்

படம் அமைந்தது.

ஆங்கிலப் படங்கள் பார்க்கையில் என்னைக் கண்டிப்பாக உடன் அழைத்துச் செல்வார். அப்போது படத்தில் வரக்கூடிய காட்சிகள் குறித்து நான் என்ன சொல்கிறேன் என்பதைக் கவனமாகக் கேட்பார். என்னுடைய கருத்துக்களுக்கு முக்கியத்துவம் அளிப்பார்.



அதுபோலவே, தான் நடிக்கும் படங்களில் வரும் காட்சிகள் குறித்து என்னிடம் விவாதித்து ஆலோசனை கேட்பார்.



மக்கள் திலகம் குண்டடிபட்டு மருத்துவமனையில் இருந்த போது உடன் ராமமூர்த்தி

ஒரு இளைஞனிடத்தில், அனுபவமிக்க ஒரு நடிகர், இயக்குனர், தயாரிப்பாளர் என்ற நிலையில் இருக்கும் அவர், அதை எல்லாம் கேட்க வேண்டுமென்று இல்லை! ஆனால் நான் என்ன நினைக்கிறேன் என்பதை அறிந்துகொள்ளும் ஆர்வம் அவரிடத்தில் எப்போதும் இருந்தது.

இதையெல்லாம்தான் அவர் எனக்கு வழங்கிய பாக்கியமாகவே கருதுகிறேன்.'மருதநாட்டு இளவரசி' படம் சமயத்தில் அவரிடத்தில் இருந்து எனக்கு ஒரு தந்தி வந்தது. காரை எடுத்துக்கொண்டு சென்ட்ரல் ரயில் நிலையத்திற்கு வரச்சொல்லியிருந்தார். நான்




அங்கு சென்றபோது திருமதி வி.என். ஜானகி அவர்களை முதன்முறையாக பார்த்தேன். அதன் பின்பே அவர் எங்கள் குடும்பத்துக்கு பரிச்சயமானார்!

'மர்மயோகி' படம்தான் சித்தப்பாவுக்கு மகத்தான திருப்புமுனை ஏற்படுத்திய படம்!

அதில் நடித்தபோதுதான் முதன்முறையாக அவர் கார் வாங்கினார்.

அந்தப் படத்தில் சில முக்கியமான அம்சங்கள் சித்தப்பாவுக்கு மறக்கமுடியாத அனுபவங்களாக இருந்தது.

(பயணிப்போம்..)

# பாரதி கண்ட

இராஜரிஷி ஜனகரின் சபையில் வேதாந்த விவாதங்கள் நடைபெற்றபோது அங்கே பெண் ரிஷியான கார்க்கியும் இடம்பெற்றிருந்தார். பல்வேறு மகான்களும் ரிஷிகளும் இந்த வெகு நுட்பமான விவாதத்தில் பங்கேற்று ஆத்ம விசாரத் தத்துவங்களை விளக்குகின்றனர்.

இறுதியில் ரிஷி கார்க்கி யாக்ஞவல்கியரின் கருத்தை ஏற்று அவரை அங்கீகரிக்கிறார். ரிஷி கார்க்கியின் அங்கீகாரத்தை மிகப் பெரும் பேறாகவே யாக்கியவல்கியர் ஏற்கிறார். ஒரு பெண் தன்னோடு விவாதிப்பதா, அவரின் அங்கீகாரம் என்பது பெரிதா என்ற ஆணாதிக்க மனப்பான்மை அப்போது அங்கே ஏற்படவில்லை. அத்வைதம் எனும் தத்துவத்தை ஏற்படுத்தித் தந்த ஆதிசங்கரர், மண்டனமிஸ்ரர் உடனான தன்னுடைய வாதத்திற்குத் தீர்ப்புச் சொல்லும் நடுவராக மகாகவி பாரதியை ஏற்றுக் கொண்டதில் அறிவில் சிறந்த பெண்ணின் பெருமை நிறைந்திருக்கிறது. இதுபோன்ற ஆயிரக்கணக்கான சம்பவங்கள் கொண்டது நம் வரலாறு.

சில தலைமுறைகளுக்கு முன் வரை பெண்களின் மதிப்பும் உயர்வும் எவ்விதத்திலும் ஆண்களைக் காட்டிலும் தாழ்வாக இல்லை. பெண்களின் புகழை பாரத தேசத்தின் எல்லாப் பகுதிகளிலும் காண்கிறோம். இப்படிப் பெருமையோடு வாழ்ந்த சமூகத்தில் பெண்களுக்குத் தாழ்வு ஏற்பட்டது என்பது மறுக்க முடியாத உண்மை. இந்நிலை தோன்றியதற்குப் பல வரலாற்றுக் காரணங்கள் இருக்கின்றன. ஆணாதிக்கச் சூழலுக்கு எதிராக குரல் கொடுத்த ஆண்களை வரலாறு அடையாளப்படுத்திக் கொண்டே இருக்கிறது. அவர்களுள் தமிழகத்தில்




முதன்மையானவராகப் பெண்ணின் பெருமைகளை, உரிமைகளை உரக்கக் கூறிய பெருமை மகாகவி பாரதிக்கு உண்டு.

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே அவர் முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து முடிந்ததும் இந்நாடே என்ற மகாகவி பாரதியின் பாடல்

இன்னுயிர் தந்தெமை ஈன்று வளர்த்து அருள்
ஈந்ததும் இந்நாடே — எங்கள்
அன்னையர் தோன்றி மழலைகள் கூறி
அறிந்ததும் இந்நாடே — அவர்
கன்னிய ராகி நிலவினி லாடிக்
களித்ததும் இந்நாடே — அவர்
மங்கைய ராயவர் இல்லறம் நன்கு
வளர்த்ததும் இந்நாடே — அவர்
தங்க மதலைகள் ஈ ன்று அமுதூட்டித்
தழுவியதும் இந்நாடே

நாட்டு வணக்கம் என்று பாடப்பட்ட இப்பாடல் மையப்படுத்துவது இந்தத் தேசத்தின் பெண்களை. மகாகவி பாரதியின் பெண்ணுரிமைப் பாடல்கள் எத்தனையோ இருந்தபோதிலும் இந்தப் பாடல் நுட்பமானது. பெண்களை மையமாகக் கொண்டது நம் தேசம் எனும் நுட்பம் இந்தப் பாடலின் சிறப்பு. இது பாரதி பெண்மையைப் போற்றியதற்கும் கொண்டாடியதற்கும் பெண்ணை முதன்மைப்படுத்தியதற்கும் சான்று.

காதல் ஒருவனைக் கைப்பிடித்து அவன் காரியம் யாவினும் கைகொடுத்து மாதர் அறங்கள் பழைமையைக் காட்டிலும் மாட்சி பெறச்செய்து வாழ்வோம் என பெண்ணின், புதுமையை ஏற்பதற்கான துணிவு, பழைமையான அறங்களைக் காப்பதற்கான வலிமை, எதனையும் முன்னெடுத்துச் செல்வதில் அவளுக்குள்ள ஆற்றல் இவற்றைப் பிரதிபலிக்கிறார்.

புதுமைப் பெண்ணிவள் சொற்களும் செய்கையும் பொய்ம்மை கொண்ட கலிக்குப் புதிதன்றிச் சதுர்மறை மாந்தர் வாழ்ந்த நாள் தன்னிலே

# பெண்ணியம்

## கோதை ஜோதிலட்சுமி

பொதுவான வழக்கமாம் என்று நம் தேசத்தில் வாழ்ந்த புராதனப் பெண்களின் வரலாற்றை, பெருமைகளை மீண்டும் மீண்டும் எடுத்துச் சொல்கிறார்.

பெண்கள் அறிவை வளர்த்தால் வையகம் பேதமை யற்றிடுங் காணீர் என்கிறார். பெண்களுக்கு எதிரான எத்தனையோ சமூக சீர்கேடுகள் அந்நாளில் நிலவியது என்றாலும் மகாகவி பாரதியின் மனதில் மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது பெண்கள் கல்வி பெற முடியாமல் இருந்த சூழல். அதனால்தான் அவருடைய கவிதைகள், கட்டுரைகள் பெண்ணின் அறிவாற்றலை, அறம் சார்ந்த அவளது வலிமையை மீண்டும் மீண்டும் பேசுகின்றன. பெண்ணின் அறிவும் அறமுமே முன்னேற்றத்துக்கும் அதன் வழியே புராதனமான இந்தத் தேசத்தின் மேன்மைக்கும் அவசியம் என்று கருதினார் மகாகவி பாரதி. நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும் ஞானச் செருக்கும் பெண்ணின் தேவை என்பதையும் இவற்றைக் கொண்ட பெண்களைச் செம்மை மாதர் என்று அவர் போற்றுவதும் இதன் அடிப்படையில்தான்.



கற்பூரச் சொற்கோ கவியரசர்

அறம் சார்ந்த செயல்பாடுகளையும் அறிவாற்றலையும் வளர்த்துக்கொள்வது பெண்ணின் சுதந்திரத்துக்கும் முன்னேற்றத்துக்கும் தேவையானது என்பதுதான் மகாகவி பாரதி கற்றுத் தந்த பெண் விடுதலை; பெண் உரிமை. அதேநேரத்தில் தற்போது அதிகமாகப் பேசப்படும் பெண்ணியம் என்ற கருத்தாக்கத்தை நாம் கவனிக்க வேண்டியது அவசியம்.




பெண்ணின் பார்வையில் இந்த உலகம் என்பதாக முதலில் பெண்ணியம் கருதப்பட்டது. பின்னர் பெண்களுக்கான உரிமைகள் பற்றிப் பேசத் தொடங்கியது. சமத்துவமின்மைக்கான காரணங்கள், சமத்துவத்தை அடைவதற்கான வழிமுறைகள், சமத்துவமின்மையை எதிர்க்கும் செயல்பாடுகள் என்று பெண்ணியம் எனும் சொல்லுக்கு வெவ்வேறு விதமாக வரையறைகளை நாளுக்கு நாள் தேவை கருதி மாற்றிக் கொண்டே போகிறார்கள். ஒரு கோட்பாடு என்பதை வரையறுக்கக்கூட இயலாத

ஒரு கருத்தாக்கம் எந்த விதத்தில் நமக்குப் பயன் தரப் போகிறது?




மேலை நாடுகள் அறிவியலில் பெரும் முன்னேற்றம் அடைந்திருந்த போதிலும் ஆண், பெண் என்ற உறவில் பெரும் தடுமாற்றத்தோடுதான் எப்போதும் இருந்து வருகின்றன. பெண்களுக்கு வாகனம் ஓட்டுவதில் தொடங்கி வாக்குரிமை வரை அனைத்துக்கும் அவர்கள் போராடும் சூழலில் நம் தேசத்தில் பெண்களுக்கு இவை தேவையா என்பது போன்ற சிந்தனையோ கேள்வியோகூட எழுந்ததில்லை.

பெண்ணியம் பற்றிய புரிதலும் உலகம் முழுவதும் வேறுபட்டதாகவே அமைந்திருக்கிறது. தமிழகத்தை அல்லது இந்தியாவைப் பொருத்தவரை பெண்ணியம் எனும் கருத்தாக்கம் ஏட்டளவில் மட்டுமே உள்ளது. பெருமளவில் சமூகம் இத்தகைய கருத்தாக்கங்களை ஏற்றுக் கொள்ளவில்லை. இதற்கு அடிப்படைக் காரணம் இந்தியா குடும்ப அமைப்பை நம்பும் நாடு. இந்தக் குடும்ப அமைப்பின் தலைவியாக இருப்பவள் பெண். ஆண் இல்லாத ஒரு குடும்பத்தைப் பெண்ணால் தெளிவாக வழிநடத்திச் செல்ல முடியும். ஆனால், பெண் இல்லாமல் போனால் அது குடும்பம் என்னும் அமைப்பிலிருந்து மாறுபட்டு விடும் சூழல்தான் இன்றுவரை நிலவுகிறது. அதனால், இத்தகைய உரிமை பற்றிப் பேசும் கருத்தாக்கங்கள் நம் நாட்டில் வெகுஜன மக்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. நம்முடைய சமூக அமைப்பு அறம் எனும் அடிப்படையை இன்றும் பேணுகிறது. குடும்பத்தினருக்கான கடமைகள், பொறுப்புகள் ஆகியவை முக்கியத்துவம் பெற்றவையாக விளங்குகின்றன.

தனி மனித சுதந்திரம் விருப்பம் பற்றி மேலை நாடுகள் பேசும் நிலையில் குடும்பம் பேணுவது என்னும் கொள்கையில் இந்தியா பல்லாயிரம் ஆண்டுகளாக வேரூன்றி இருக்கிறது. குடும்பம் சார்ந்த சிந்தனை பெண்ணியம் என்ற கருத்தாக்கம் தரும் சிந்தனையை ஏற்க மறுக்கிறது என்பதே இங்கு




நிதர்சனமான உண்மை. தனி மனித விருப்பம், சுதந்திரம் ஆகியவற்றைப் பெண்ணியக் கோட்பாடு அடிப்படையாகக் கொண்டிருக்க பொறுப்புணர்வு, கூட்டுவாழ்க்கை முதலானவற்றை நம் தேசம் அடித்தளமாகக் கொண்டிருக்கிறது. அதனால்தான் இங்கே இந்தக் கருத்தாக்கங்கள் வெற்றி பெறவில்லை.

அதே நேரத்தில் பெண்களுக்கான மரியாதை, அங்கீகாரம் ஆகியவை கிடைக்கப்பெற வேண்டும் என்பதிலும் மாற்றுக் கருத்து இல்லை.

பெண்ணியம் என்பது பெண்களுக்கான உரிமைகளைப் பெற்றுத் தருவது மட்டுமல்ல; சமூகத்தை மாற்றியமைக்க முயற்சி செய்வதாகும் என்று சார்லட் எடுத்துரைக்கிறார். இதற்கு நாம் மீண்டும் மகாகவி பாரதியிடம் செல்லலாம்.

அறம் பற்றிப் பேசும் மகாகவி பாரதி, ஒரு பெண் இந்தத் தேசத்தை உருவாக்குகிறாள். அவளது குழந்தைகள்தான் இந்தத் தேசத்தின் எதிர்காலம். எதிர்காலம் சிறப்புற வேண்டுமெனில் தாயாக இருக்கும் பெண். தன் மக்களை அதற்கேற்ப சிந்தனைத் திறத்தோடு வளர்க்க வேண்டும். ஒரு தலைமுறைப் பெண்கள் நினைத்தால் ஒரு மிகச் சிறந்த சமுதாயத்தை உருவாக்கிவிட முடியும். தொன்று தொட்டு நம் பெண்கள் இதனை உணர்ந்து மிகச் சிறந்த தலைமுறைகளை உருவாக்கினார்கள். இன்றைய சமூகத்தின் சீர்கேடுகளைக் களைய வேண்டுமானால், பெண்களை மரியாதையோடு பார்க்கும் ஆண் குழந்தைகளை வளர்த்தெடுக்க வேண்டும். ஆண்—பெண் ஒழுக்கத்தோடு வளர்க்கப்பட வேண்டியது சமூகத்தின் தூய்மைக்கும் வளர்ச்சிக்கும் அவசியம் என்பதை வலியுறுத்தி, அது நமது தேசத்தின் மதிப்புமிக்க தாய்மார்கள் கையில் இருக்கிறது என்று நம்பிக்கையோடு கூறியிருக்கிறார்.

கலிய ழிப்பது பெண்க ளறமடா என்று எல்லாக் கொடுமைகளையும் மூடத்தனங்களையும் அழித்தொழித்து அறத்தை நிலைநாட்டும் ஆற்றல் இந்தியப் பெண்களுக்கே உரித்தான இயல்பு என்று பெருமிதத்தோடு மகாகவி பாரதி பாடுகிறார்.

உயிரைக் காக்கும் சேர்த்திடும் உயிரினும் இந்தப் பெண்மை இனிதடா என்று போற்றியவர் வழியில் ஆரோக்கியமான சமத்துவ சமுதாயத்தை உருவாக்கும் செயலில் பாரதப் பெண்கள் ஈடுபடுவார்கள் என நம்புவோம்.


அலமாரி

# புத்தக விமர்சனம்

## ‘கடைசிப் புகையின் கல்லறை’.
## (கட்டுரை தொகுப்பு)

**நூல் ஆசிரியர்:**

**ஜெயபாஸ்கரன்**





**வெளியீடு:**

**வழுதி வெளியீட்டகம்**

**1/ 129, முதல் தளம்,**

**திருவீதியம்மன் கோயில் தெரு,**

**கிழக்குக் கடற்கரைச் சாலை,**

**கொட்டிவாக்கம், சென்னை–41**


கவிஞரும், சீரிய சமூக சிந்தனையாளருமான ஜெயபாஸ்கரன் கல்கி, அமுதசுரபி, தினமணி, தமிழ் ஓசை ஆகிய இதழ்களில் பல்வேறு தலைப்புகளில் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பே ‘கடைசிப் புகையின் கல்லறை’.

‘இந்தக் கட்டுரைகள் அனைத்தும் என் கண்களுக்கெதிரே நடக்கிற, சகித்துக் கொள்ளவோ, பொறுத்துக்கொள்ளவோ முடியாத, சக படைப்பாளிகளால் கண்டுகொள்ளாமல் விடப்படுகிற அல்லது அவர்களது இலக்கிய மேன்மைக்கு கீழானதாக கருதப்படுகிற அல்லது அவர்களுக்கு எழுதத் தோன்றாத சமூக நிகழ்வுகளின் வெளிப்பாடேயாகும்” என்று ஜெயபாஸ்கரன் ‘என்னுரை’யில் கூறியுள்ளதைப் போலவே, சமூக பிரக்ஞை சற்றுக் கூடுதலாகக் கொண்ட ஒரு மனிதனின் குமுறலாகவே அவரது கட்டுரைகள் அனைத்தும் உள்ளன.

ஒரு படைப்பாளி பிறரைத் திருத்துகிற இடத்தில் இருக்க வேண்டுமே தவிர, பிறரால் திருத்தப்படுகிற கூண்டில் நிற்கக்கூடாது என்ற உயர்ந்த கருத்தை விதைக்கும் ஜெயபாஸ்கரின் இந்தக் கட்டுரைத் தொகுப்பு

ஒவ்வொருவரும் படிக்க உகந்த உயர்ந்த கட்டுரைத் தொகுப்பு!

சிறுகதை



# ஊதா சட்டை

## இந்து

தேதி நாலு ஆயடுச்சா….ஏழு ஆனாதான் வாரகூலி கிடைக்கும்… ம்ம்..காலண்டர்ல தேதிகிழிக்கும் போது படிச்ச “இன்று சுபிட்ச மழைவருசிக்கும்“ வார்த்தைய திரும்ப திரும்ப சொல்லிப் பார்த்துகிட்டேன்… நல்லா இருக்கு மனசுக்கு.


இன்னிக்கும் வீடுபோய் சேரவும் தங்கம் பஸ் வார நேரமும் ஒன்னாய்டும். ஏழு மணிக்கு முன்னாடியே போனா காரவீட்டுக்காரக வீட்டுல ஒருமணி நேரம் புளி பிரிச்சா வாரக்கடைசில காசு கிடைக்கும். வேலை முடிச்சு திரும்பற வழி இப்ப கொஞ்சம் கொஞ்சமா தார் ரோடாயிடுச்சு. முன்னாடியல்லாம் பரமேசும் நானும் தென்னங்குரும்ப காய் பொறுக்கி மாத்தி மாத்தி அடிச்சுகிட்டும் மாம்பிஞ்சு கடிச்சு துப்பிக்கிட்டும் ஓடிப்புடிச்சுகிட்டே வந்துருவோம். இப்ப ஏதோ டவுனு மில்லுகாரகவ, மாந்தோப்பு, காய் பிடிச்சு நிக்கிற தென்னந்தோப்பு இளநீரா இனிச்சுகிடக்கற கிணறுன்னு எல்லாத்தையும் பேசிமுடிச்சுட்டாங்க. அதனால இரண்டு வாரமா தோப்ப ஒட்டுனாப்ல இருக்கிற பாதையில தான்.

இப்ப அவளும் வரதில்ல. நா மட்டும்தான் போரேன். மனசுக்கு புடிக்கிலதான். என்னவிடவும் பாவம் பரமேசு. கிணத்து மேட்டுல முருங்கமரம் நல்லா தனிச்சு கிடைக்கும். ஒரு நா வுட்டு ஒரு நா படக் படக்குன்னு ஒடிச்சு ஒயர்கூடையில வைச்சுகிட்டு வீட்டுக்கு கொண்டாந்து ஆய்ஞ்சி அலசி, காலைக்கு பதமா வதக்கி எடுத்துட்டு வந்துருவா. அங்கிக்கும் ரொம்ப கஷ்டம்தான். ஆனாலும் எங்க சிரிப்புக்கும் ரசிப்புக்கும் குறை இருந்ததே இல்ல.




இன்னும் பத்து நாள் இருக்கு எம்மாமா பிறந்தநாளுக்கு. அவுக இங்க இல்ல. காலேஜ்லாம் போய் படிச்சு இப்ப டவுனல வேலை பார்க்குது. மூனுமாசத்துக்கு ஒரு முறை வரும். நாலு நாள் இருந்துட்டு கோயமுத்தூர்க்கு மொத பஸ் புடிச்சு போயிடும்.

மாமான்னு நெனப்பு வந்த பிறகுதான் ஒருவளத்தி கூடிருக்கேனாம் நானுன்னு அம்மாயிதான் சொல்லும். எம்மாமா நடக்கிற அழகு இருக்கே... இன்னிக்கு முழுக்க சொன்னாலும் தீராது. நான் அதுக்கு நேர்மாறு… படிப்பும் ஏறல.. பத்தாப்பு முடிச்சும் நா உக்காரலன்னு அம்மாயிக்கு கவல கூடிப்போச்சி. அத்தை தான் பொழுதுக்கும் ரோசனை சொல்லிக்கிட்டே இருக்கும். எனக்கும் விளங்கி தொலைக்கில. எனக்கு நல்லா நியாபகம் இருக்கு… அன்னிக்கு ஊர்ல மாரியம்மனுக்கு கம்பம் நடற நோம்பு.. காலைலயே ஆத்துக்கு போய் குளிச்சிடலாம்னு நானும் பரமேசும்



துணி எடுத்துகிட்டு கிளம்பியாச்சு.

வெளியூர்காரக வந்திருந்தா கிளம்பகூடாது, உள்ளூர்காரங்களும் வெளிசேதிக்கு போக மாட்டாங்க காப்புகட்டிட்டா. கொட்டடிக்கிறவங்க பந்தல் அலங்காரம் போடறவங்களுக்குன்னு ஊர் பெரியதனக்காரங்க பள்ளிக்கூடத்துக்கு பக்கத்துல வீடு குடுத்திருந்தாங்க. நாங்க போக வர கிண்டலும் பேசுவாங்க. நாங்க பெரிசா கண்டுக்கிட மாட்டோம்.

அன்னிக்கு நேரமே குளிக்கபோனபோது அந்த பசங்கள அங்கனகுள்ள பார்த்தவுடன கொஞ்சம் படபடப்பாய்டுச்சு. படிக்கட்டு இரண்டா பிரிச்சு இருந்தாலும் எங்க ஊர் ஆளுக புள்ளைக குளிக்கிற பக்கத்துக்கு வர மாட்டாக. கொஞ்சம் சுத்திப்போய் பெரிய பாறை மேடு தாண்டி தான் இறங்குவாங்க.

இன்னிக்குன்னு பார்த்து நேரமே வந்து தொலைச்சிட்டோமோன்னு மனசு அடிச்சுகிச்சு. தண்ணில இறங்குன புறவு தலைநனைக்காம வீடு போன அம்மாயிக்கும் சித்திக்கும் பதில் சொல்லி சடவாய்டும். பரமேசு பெரிசா கண்டுக்காம இறங்கிட்டா. நா முட்டி வரை நனைச்சுகிட்டு அவகிட்ட சாடைகாட்றேன். அவ கண்டுக்கிடவே இல்ல. அந்த பசங்க பாட்டு இப்ப சத்தமாயிடுச்சு. இப்ப வரியா இல்லயாடின்னு நா கேட்டகுரல் எனக்கே கேட்கல. ஆனா வேற குரல் வந்துச்சு...




ஊர்ல நோம்பின்னு உங்கள விடறேன்... இனி ஒருத்தன்கூட இங்க வர பார்த்தேன்னா அவ்ளோதான்னு எங்க சின்ன மாமா குரலு... இப்பதான் மொதவாட்டி கேட்குறேன். ஏய்... அடியே உன்னத்தான்... குளிச்சிட்டியான்னு என்னய கேட்டுச்சு... கொஞ்சமா மீசை வளர்ந்து முடியல்லாம் இரண்டு கொத்தா புடிக்கிலாம்போல அவ்ளோ முடி...சட்டைபட்டன்ல கடைசி இரண்டும் தான் கூடி இருக்கு...அதுவும் குளிக்கத்தான் வந்திருக்குபோல. ஏய் பரமேசு இவள கூட்டிட்டு போய் வீட்ல விடல, அப்பறம் உனக்கு இருக்குனுச்சு... வாரிச்சுருட்டிக்கிட்டு என்னயையும் இழுத்துகிட்டு படியேறிய அன்னிக்குத்தான் நான் பெரிய மனுசி ஆனேன்.

சின்ன வயசில இருந்தே என்சின்ன மாமா கொஞ்சம் விலகித்தான் இருக்கும் சொந்தங்கள விட்டு. கவிதை எழுதும்.. கதை எழுதும்... பாட்டுகூட

படிக்கும்... கோபம் வந்துச்சுன்னா சுத்தி இருக்குற வீட்டுகாரங்களும் சேர்ந்து கதவ சாத்திக்கனும்.. என்ன காரணமுன்னு தெரியாத போதும் நா மாமாக்கு தான் சப்போட்டு பண்ணுவேன்.

எங்க அம்மாயி தான் அடிக்கடி சொல்லிடும் வாய்விட்டு...ஏன்டா மயிலா இந்த கருவாச்சிய கட்டிக்கிட்டு போய்டுன்னு.. எனக்கு திக்குங்கும், நிக்காம ஒரே மூச்சில ஓடியாந்துருவேன். உண்மைய சொன்னா நா பொருத்தமும் இல்ல மாமாக்கு. நல்லா



இருக்கனும்ம்னு மட்டும் வருசம் தவறாம மாவிளக்கு எடுப்பேன் கன்னிமார் கோயிலுக்கு.

நா பத்தாவது பாஸானதும் அம்மாக்கு முடியாம போனதுக்கும் சரியாபோய்டுச்சு. பக்கத்து மில்லுக்கு வேலைக்கு போவேன். நடவு வேலை நடக்கறப்போ மொத நடவு நட்டுதரசொல்லுவாங்க. பெருங்காசு இல்லன்னாலும் பஞ்சமில்லாம இருக்கும்.




நாளைக்கு மறுநாள் பரமேசுக்கு பொண்ணு பாரக்க வாராகலாம் உடுமலைபேட்டைல இருந்து. வெத நெல்ல காய வைச்சுகிட்டே அம்மா சொல்ல சொல்ல கண்ணுக்குள்ள ஏதோ முட்டிக்கிட்டு வந்துச்சு...

பின்வாசல்வழியா ஓடிப்போய் அவளுக்கு முத்தம் கொடுத்தா, ஓய் என்ன புள்ள ஈரம் அதிகமாஇருக்கு... இது எனக்கா உம் மாமாவுக்கான்னு கேட்கறா கிசுகிசுன்னு. கூடயே திரியுதுக இரண்டும் புறந்தாபுடிச்சு... இருக்காதா பின்னனு சுமதியக்கா சொன்னதுக்கு தலையாட்டிக்கிட்டேன்.

விசேசம்லாம் முடிஞ்ச பிறகு பரமேசு சொன்னா...புள்ள சும்மா மனசுக்குள்ள போட்டு பாய் நெய்யாத ...நேரா போய் உங்கத்தைகாரிகிட்ட கேட்டுரு. புரவு பார்த்துக்கலாம்னு. விடிஞ்சதும் குளிச்சிகிட்டு அம்மா குடுக்கசொன்ன அகத்திகீரையையும் நாம்பிகிட்டு போய் நின்னேன்.

வாடியம்மா என்ன நேரமே குளிச்சுட்ட..கல்லுல தேங்காசட்னி அரைச்சு குடுத்துட்டு சாப்டுட்டு போன்னுச்சு. நெக்கு நெக்குன்னு ஆட்டி வழிச்சு கழுவி எடுத்தபோது அத்தையே வாய்விட்டுச்சு... அடுத்தவாரம் வருவான் புள்ள உங்க சின்னமாமா காரன். விட்டுட்டின்னா டவுனு காரிய கூட்டயாந்துருவான் பார்ததுக்க அப்பறம் நானும் பெரிய மாமனும் பொறுப்பில்லன்னு சொல்லி சிரிச்சிகிட்டு மருதாணி எப்ப வைச்சுக்கபோறன்னு கேட்டுச்சு... எங்காலு நிக்கில தரையில.. மொசு மொசுன்னு கண்ணுல தண்ணி. எனக்கு எப்பவுமே அப்பிடித்தான்..

ஊருக்கு வந்தவுடன் சொல்லனும் ...மாமா மாமா காணாம போன ஊதாகலர் சட்டைய நான் தான் வைச்சிருக்கேன்னு...

அது மீசைய தொட்டு பார்க்கனும்னு. முத்தமல்லாம் கேட்டா தப்பா நினைச்சுக்குமோ. நா இன்னுங்கொஞ்சம் நிறமா இருந்துருக்கலாம்னு... நெனப்பு தறிகெட்டு ஓடுது.

அப்போல்ல இருங்துதான் இந்த நெனப்பு, ஒரு சட்டை வாங்கி தரனும்னு. மாமா சட்டை அளவல்லாம் பார்த்து வைச்சிட்டேன். விலையெல்லாம் விசாரிச்சுட்டேன். எழுநூருபாய்காச்சும் வாங்கிடனும்னு இருக்கேன். மில்லுல இருந்து சீக்கிரம் போகனும் புளியடிக்க...

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

10 Years

மனமார்ந்த நன்றி!!!


Thank you!!!

# அறிவோம் தமிழர்

## இந்திய அரசமைப்பின் மறுவரையறையாளர் அண்ணா!

**சா**ம்ராஜ்யங்களின் கல்லறை என்று வர்ணிக்கப்படும் புது டெல்லியில், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் அஸ்தமித்த 1947—ல் நடந்த ஆட்சி மாற்றக் காட்சிகளை உன்னிப்பாகக் கவனித்தவர்களில் தனிச்சிறப்பு வாய்ந்தவர் அண்ணா. திராவிட இயக்கப் பார்வையில், இந்திய சுதந்திரம் என்பது ஆங்கிலேயர்களிடமிருந்த ஆட்சி இந்தியாவில் உள்ள பிராமணர் உள்ளிட்ட முற்பட்ட சாதியினரின் கைகளுக்கு மாறிய ஒரு சம்பவம்

தானே ஒழிய, அது ஜனநாயகத்தின் வருகை அல்ல; பிராமணிய நாயகத்தின் வெற்றி என்று வர்ணித்த பெரியார், ஆகஸ்ட் 15, 1947—ஐ ஒரு துக்க நாள் என்றும் அழைத்தார். அண்ணா தன் சமகால உலக அரசியல் போக்குகளோடும், தான் வாழ்ந்த தமிழ்ச் சமூகத்தின் வரலாற்றுக் கட்டத்தோடும் அந்த நிகழ்வைப் பொருத்தினார். அந்த விஷயத்தில் பெரியாரிடமிருந்து அவர் வேறுபட்டார். இந்தியாவில் உருவாகும் புதிய அரசு பெரியார் சொன்ன பிராமணநாயகமாக மட்டுமல்ல, ஒரு பனியா ஏகாதிபத்தியமாகவும் இருக்கிறது என்று 1946—லேயே ‘பணத்தோட்டம்’ என்கிற தன் புகழ்பெற்ற நூலில் அண்ணா வர்ணித்திருந்தாலும், புதிய அரசை அவர் முற்றிலும் நிராகரிக்கவில்லை. இரண்டு எதிரிகளில் ஒரு எதிரி ஒழிந்தான் (ஆங்கிலேயர்கள்), மற்றுமொரு எதிரி இருக்கிறான் (வடவர்கள்) என்று கூறிய அண்ணா, மீதிச் சுதந்திரத்துக்கான போராட்டம் தொடர்கிறது என்று கருதினார். எனவேதான், 1947 ஆகஸ்ட் 15—ஐ அவர் இன்ப நாளாகவும் கருதினார். உலகம் கூர்ந்து கவனிக்கும் ஒரு மகத்தான சம்பவமாக அந்த நாளை அண்ணா பார்த்தார்.







### இந்தியாவை எப்படிப் பார்த்தார் அண்ணா?


புதிய இந்திய அரசு பொறுப்பேற்றுக்கொள்வதற்கு முன்பிருந்தே அதன் குணாம்சங்களை வர்ணிக்கத் தொடங்கிய அண்ணா, (அன்றைய உலகச் சூழ்நிலையில்) இந்தியாவின் சுதந்திரம் என்பது தவிர்க்க முடியாத ஒரு நிகழ்வு என்பதை



# பெருமை

அறிந்து, திராவிட இயக்கத்தின் மூலாதாரக் கோட்பாடுகளான திராவிட நாடு உள்ளிட்ட கோரிக்கைகளை அதற்கேற்பப் புதுப்பிக்கத் தொடங்கினார் அண்ணா பிற்காலத்தில் அவரது வெற்றிக்கும் தோல்விக்கும், தோல்வியிலிருந்து பெற்ற பாடத்துக்கும் காரணமாக இருந்த பல பார்வைகள் இந்தப் புள்ளியிலேயே அண்ணாவிடம் கருக்கொண்டன.

ஆழி.செந்தில்நாதன்




1947 ஆகஸ்ட் 15—ஐ மறுவியாக்கியானம் செய்யத் தொடங்கியது முதல் வாழ்வின் இறுதி நாள் வரை, அவர் தொடர்ச்சியாக எதிர்கொண்ட ஒரு போராட்டக் களம் உண்டென்றால், அதை இந்தியா என்னும் அரசோடும், இந்தியா என்னும் எண்ணத்தோடும், இந்தியாவின் அரசமைப்போடும் அவர் மேற்கொண்ட அரசியல் சித்தாந்தப் போராட்டமே ஆகும்.

பெரியாரைப் போலவே அண்ணாவும் இந்தியாவை ஒரு தேசமாகப் பார்க்கவில்லை. அவர் முன்மொழிந்த திராவிட நாடுகூட அவரைப் பொறுத்தவரை ஒற்றை தேசமல்ல. தமக்குள் பொதுத்தன்மைகள் கொண்ட தமிழர்கள், மலையாளிகள், தெலுங்கர்கள், கன்னடர்களின் தேசங்களின் கூட்டமைப்பே திராவிட நாடு என்பதே அவரது கருத்து. ஒரு மத்திய அரசுகூடத் தேவைப்படாத கூட்டமைப்பு அது என்று சொல்லலாம்!

## அண்ணாவின் தேசியப் பார்வை


1947—க்கு முன்பு, இந்தியாவை நெகிழ்வான கூட்டமைப்பாகக்




கண்ட காபினட் மிஷன் யோசனைகள் முன்வைக்கப்பட்டபோது, இந்தியாவை ஒரு பாதுகாப்புக் கழகமாக — வட்டார ஐ.நா. சபை அல்லது நேட்டோபோல — அண்ணா கற்பிதம் செய்து பார்த்திருக்கிறார். தமிழ்நாடு என்பது தேசம், திராவிட நாடு என்பது ஒரு கூட்டரசு, இந்தியா என்பது ஒரு பாதுகாப்புக் கழகம். இதுவே அவரது தேசியம் குறித்த பார்வை என்று சொல்லலாம்.

1950—களில் அண்ணா மிகத் தீவிரமாக திராவிட நாடு கோரிக்கையை வலியுறுத்தினார். ஆனால், 1956 மொழிவாரி மாநிலங்களின் பிரிவினை, தேர்தல் பங்கேற்பு, நேரு—காமராஜர் ஆட்சிக்காலத்தின் சமூக மாற்றங்களை உற்றுணர்ந்தமை ஆகியவற்றுக்குப் பிறகு, தனது விடுதலை நிறைவேறுவதற்கு வழியற்ற கனவாக

மாறிக்கொண்டிருந்ததை அண்ணா உணரவும் செய்தார். இந்தக் காலகட்டத்தில், தன்னளவில் விடுதலைக் கோரிக்கையைக் கைவிடாத நிலையிலேயே, அண்ணா மாநிலங்களவைக்குச் சென்றார். இந்தியத்தையும் அதன் சவாலையும் டெல்லியிலேயே எதிர்கொண்டார்.




1962 ஏப்ரலில், குடியரசுத் தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்போது, அண்ணா தன்னுடைய முதல் உரையை ஆற்றினார். அந்தக் கன்னிப் பேச்சிலேயே இந்தியா என்கிற கட்டமைப்பைப் பற்றிய தனது மிக முக்கியமான கேள்விகளை முன்வைத்துவிடுகிறார் அண்ணா. இந்தியாவிலுள்ள புனிதப் பசுக்களிலேயே ஆகப் பெரிய புனிதப் பசுவான தேசிய ஒருமைப்பாடு என்கிற கருத்தையும் அவர் விட்டுவைக்கவில்லை. "ஐயா, நான் கூறுவது தவறாக அர்த்தப்படுத்திக்கொள்ளப்படுமோ என்கிற சிக்கல் இருந்தாலும், தேசிய ஒருமைப்பாடு என்ற சொல்லே தன்னளவில் முரண்பாடு கொண்ட ஒன்று என நான் சுட்டிக்காட்டலாமா? மக்கள் ஒருமைப்படுகிறபோதுதான் தேசம் என்ற ஒன்றே உருவாகிறது. அவர்கள் தேசமாக ஒருமைப்பட்டுவிட்ட பிறகு, தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்த என்ன அவசியம் எழுகிறது? எனவே, நம்மைத் தடுத்து நிறுத்தி வைத்திருக்கும் எண்ணங்களின் வறுமையைத்தான் இந்தத் தேசிய ஒருமைப்பாடு என்கிற சொல் காட்டுகிறது" என அண்ணா கூறினார். அந்த அவையில் அந்தச் சொற்களை எவ்வாறு இந்தியா எதிர்கொண்டிருக்கும் என ஊகிப்பது




கடினமல்ல. செவிட்டுக் காதுகளில் தொடர்ந்து ஊதினார் அண்ணா: "எனவே, நான் விரும்புவதெல்லாம் இதுதான்: மாற்றி யோசிப்போம். நம்மிடம் ஒரு அரசமைப்பு இருக்கிறதே! இந்த நாட்டின் ஜாம்பவான்கள் உட்கார்ந்து அதை வடிவமைத்திருக்கிறார்கள். ஆனால், தேசம் என்ற ஒரு சொல்லை ஒரு மறு—சிந்தனை, மறு—சீர்தூக்கல், மறு—மதிப்பீடு, மறு—வியாக்கியானம் செய்வதற்கான காலம் வந்துவிட்டது!"

## பிரிவினை என்பது எதிரித்தன்மை அல்ல

அண்ணா இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள தேசிய இனங்களின் வித்தியாசங்களைத் தான் பேசினாரே ஒழிய, அதை வெறுப்பாகவும் பகைமையாகவும் முன்வைத்தது இல்லை. நான் வேறு இனத்தைச் சேர்ந்தவன், ஆனால், அது பகை இனமாகத்தான் இருக்க வேண்டும் என்று அதற்குப் பொருளல்ல என்றார். "எங்களுக்கென்று சில தனித்தன்மைகள் உள்ளன, இந்த நாட்டுக்கு அல்லது இந்த உலகத்துக்கு அளிப்பதற்கென சில சிறப்பம்சங்கள் உள்ளன. அதற்காகவே சுயநிர்ணய உரிமையை நாங்கள் கேட்கிறோம்" என்று அவர் வாதாடினார். சுயநிர்ணய உரிமைக்கான போராட்டமானது, இந்தியத் துணைக்கண்டத்தின் தேசிய இனங்கள் சகவாழ்வு வாழ்வதற்கான வாய்ப்பை மறுத்துவிடவில்லை என்பது அண்ணாவின் வாதங்களின் சாராம்சம்.

அண்ணாவின் மறுவரையறைகள் தொடர்ந்தன. திராவிட நாடு கோரிக்கையைத் தொடர முடியாமல் அண்ணாவை முடக்கிய, இந்திய அரசமைப்பின் 16—வது சட்டத் திருத்தம் தொடர்பான மாநிலங்களவை விவாதங்களில் (டிசம்பர் 1963) அதைப் பார்க்க முடியும். பேச்சுரிமை, கருத்துரிமை குறித்த அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்தும் அரசமைப்பின் கூறு 19—ஐத்தான் அப்போது அரசு திருத்தியது.

அதன்படி சுயநிர்ணய உரிமையைக் கோரும் ஒரு கட்சி தேர்தலில் போட்டியிட முடியாது, பிரிவினை குறித்துப் பிரச்சாரம்கூடச் செய்ய முடியாது எனப் பல கட்டுப்பாடுகள் போடப்பட்டன. திமுகவைத் தடைசெய்வதற்கான அறிகுறி அது என்று சரியாகவே கணித்திருந்தார் அண்ணா. சுயநிர்ணய உரிமையைப் பெறுவது ஒருபக்கம் இருக்கட்டும், அதைப் பற்றிப் பேசுவதற்கே உரிமை

இல்லையா எனக் கேள்வி எழுப்புகிற நிலையில் அவர் இருந்தார், அப்போது இறையாண்மை என்கிற கருத்தாக்கத்துக்கும் ஒரு மறுவிளக்கம் தந்தார். "எங்கள் கோரிக்கை இறையாண்மையை அபாயத்துக்குள்ளாக்குகிறது என்று ஏன் நினைக்கிறீர்கள்? இதற்குப் பதில் அளிக்கும் முன்பு, இறையாண்மை என்றால் என்னவென்று பொருள் கொள்கிறோம் என்பதில் நாம் மிகவும் தெளிவாக இருக்க வேண்டும். இறையாண்மை மக்களிடமே தங்கி இருக்கிறது என அரசமைப்பின் முகவுரை கூறுகிறது. சட்டம் சார்ந்த இறையாண்மை, கூட்டாட்சி ஒன்றியத்துக்கும் அதன் உறுப்பு அலகுகளுக்கும் (மாநிலங்கள்) பிரித்தளிக்கப்பட்டுள்ளன. எங்களுடைய திட்டம் மாநிலங்களை மேலும் கூடுதலான, திறன்மிக்க இறையாண்மை உடையவையாக ஆக்குவதுதான் என்று ஏன் நீங்கள் எடுத்துக்கொள்ளக் கூடாது? இறையாண்மை என்பது ஒட்டுமொத்தமாக ஏதோ ஒரு குறிப்பிட்ட இடத்தில் தங்கியிருக்கவில்லை" என்று வாதிட்டார்.

இந்த சட்டத் திருத்தம் கொண்டுவந்த தடைக்குப் பிறகு திமுக பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டது. ஆனால், மாநிலங்களின் இறையாண்மையை 'அதிகரிக்கிற', இந்தியாவை ஒரு 'பாதுகாப்புக் கழக'மாக (மட்டுமே) பார்க்கிற தன் மறுவியாக்கியானத்தை அண்ணா கைவிடவில்லை.

## தாய்க்குப் பெயரை மீட்டளித்த தனயன்

'திராவிட நாடு' எனவும் 'ஹோம்லேண்ட்' எனவும் இதழ்களை நடத்திய அண்ணாவின் மனத்திலிருந்த பொன்னுலகம் என்பது, தேசியத்தைவிட மிக ஆழமான உணர்வை வெளிப்படுத்தும் 'தாயகம்' என்கிற கருத்தாக்கமாகும் — அவருடைய வீட்டின் பெயரும் அதுதான். சென்னை மாநிலம் தமிழ்நாடு எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டதில், அவரது நீண்ட நெடிய பங்களிப்பு அதை உணர்த்தும். அவர் தாயின் பெயரை மீட்டளித்த தனயனாகப் பார்க்கப்பட்டதில் வியப்பில்லை.

திராவிட நாட்டை அடையாதபோதும் அவர் சுடுகாட்டை அடையவில்லை. மாறாக வேறு ஒரு பாதையில் பயணத்தைத் திருப்பினார். அந்தச் சித்தாந்தத் திருப்பம் மிக முக்கியமானது, காலப் பொருத்தம் உடையது. ஏனென்றால், அவர் பிரிவினைக் கோரிக்கையைத்தான் கைவிட்டார், ஆனால், பிரிவினைக்கான காரணங்களோ தொடர்ந்து நிலவின என்றார். எனவே, அவர் தன் சுதந்திர வியூகத்தைக் கூட்டாட்சிக்கும் தன்னாட்சிக்குமான வியூகமாக மாற்றியெழுதினார். நூறு ரூபாயை இரண்டு ஐம்பதாக மாற்றிக்கொண்டார் என்று அவரது உரையாடல் பாணியில் இதைச் சொல்லலாம்!

## தொடர்ந்து அரசமைப்பு மாற்றத்தை வலியுறுத்தியவர்

இந்தியாவில் மொழிவாரி அமைக்கப்பட்ட மாநிலங்கள் ஒருவகையில் தேசிய இனங்களைப் பிரதிநிதித்துவப் படுத்துபவை என்பதாலேயே, மாநிலங்களைப் பிரதானப் படுத்தி இந்திய அரசமைப்பைத் திருத்தி எழுத வேண்டும் என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தினார் அண்ணா. "மக்களின் சுக துக்கத்தோடு பின்னிப்பிணைந்திருப்பது மாநில அரசுதானே தவிர, மத்திய அரசு அல்ல; மத்திய அரசின் வலிவு அசாமுக்கு அச்சமூட்ட, தமிழ்நாட்டைத் தத்தளிக்கவைக்க, கேரளத்துக்குக் கலக்கமுண்டாக்கத்தான் என்றால், நமது சுதந்திரச் சிந்தனையைச் சிறுகச் சிறுக அழித்து, சிந்திக்கும் திறனே இல்லாமல் ஆக்குவதற்குத்தான் என்றால், நமது கூட்டுச் சக்தியின் மூலம், நம்மில் ஒவ்வொருவருடைய வலுவையும் கொண்டு அந்த அக்கிரம வலிவைச் சிறுகச் சிறுகக் குறைப்பதுதான் எங்கள் கடமையாக இருக்கும்!"

அண்ணாவின் இறுதிக் கட்டுரைகளில் ஒன்று 1969 'காஞ்சி' பொங்கல் மலரில் அவர் எழுதியது — இதற்குப் பின் சில வாரங்களில் அவர் மறைந்துவிடுகிறார். அதில் அண்ணா கூறுகிறார்:"மாநிலங்கள் அதிக அளவில் அதிகாரங்களைப் பெறத்தக்க விதத்தில் இந்திய அரசியல் சட்டம் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பது பற்றி, வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் எடுத்துக்கூறிவருகிறேன். இதற்கான நல்லாதரவு நாளுக்கு நாள் வளர்ந்தபடி உள்ளது என்பதிலே எனக்குத் தனியானதோர் மகிழ்ச்சி." அப்பணியை அவர் தொடர முடியாமலானது தமிழ்நாட்டுக்கு மட்டும் அல்ல, இந்தியாவுக்கே ஒரு பேரிழப்பு.




தேசிய இன உரிமைக் களத்தில் அவர் முற்றுப்புள்ளி வைக்காமல் கமா போட்டுவிட்டுச் சென்றார் என்பது மட்டுமல்ல, தமிழ்நாட்டிலும் ஒரு சில மாநிலங்களிலும் மட்டுமே இருந்த இனப் போராட்ட ஈட்டிகளை

இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள அத்தனை தேசிய இனங்களுக்குமான கூட்டாயுதமாகவும் அவர் மாற்றி விட்டார். அது ஒரு நாள் துணைக்கண்ட அரசியலை முகம் மாற்றவும் கூடும்!77




## இரண்டாம் பாகம் : காஞ்சி முற்றுகை

## மாமல்லர் ஊகம்

## 30

பாறையிலே தெப்பம் மோதப்போன சமயத்தில், சிவகாமி 'ஆ' என்று சத்தமிட்டுக்கொண்டு படகில் எழுந்து நிற்க முயன்றாள். அடுத்த கணத்தில் அவள் தூக்கித் தண்ணீரில் எறியப்பட்டாள். கண் முன்னால் ஆயிரம் மின்னலின் ஒளிபோல் பிரகாசமாயிருந்தது. அப்புறம் ஒரே இருள்மயமாயிற்று. காதில் 'ஙொய்' என்ற சத்தம் ஒலித்துக் கொண்டிருந்தது. வெகு நேரமாகத் தோன்றிய உணர்ச்சியற்ற நிலைக்குப் பிற்பாடு ஏதோ உணர்ச்சி உண்டாவதுபோல் இருந்தது. கால் விரல்களிலே மணல் தட்டுப்படுவதுபோல் தோன்றியது. பானைத் தெப்பத்தில் ஏறி வந்தது, தெப்பம் பாறையிலே மோதப் போனது முதலிய விவரங்கள் ஒரு கணத்தில் ஞாபகத்துக்கு வந்தன. உடனே, தான் தண்ணீருக்குள்ளே மூழ்கியிருப்பதும், மூச்சு விடுவதற்குக் கஷ்டப்படுவதும் உணர்வில் தோன்றியது.




'ஆகா! மாமல்லரும் மூழ்கியிருப்பாரல்லவா? இரண்டு பேரும் சேர்ந்துதானே வெள்ளத்திலே மூழ்கினோம்? ஒருவர் கையை ஒருவர் பிடித்துக்கொண்டு செத்துப் போகக் கூடாதா?" என்ற எண்ணம் மின்னல் போல் உதித்தது. அதே கணத்தில் ஒரு கரம் அவளுடைய கரத்துடன் தட்டுப்பட்டது. மறுகணத்தில் அந்தக் கரம் அவளுடைய கையைப் பற்றியது. ஆகா! அது மாமல்லரின் உறுதியான கரம்தான். சந்தேகமில்லை. நமது கடைசி மனோரதம் உண்மையிலேயே நிறைவேறப் போகிறதா? சண்டையும், சூழ்ச்சியும் வஞ்சகமும் கொடுமையும் நிறைந்த இந்த உலகை விட்டு நீங்கிச் சொர்க்கலோகத்தில் புகும்போது தானும் மாமல்லரும் கைகோத்துக் கொண்டு போகப் போகிறோமா? இதென்ன! கால் நன்றாய் ஊன்றுகிறதே! இதோ கூழாங்கற்கள் காலில் தட்டுப்படுகின்றனவே! இதோ திடீரென்று வெளிச்சம்.'




தண்ணீர் வரவரக் கீழிறங்கி, கழுத்து மட்டுக்கும் வந்து மார்பு மட்டுக்கும் வந்து, பிறகு இடுப்பு மட்டுக்கும் வந்து விட்டது. ஆனால் பிரவாகத்தின் வேகம் மட்டும் குறைய வில்லையாதலால் சிவகாமியை உருட்டித் தள்ளப் பார்த்தது. அதோடு மூக்கிலிருந்தும் வாயிலிருந்தும் தண்ணீர் கொட்டியபடியால் சிறிது நேரம் மிக்க வேதனையாயிருந்தது. இவ்வளவு அவஸ்தைகளுக்கிடையில் தன் கரத்தை மாமல்லர் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு நிற்பதையும் தன்னைப் போலவே ஆயனர், குண்டோதரன், அத்தை எல்லோரும் வெள்ளத்தின் வேகத்தினால் தடுமாறிக் கொண்டிருப்பதையும் சிவகாமி கண்டாள். சுகர் வட்டமிட்டுக் கொண்டு 'கீச்' 'கீச்' என்று கத்துவதையும், ரதி எப்படியோ வெள்ளத்திலிருந்து பிழைத்து, கரை மீதிருந்த பாறையில் தலையை வைத்துக் கொண்டு ஏறமுடியாமல் கால்களை உதைத்துக் கொள்வதையும் பார்த்தாள்.

பானைத்தெப்பம்மோதிய இடத்தில் வெள்ளத்தின் வேகத்தினால் பெரிய பள்ளம் ஏற்பட்டிருந்தது. ஆனால் அடுத்தாற்போல் சமீபத்திலேயே ஆழம் குறைந்து தண்ணீர் மேட்டுப்பாங்கான இடத்தில் பரவிப் பரந்து சென்றது. இக்காரணத்தினால் எல்லாரும் தப்பிப் பிழைப்பது சாத்தியமாயிற்று.




எல்லாரும் தட்டுத்தடுமாறிக் கரை ஏறியானதும்,

“ஐயோ! போச்சே!” என்றான் குண்டோ தரன். மற்றவர்கள் திடுக்கிட்டு அவனைப் பார்த்தார்கள்.

“என்ன போய்விட்டது?” என்று ஆயனர் கேட்டதும், “அவல் மூட்டை போச்சே” என்றான்.



சற்றுநேரம் எல்லாரும் கொல்லென்று சிரித்தார்கள். பிறகு புருஷர்களும் ஸ்திரீகளும் துணிகளைப் பிழிந்து உலர்த்திக் கட்டிக் கொள்வதற்காக வெவ்வேறு திசை நோக்கிச் சென்றார்கள். குண்டோ தரனும் குமார சக்கரவர்த்தியும் ஒரு பக்கமாகப் போனபோது, “குண்டோ தரா! அவல் மூட்டை போனதைப் பற்றி அழுகிறாயே? தெப்பம் போய்விட்டதே! அதற்கு என்ன செய்கிறது” என்று மாமல்லர் கேட்டார்.




“பிரபு! நல்ல வேளையாய் இந்தப் பாறைப் பிரதேசத்தில் தெப்பம் மோதி கவிழ்ந்ததே என்று எனக்குச் சந்தோஷமாயிருக்கிறது. இல்லாவிடில் கடலில் போய்த்தானே சேரவேண்டும்? சமுத்திரத்து அலைகளிலே இந்தப் பானைத் தெப்பம் என்ன செய்யும்?” என்றான் குண்டோ தரன்.

“இருந்தாலும் தெப்பத்தையும் காப்பாற்றி இருக்கலாம். நீ மட்டும் இன்னும் கொஞ்சம் லாகவமாய் கழி போட்டிருந்தால்..”

“அப்படி அவசியம் வேணுமென்றால், அதோ கிராமம் தெரிகிறதே — அங்கே பானைகள் சம்பாதித்துத் தெப்பம் கட்டிக் கொள்ளலாம், பிரபு! ஆனால், இப்போது தெப்பம் எதற்கு? இந்த வெள்ளம் அடங்குகிற வரையில் இங்கேயே இருப்பதுதான் நல்லது.”

“அழகுதான் குண்டோ தரா! என் சைனியத்தை எங்கேயோ விட்டுவிட்டு நான் இங்கே இருக்க வேண்டும் என்றா சொல்லுகிறாய்? இவர்களை ஒரு பத்திரமான இடத்தில் சேர்த்த உடனே நாம் இதே தெப்பத்தில் புறப்படலாமென்று எண்ணியிருந்தேன்..”

“புறப்பட்டு என்ன பிரயோஜனம், பிரபு! இந்தப் பெரு வெள்ளத்தில் எங்கே போகிறது? என்ன செய்கிறது? சைனியம் தாங்கள் விட்ட இடத்திலேயே இருக்குமா? தென்பெண்ணை கரையெல்லாம் இப்போது ஒரே வெள்ளக் காடாய் இருக்குமோ!”

“அதனால்தான் அவசியம் நான் போகவேண்டும். பரஞ்சோதியும் மற்றவர்களும் என்னைப்பற்றி என்ன நினைப்பார்கள்?”

“என்ன நினைப்பார்கள் தாங்கள் பத்திரமாய் இருக்க வேண்டுமே என்றுதான் நினைப்பார்கள். அவர்களைப்பற்றித் தங்களுக்குச் சிறிதும் கவலை வேண்டியது இல்லை. ஏரி உடைத்துக் கொண்ட செய்தி அவர்களுக்கு நல்ல சமயத்தில் போய்ச் சேர்ந்திருக்கும்!”




துணிகள் உலர்ந்து கொண்டிருக்கையில் குண்டோ தரன் தன்னுடைய வரலாற்றை மாமல்லருக்கு விவரமாகக் கூறினான். நாகநந்தி விஷயமாக ஆதியில் சக்கரவர்த்திக்குச் சந்தேகம் ஏற்பட்டு, அதன் பேரில் ஆயனர் வீட்டுக்குச் சத்ருக்னர் தன்னைக் காவல் போட்டதில் தொடங்கி, முதல் நாள் இரவு நாகநந்தியைத் தொடர்ந்து ஏரிக்கரைக்குப் போய் அவருடன் துவந்த யுத்தம் செய்தது வரையில் விவரித்தான். அப்போது ஒரு அதிகாரக்குரல் தன்னை எச்சரித்ததையும் அதன்படியே தான் திரும்பி வந்து வயோதிக புத்தபிக்ஷுவை வெள்ளத்தில் தள்ளிவிட்டுத் தெப்பத்தைக் கைப்பற்றிக் கொண்டு வந்ததையும் விவரமாகக் கூறி முடித்தான்.

குண்டோதரன் கூறியதையெல்லாம் கேட்டு, மகேந்திர பல்லவரின் முன்யோசனையிலும், இராஜதந்திரத்திலும் மாமல்லருக்கு இருந்த மதிப்பு பன்மடங்கு அதிகமாயிற்று. குண்டோ தரனுடைய சாமர்த்தியத்தைப் பற்றியும் அவர் மிக வியந்து பாராட்டினார்.




“ஆனால் நீ அந்த வயோதிக பிக்ஷுவைத் தெப்பத்திலிருந்து தள்ளியது மட்டும் எனக்குப் பிடிக்கவில்லை, குண்டோதரா! அந்தப் பாவத்தை ஏன் செய்தாய்?” என்று கேட்டார்.

“அது பாவமில்லை பிரபு! பெரிய புண்ணியம்! அவன் புத்த பிக்ஷுவுமில்லை. ஒன்றுமில்லை. காஞ்சி நகரத் தெற்குக் கோட்டை வாசலில் காவலனாக இருந்தவன். இந்த நாகநந்தியின் வலையில் விழுந்து தேசத் துரோகியாகி விட்டான். அவனை வெள்ளத்தில் தள்ளியது போதாது. அவன் தலையில் ஒரு கல்லையும் தூக்கிப் போட்டிருக்க வேண்டும்!” என்றான் குண்டோதரன்.

“அப்படியானால், எல்லாவற்றுக்கும் மூலகாரணமான நாகநந்தியை ஏன் உயிரோடு விட்டாய்? அவரையும் கொன்று விடுவதற்கென்ன?” என்று மாமல்லர் கேட்டார்.

“பிரபு! எப்படியும் அந்த நாகப்பாம்பைக் கொன்று தீர்த்துவிடுவது என்றுதான் எண்ணியிருந்தேன். ஆனால் ‘சண்டையை நிறுத்து!’ என்று இருளில் கேட்ட அதிகாரக் குரலின் கட்டளையை மீற முடியவில்லை. ஆகையினால்தான் உடைப்பிலே தள்ளிவிட்டு வந்தேன். யார் கண்டார்கள்? உடைப்பு வெள்ளத்தில் அந்த வேஷதாரி பிக்ஷு, மூழ்கி ஒழிந்து போயிருக்கலாமல்லவா?”

“கூடாது! குண்டோ தரா! கூடாது! அப்பேர்ப்பட்ட பாதகனுக்கு அவ்வளவு சுலபமான மரணம் கூடாது. அந்தக் கள்ள பிக்ஷுவால் ஆயனரும் சிவகாமியும் எப்பேர்ப்பட்ட அபாயத்துக்கு உள்ளாகி விட்டார்கள்!...

“பிரபு! மன்னிக்க வேண்டும் நாகநந்தியைப்பற்றி இவர்களிடம் ஒன்றும் பிரஸ்தாபிக்காமல் இருப்பதே நலம். இவர்களுக்கு விஷயம் ஒன்றும் விளங்காது. வீணில் மனத்துன்பம் அடைவார்கள்.”

மாமல்லர் அதை ஒப்புக் கொண்டார் பிறகு,


தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
புத்தாண்டு
வாழ்த்துக்கள் !
புத்தாண்டில் புதுமைகள்
தொடரட்டும்
மாற்றங்கள் மலரட்டும்
இன்னிசை முழங்கட்டும்
எல்லோர் வாழ்விலும்
மகிழ்ச்சி நிலைக்கட்டும்

"ஏரிக் கரையில் உனக்குக் கட்டளையிட்ட குரல் யாருடையது என்று தெரியவில்லையா?" என்று கேட்டார்.

"ஊகித்தேன் பிரபு! ஆனால் தங்களிடம் சொல்லத் தைரியம் இல்லை மன்னிக்க வேண்டும்!" என்றான் குண்டோதரன்.



எச்சரித்தவர் மகேந்திர சக்கரவர்த்தியாயிருக்குமோ என்ற எண்ணம் ஏற்கனவே அவர் மனத்தில் தோன்றியிருந்தது. குண்டோ தரனும் அப்படியே ஊகிக்கிறான் என்று இப்போது தெரிந்தது.




மாமல்லரின் உள்ளத்தில் மகிழ்ச்சி, வெட்கம், வேதனை ஆகிய உணர்ச்சிகள் ஏக காலத்தில் உதயமாயின. குண்டோ தரனை எச்சரித்தது மகேந்திர சக்கரவர்த்தியாயிருக்கும் பட்சத்தில் சைனியத்தைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை எல்லோரும் காப்பாற்றப்பட்டிருப்பார்கள்.

ஆனால், தம்மிடம் நம்பிக்கையில்லாமல்தானே அவர் தொடர்ந்து வந்திருக்க வேண்டும்? அதற்குத் தகுந்தாற்போல் இருக்கிறதல்லவா தம்முடைய காரியமும்? நதிக்கரையிலே சைனியத்தை நிறுத்திவிட்டுத் தனியாக வந்து வெள்ளத்திலேயும் சிக்கிக் கொண்டோ மல்லவா? சக்கரவர்த்தியை மறுபடியும் சந்திக்கும்போது, அவர் முகத்தை எவ்விதம் ஏறிட்டுப் பார்ப்பது?

இதற்கு மாறாக இன்னொருவித சிந்தனையும் உண்டாயிற்று. எது எப்படி வேணுமானாலும் போகட்டும்! என்ன அபகீர்த்தி, அவமானம் ஏற்பட்டாலும் ஏற்படட்டும். இந்த ஒரு நாள் ஆனந்த வாழ்வுக்காக எதைத்தான் சகித்துக் கொள்ளக்கூடாது? இனி வருங்காலமெல்லாம் இந்த ஒரு தினத்தின் இன்பமயமான வாழ்க்கையை நினைத்து நினைத்துப் பார்த்து மகிழ்ச்சியடையலாம் அல்லவா?

"பிரபு! நடந்தது நடந்துவிட்டது இனிமேல் நடப்பதைப் பற்றித்தானே யோசிக்க வேண்டும்?" என்று குண்டோதரன் கூறி மாமல்லரின் சிந்தனையைக் கலைத்தான்.

"வேறு என்ன யோசனை செய்ய இருக்கிறது? வெள்ளத்திலே வந்து மாட்டிக்கொண்டு விட்டோ ம், இங்கிருந்து போகும் வழியைத் தேட வேண்டும்..."

"பிரபு! இன்றிரவு தங்குவதைப் பற்றி முதலில் யோசிப்போம். திறந்த வெளியில் தங்க முடியாதல்லவா, இரவு மழை பிடித்துக் கொண்டால் என்ன செய்கிறது?"

"எங்கே தங்கலாம் என்று நினைக்கிறாய்?"

"அதோ சற்று தூரத்தில் ஒரு கிராமம் தெரிகிறது அங்கே போய் நான் முதலில் விசாரித்துக்கொண்டு வருகிறேன்."

"அப்படியே செய்" என்றார் மாமல்லர்.

அப்போது "மாமல்லா! மாமல்லா!" என்ற சுகரிஷியின் குரல் கேட்டது. அந்தக் குரல் வந்த வழியே சென்ற மாமல்லர், பாறையருகில் மகிழ மரத்தடியில் சிவகாமி தனியாக உட்கார்ந்திருப்பதைக் கண்டார், அவள் அருகில் தாமும் உட்கார்ந்தார்.

(சபதம் தொடரும்)

# படைப்பாளிகளுக்கு...

* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!



* படைப்புகளை மின்னஞ்சலில் அனுப்புவது வரவேற்கப்படுகிறது.




*இதழில் வெளியாகிற கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள் யாவும் படைப்பாளிகளின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!



தொடர்புகளுக்கு

editor@ithamil.com




## ஆயுளைக் குறைக்கும் காற்று மாசு !

**கா**ற்று மாசடைந்து வருவது மனித சமூகத்துக்கும், விலங்குகளுக்கும், தாவரங்களுக்கும் பெரும் பிரச்னையாக மாறியுள்ளது. மேலும், மனிதனின் சராசரி ஆயுள் காலத்தையும் குறைத்து வருகிறது.




நாம் வாழும் பூமியைச் சூழ்ந்துள்ள வளி மண்டலத்தில் 79% நைட்ரஜனும், 20% பிராண வாயுவும் (ஆக்ஸிஜன்), 3% கரியமில வாயுக்களும் உள்ளன. உலகம் முழுவதும் தொழில்மயமாதல், நவீனமயமாதல் முதலியவற்றால் வளி மண்டலம் பாதிப்படைகிறது. இவை காற்று மாசு ஏற்படுத்துவதற்கு வழிவகுக்கின்றன. தொழிற்சாலைகள், வாகனங்களில் இருந்து வெளியேறும் புகையால் காற்று அசுத்தமடைகிறது.




தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் நைட்ரஜன், கந்தக ஆக்ஸைடு, பெட்ரோல் சுத்திகரிப்பு ஆலைகளிலிருந்தும், வாகனகளிலிருந்தும் வெளிவரும் வீரியமிக்க ஹைட்ரோ கார்பன்கள், கார்பன் மோனாக்ஸைடு, தொழிற்சாலைகளிலிருந்தும், உலோகம் பிரித்தெடுக்கும் ஆலைகளிலிருந்தும் வெளிவரும் உலோகத் துகள்கள், பிளாஸ்டிக் கழிவுகள், வேளாண் பொருள்களை தீயிட்டு எரிப்பதால் உருவாகும் புகை, கட்டுமானப் பகுதிகளில் இருந்து உருவாகும் தூசு, மரங்கள் அழிப்பு உள்ளிட்டவை காற்றை மாசுபடுத்துகின்றன.

தில்லியில் கடந்த நவம்பர் மாதத்தில் வாகனப் புகை மாசும், கட்டுமானத் தூசியும், அண்டை மாநிலங்களான பஞ்சாப், ஹரியாணா, உத்தரப் பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் பயிர்க் கழிவுகள் எரிக்கப்பட்டதால் உருவான புகையும் சேர்ந்து பனிப்பொழிவு போன்ற காற்று மாசு ஏற்பட்டது. இதைக் கட்டுப்படுத்த வாரத்தில்



# சுத்தி

இ.முருகராஜ்

குறிப்பிட்ட நாள்களில் மட்டுமே கார்கள், இரு சக்கர வாகனங்களை மக்கள் இயக்க வேண்டும் என்பது உள்பட பல்வேறு நடவடிக்கைகளை தில்லி மாநில அரசு மேற்கொண்டது.

காற்றிலுள்ள கார்பன்—டை—ஆக்ஸைடு, குளோரோ புளோரோ கார்பன் உள்ளிட்ட வாயுக்களின் அளவு அதிகரித்து வருவதால், ஓசோன் படலம் கடுமையாகப் பாதிக்கப்பட்டு வருகிறது. இதனால், சூரிய ஒளிக் கதிர்கள் நேரடியாக பூமியில் விழுவதால் புவியின் வெப்பம் அதிகரிக்கிறது. மேலும், காற்று மாசு பருவ நிலை மாற்றத் துக்கும் முக்கியக் காரணமாக விளங்குகிறது.




பூமியின் வெப்பநிலை கடந்த 2015—ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து அதிகரித்து வருகிறது. கடந்த 2016—ஆம் ஆண்டில் சராசரி வெப்பநிலையைவிட 1.2 டிகிரி செல்சியஸ் அளவுக்கு வெப்பநிலை அதிகரித்துக் காணப்பட்டது. இதனால், உலகின் பல்வேறு நாடுகளில் வறட்சி, குடிநீர்த் தட்டுப்பாடு, காடுகள் தீ பிடித்து எரிதல், உணவுத் தட்டுப்பாடு, வன விலங்குகள் உணவு தேடி ஊருக்குள் புகுதல் உள்ளிட்ட பிரச்னைகள் ஏற்பட்டு மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர்.




21—ஆம் நூற்றாண்டில் உலக அளவில் சராசரி வெப்பநிலையைவிட 2 டிகிரி செல்சியஸ் வரை வெப்பநிலை அதிகரிக்கும் என்று ஆய்வுகளில் தெரியவந்துள்ளது. இது இந்தியாவின் வடக்குப் பகுதி, மத்தியப் பகுதி மற்றும் மேற்குப் பகுதிகளில் இன்னும் அதிகமாக இருக்கும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், பூமியின் வெப்பத்தைக் குறைக்கும் வகையிலும், தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறி ஓசோன் படலத்தைப் பாதிக்கும் வாயுக்களைக் குறைக்கும் வகையிலும் 196 நாடுகள் ஒன்றிணைந்து கடந்த 2016—ஆம் ஆண்டு பாரிஸ் ஒப்பந்தம் செய்துள்ளன. இந்த ஒப்பந்தத்திலிருந்து அண்மையில் அமெரிக்கா மட்டும் வெளியேறியது.




காற்று மாசால் உருவாகும் 2.5 மைக்ரான் அளவுக்கும் குறைவான சிறிய துகள்கள் நுரையீரலுக்குள் ஆழமாகச் செல்வதால் சுவாசப் பிரச்னைகள், மாரடைப்பு, பக்கவாதம், புற்றுநோய் உள்ளிட்டவை உருவாகும் ஆபத்து உள்ளது. இதேபோன்று விலங்குகள், தாவரங்களுக்கும் காற்று மாசு பெரும் பிரச்னையாக மாறியுள்ளது. மேலும், மனிதர்களின் சராசரி ஆயுள் காலத்தை சுமார் 2 ஆண்டுகள் வரை குறைக்கிறது.

எனவே, காற்றின் தரத்தை மேம்படுத்த தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் ரசாயனப் புகைகளின் அளவைக் கண்காணித்து, நிர்ணயிக்கப்பட்ட அளவைவிட அதிகமாக புகையை வெளியேற்றும் தொழிற்சாலைகள் மீது மத்திய, மாநில அரசுகள் கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

2030—ஆம் ஆண்டுக்குள் இந்தியாவில் 30 சதவீத வாகனங்களை மின்சார பேட்டரிகளில் இயங்கும் வாகனங்களாக மாற்ற மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இந்தத் திட்டத்தை தீவிரப்படுத்தும் வகையில், முதல் கட்டமாக மின்சார பேட்டரி வாகனங்களுக்கு சார்ஜ் ஏற்றும் மையங்களைத் திறக்க வேண்டும். மேலும், மின்சார பேட்டரி வாகனங்களைத் தயாரிக்கும் நிறுவனங்களை ஊக்குவிக்கவும், அவற்றை வாங்கும் பொதுமக்களை ஊக்குவிக்கவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.




இதேபோன்று, தமிழக அரசும் மின்சார பேட்டரிகளில் இயங்கும் பேருந்துகளை அதிகமாக வாங்கவும், பொதுமக்களுக்கு வழங்கப்படும் அம்மா ஸ்கூட்டர்களை பேட்டரிகளில் இயங்கும் ஸ்கூட்டர்களாக வழங்கவும் நடவடிக்கை எடுக்கலாம். பிளாஸ்டிக் கழிவுகள் தீயிட்டுக் கொளுத்தப்படுவதைத் தடுக்க, அவை மறு சுழற்சி செய்யப்பட வேண்டும்.

மேலும், தமிழகத்தை முன் மாதிரியாகப் பின்பற்றி, இந்தியா முழுவதும் அனைத்து வகையான பிளாஸ்டிக் பொருள்கள் பயன்பாட்டுக்கும் தடை விதிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். வரும் மக்களவைத் தேர்தலில் போட்டியிடும் அனைத்துக் கட்சி வேட்பாளர்களும் பிளாஸ்டிக் பயன்பாட்டால் ஏற்படும் தீமைகள் குறித்து பொதுமக்களிடையே தெரிவிப்பதன் மூலம் விழிப்புணர்வு ஏற்படும்.

பிளாஸ்டிக் தவிர்த்த குப்பைகள் தீ வைத்துக் கொளுத்தப்படுவதைத் தடுக்க அவற்றை உரமாக மாற்றும் பணியை விரைவுபடுத்த வேண்டும். வேளாண் கழிவுகள் எரிக்கப்படுவதைத் தடுக்கும் வகையில், வேளாண் கழிவுகளை கத்தரித்து சிறு துண்டுகளாக்கி உரமாக பயன்படுத்தும் இயந்திரங்களை விவசாயிகளுக்கு அளிக்க வேண்டும்.


மரக்கன்றுகளை நடும் மாணவர்களுக்கு கூடுதல் மதிப்பெண்கள் வழங்கப்படும் என தமிழக பள்ளிக் கல்வித் துறை அறிவித்துள்ளது. இதேபோன்று, மரக்கன்றுகளை நட்டுப் பராமரிக்கும் பொதுமக்களுக்கும் சலுகைகளை அறிவிப்பதன் மூலம் சுற்றுச்சூழல் பசுமையாவது உறுதி.


SAKTHI CASH & CARRY
245-247 High Street North, East Ham,
London E12 6SJ
+44(0)20 8471 4713
இந்திய – இலங்கை மளிகைப்
பொருட்கள்
குறைந்தவிலையில் உயர்தரமாகவும்
சுவையாகவும் கிடைக்கும்
தாயகத்தின் அனைத்துவிதமான
பொருட்களும் கிடைக்கும்
வந்து பாருங்கள்!!!
வியந்து
போவீர்கள் !!!
VARSHA
SWATHI CASH & CARRY
306-308 High Street North, East Ham,
London E12 6SA
+44(0)20 8586 7648




## ஆரோக்கியம் காக்க...சிறுநீரகங்கள் காக்க.

உலக சிறுநீரக விழிப்புணர்வு தினம் 2000—ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் இரண்டாவது வியாழக்கிழமை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. முதலில் 66 நாடுகள் இதில் ஆர்வம் காட்டின. இரண்டே ஆண்டுகளில் அது 88—ஆக அதிகரித்து விட்டது. பன்னாட்டு நரம்பியல் அமைப்பு, பன்னாட்டுச் சிறுநீரக அறக்கட்டளைகள் பேரவை ஆகியவற்றின் முனைப்பில்தான் இந்த உலகச் சிறுநீரக விழிப்புணர்வு தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.






ஒவ்வோர் ஆண்டும் சூரியன் தனது உத்தராயணப் பயணத்தின்போது, பிரபஞ்ச நடுக்கோட்டினைக் கடக்கும் நாள் மார்ச் 21. அன்றைய தினம் நிலநடுக்கோட்டு நாடுகளில் இரவும் பகலும் சம அளவாக இருக்கும். அன்றைக்கு சூரியன் உதிக்கும் திசை உண்மையான கிழக்கு. (மற்றொரு நாள் செப்டம்பர் 23 ஆகும்).





கோடை வெயிலுக்கும் மனித சிறுநீரகத்துக்கும் பிரிக்க முடியாத உயிர்த்தொடர்பு இருக்கிறது. ரத்தத்தில் இருந்து அளவுக்கு அதிகமான சோடியம், யூரியா போன்ற உப்புச் சத்துகளை அரித்துப் பிரித்து வெளியே அனுப்ப உதவும் வடிகட்டி இயந்திரம் சிறுநீரகங்கள். உடலின் இரு விலாப்புறமும் உள்ள இரு சிறுநீரகங்களை உள்ளங்கையில் அடக்கிவிடலாம். உடலின் நீர்மச் சத்துச் செறிவு, பாய்மங்களின் சவ்வூடு பரவல், அமில—காரச் சமநிலை, பலவித மின்பகுளி வேதிம அளவுகள், நச்சு நீக்கம் போன்ற உடல்நலச் செயல்பாடுகளின் ஆதாரம் இந்த சிறுநீரகங்கள்.

ஒவ்வொரு மனித சிறுநீரகத்திலும் சுமார் 10 லட்சம் சிறுநீரக வடிகட்டி அணுக்கள் (நெஃப்ரான்கள்) உள்ளன; இவை சுண்டெலிக்கு வெறும் 12,500தான். வடிகட்டி அணு முனையில் உள்ள நுண்ணிய தந்துகிக் குழாய்களின் முண்டு, இணையத்தின் பிரதான வலைப்பின்னல் போன்றது. ஒவ்வொரு தந்துகியும் செயல்பாட்டில் நுண்ணிய சிறுகுடல் போன்றது. சிறுநீரகத் தமனிகள் சுமந்துவரும் ரத்தத்திலிருந்து சத்துகள் இங்குதான் வடிகட்டப்படுகின்றன.

சிறுநீரகத் தமனிகள் கொண்டுவரும் ரத்தத்தில் அளவுக்கு அதிகமான சோடியம், தசைச்சிதைவில்




வெளிப்படும் கிரியாட்டினின், நச்சு வேதிமங்கள் போன்றவற்றை வடிகட்டிகள் பிரித்து சிறுநீரோடு சேர்த்து வழி அனுப்பி வைக்கின்றன. வடிகட்டின நீர்மம், நுண்குழாய்களின் வழியே பாய்கிறபோது, அதிலிருந்து தேவையான அளவு சிறுமூலக் கூறுகளும் தண்ணீரும் மீண்டும் ரத்தத்தினால் உறிஞ்சப்படுகின்றன. ரத்தத்தில் யூரியா தேங்கினால்




உடல் வீங்கியதுபோல் ஆகிவிடும். சோடியம் அல்லது பொட்டாஷியம் ஆகிய கார தனிமங்கள் சமநிலை சீர்குலைந்தாலும் பிரச்னைதான்.

நீங்கள் புகை பிடிக்காமல் இருக்கலாம்; ஆனால் உங்கள் நண்பர்களுக்கு புகைப் பழக்கம் இருந்தால், உங்களுக்கு சிறுநீரகப் புற்றுநோய் வர 50 சதவீத வாய்ப்பு உண்டு என்பது தனி எச்சரிக்கை. பலருக்கும் பகலில் அமர்ந்த இடத்தில் நெடுநேரம் செயல் இன்றி இருந்தாலோ, இரவில் உறக்கத்தில் கால், கை தசைகளில் சிரமம் ஏற்பட்டாலோ, அதற்குக் காரணம் உடலில் வைட்டமின் டி பற்றாக்குறை என்று அறியலாம்.

அதனால், சிறுநீரகத்தைக் காப்பாற்ற வேண்டுமானால் வெயிலில் நடக்க வேண்டும். சூரிய புறஊதாக் கதிர்களால் மனித உடலில் உருவாகும் இந்த டி3 —வைட்டமின் (கோலிகால்சிஃபெரோல்) ஆரோக்கிய வாழ்வுக்கு அவசியம். இங்குதான் சூரிய வெளிச்சத்தில் இருந்து பெறப்படும் மூலச்சத்தில் இருந்து வைட்டமின் டி தயாரிக்கப்படுகிறது.

வெயில் படாமல் வாழ




விரும்புகிறோம். குளுகுளு காரில் அலுவலகம் சென்று, குளிர்பதன அறைக்குள் இடுப்பு அசையாமல் வேலை பார்த்து, குளிர் அறையில் இரவு உறங்கினால் அது சுக வாழ்வு இல்லை. உடல் நலம் பெறாது. பணி இடங்களுக்கு மூச்சிரைக்க நடக்காமல், விடியற்காலையில் வீட்டு தோட்டப் புல்தரையிலோ கடற்கரையிலோ நடைப்பயிற்சி செய்யும் மனித இயந்திரங்கள் ஆகிவிட்டோம். உட்கார்ந்த இடத்தில் அமர்ந்தபடியே வாய் உபதேசம் சொல்லிவிட்டு, உண்டு, உறங்கி வாழ்வோரைப் பின்பற்ற ஆசைப்படுகிறோம். வெயிலில் கால் கடுக்க நின்று களை எடுத்தால் அது ராஜயோகம்தான்.

உடல் நலம் என்பது போதிய உடற்பயிற்சி, வேளாவேளைக்குத் தேவையான உணவு, அழுத்தம்

இல்லாத மனநிலை ஆகிய தங்க முக்கோணத்தினால் அமைகிறது. உடற்பயிற்சி, சைக்கிள் ஓட்டுதல் துள்ளல் நடை, நடனம் போன்றவை உடல் நலத்தின் அடிக்கூறுகள். தொப்பையைக் குறைக்க மருத்துவமனைக்குச் சென்றால் அங்கு நிற்க வைத்த சைக்கிளை நின்றபடி ஓட்டச் சொல்கிறார்கள். அதற்கு இயல்பாக சைக்கிள் ஓட்டினால் பத்து நிமிஷத்தில் அலுவலகத்துக்கே சென்றுவிடலாம்.

அமைதியான உயிர்க்கொல்லி நோய், வயது முதிர்ந்த பின்னர் நோயாளிகள் உடலுக்கு வெளியே தனி செயற்கை சிறுநீரகப் பையுடன் இயங்க வேண்டி வரும். ஒருவகையில் இது அவர்தம் வாழ்வியலில் மனரீதியிலான பாதிப்புகளை உண்டாக்கும். பன் நீர்க்கட்டி (பாலிசிஸ்டிக்) சிறுநீரக நோய் என்பது சில அரசியல் கட்சிகள் மாதிரி, ஓரளவு வாரிசு நோய்; உள்ளுக்கு உள்ளேயே சிறுநீரகத்தை உப்பிப் பெரிதாக்கிவிடும்.

இத்தகைய சிறுநீரகக் கோளாறினால் அமெரிக்காவில் ஆண்டுதோறும் 2 சதவீதம் பேர் இறந்து வருகிறார்கள். ஒருவர் பரம்பரையில் முன்னோர் சிறுநீரக நோயாளியா, இல்லையா என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும். உணவுப் பழக்கமும் முக்கியம். தேவையான அளவு தண்ணீரும் குடிக்க வேண்டும். தினமும் 20 தம்ளர் அதாவது, 3 முதல் 4 லிட்டர் தண்ணீர் குடிக்க வேண்டும்.

குறிப்பாக, தெருவோர வாணலியில் வறுத்த குப்பைப் பண்டங்களுக்கு குட் பை சொன்னாலே பாதி உயிர் பிழைத்தோம். நிழல் உலகில் உப்பா, சர்க்கரையா என்று காதல் பாட்டு பாடலாம். ஆனால், நிஜ உலகில் இரண்டுமே ஆபத்தானவை. உப்பினால் உயர் ரத்த அழுத்த நோயும், அதிக சர்க்கரைச் சத்து காரணமாக சர்க்கரை நோயும் வரும் என்பது உத்தரவாதம். இந்த இருபெரும் நோய்களால் இரண்டு சிறுநீரகங்களும் கோளாறு ஆகிவிடும் என்பதும் லட்சத்தில் ஒரு வார்த்தை .

தினமும் உணவில் ஒரு தேக்கரண்டி (5—6 கிராம்) உப்பு போதும். நம்மில் பலரும் உலக சுகாதார நிறுவனம் வரையறுத்த அளவுக்கும் இரட்டிப்பு (தினம் 9—12 கிராம்) உப்பு சேர்த்துக் கொள்கிறோம்.

புகைப் பிரியர்களோடு கெட்ட சகவாசம் வேண்டாம். பக்கத்தில் நின்றாலே உங்களுக்குத்தான் கெட்ட சுவாசம். ஊளைச் சதை. மது, புகை பிடித்தல், 50 வயது முதிர்வு போன்றவை சிறுநீரக நோய்க் காரணிகள் என்றால் பரவாயில்லை; ஆப்பிரிக்க நீக்ரோ, ஆஸ்திரேலிய அபாரிஜின், ஹிஸ்பானிக், ஆசிய இனங்கள் போன்ற மரபணுப் பின்னணி உடையவர்களுக்கும் சிறுநீரகப் பாதிப்பு அதிகம் ஏற்பட வாய்ப்பு உண்டு.




இத்தகைய பிரச்னைகளை முன்கூட்டியே அறிந்துகொள்ள வேண்டியது அவசியம். கணுக்கால் வீக்கம், சோர்வு, களைப்பு, எதிலும் கவனக்குறைவு, பசியின்மை போன்றவை நோயின் சில அறிகுறிகள். ஒருவேளை சிறுநீருடன் ரத்தக் கசிவு தென்படலாம். அன்றி, முட்டை வெள்ளைக் கருவில் உள்ள ஆல்புமின் ஒத்த புரதச் சத்துகள் சிறுநீரில் வெளியேறி நுரையாக வெளிப்படலாம். இவை சிறுநீரக முழு உபாதைகளின் முன்னோட்டம். சிலருக்கு சிறுநீர் அளவு மாற்றம், சிறுநீர் வெளியேறுவதில் நேர மாற்றம், நிற மாற்றம், உறக்கத்தில் சிறுநீர் கழிதல், அடிவயிற்றில் அல்லது முதுகுத் தண்டின் அருகில் வலி, உறக்கம் இன்மை , தலைவலி போன்றவையும் சிறுநீரகக் கோளாறின் சிவப்பு சமிக்ஞைகள்.

ஆரம்பக் கட்டத்திலேயே நோயின் தன்மையைக் கண்டறிந்து, அவ்வப்போது ரத்தப் பரிசோதனை செய்து கொள்வது நல்லது. தசைகளின் செயல்பாட்டில் சிதைபொருள் ஆன கிரியாட்டினின், ஆல்புமின் ஆகியவற்றின் அளவு அதிகரிப்பும் சிறுநீரக நோயைக் காட்டிக் கொடுத்துவிடும். சிறுநீர் உற்பத்தியின் முதல் கட்டம் இது. அதிகப்படியான நீர்மத்துடன் கழிவுகளையும் வெளியேற்றும் நிலை. வடிகட்டி முடிச்சு (குளோமெருலி) அரித்து எடுக்கும் வேகம் நிமிஷத்துக்கு 100 மில்லி லிட்டர் (அரை தம்ளர்) அளவு இருக்கலாம். ஆனால், அதன் அளவு 60 மில்லி அளவாகக் குறைந்தால் பிரச்னைதான். கூடுதல் புரதச்சத்து சிறுநீரில் தென்பட்டாலும் சிக்கல்தான். ரத்தத்தில் ஆல்புமின் அதிகரித்தால் மாரடைப்புகூட வரலாம்.

உலகம் முழுவதும் 85 கோடி பேர் சிறுநீரக நோயாளிகள். ஆண்டுதோறும் 24 லட்சம் பேர் இறப்பு. மரண காரணிகளில் ஆறாம் இடம் வகிக்கும் உயிர்க்கொல்லி நோய். உலக அளவில் கட்டுப்பாட்டில் இல்லாத சர்க்கரை நோய் காரணமாக சிறுநீரகங்களின் செயலிழப்புக்கு உள்ளாகப் போகிறவர்களின்எண்ணிக்கை 16 கோடிப் பேர் என்பது இன்னொரு அதிர்ச்சித் தகவல். எனினும், ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்தால் சிறுநீரக நோய்கள் குணப்படுத்தக் கூடியவையே.

சிறுநீரக நலம் — யாவருக்கும் எங்கும் என்ற முத்திரை மொழியுடன் உலக சிறுநீரக விழிப்புணர்வு தினத்தை கடைப்பிடிப்போம்.

# VARSHA™

Ready to Cook

Made with Quality Natural Products

**Idli / Dosa Wet Mix** • இட்லி / தோசை மாவு

ఇడ్లీ దోస పిండి • ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು

ഇഡ്ഡലി / ദോശ മാവ്



CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI



100% Pure Vegetarian


ઈડલી ડોસા નું ખીરું

इडली/ दोसा आटा

# களவு போகும்

## பொழுதெனும் பெருஞ்செல்வம்

புலரும் ஒவ்வொரு காலைப்பொழுதிலும், ஏதேனும் ஓர் இலக்கியத் தொடர், அல்லது கவிதைத் தெறிப்பு வந்து என்னுள் மின்னல் வெட்டும். பின்னர் சிந்தனை அதிர்வுகள் மெல்லப் பரவும். அன்றைய நாள் முழுக்க, அனுபவச் செழுமையோடு சுயசிந்தனைக்கும் விரைந்த செயல்பாட்டுக்கும் அது துணைநிற்கும். சில சமயங்களில் ஓரிரு நாள்களுக்கும் மேலாக, அது விரிவதும் உண்டு.




சுவாசம்போலப் பரவி உயிரணுக்களில் நிறையும் அந்த அனுபவம், இலக்கிய அனுபவ எல்லை கடந்து வாழ்வனுபவமாக முகிழ்ப்பதைத் துய்ப்பதில் ஒரு தனிச்சுகம். இப்படி ஒரு கணத்தில்தான், கானாமுதம் படைத்த காட்சிமிக விந்தையடா என்றும் பாட்டினைப்போல் ஆச்சரியம் பாரின்மிசை இல்லையடா என்றும் பாரதி மகிழ்ந்து கூத்தாடியிருக்கவேண்டும்.





அதிசயம்போல எழுகிற சில பாடல் வரிகள் சமயங்களில் துயரங்களையும் தந்துவிடுவதுண்டு. பின்னர், அதுவே அதற்கு மருந்தாகிப் புதிய விருந்து சமைப்பதும் உண்டு.

துன்பம், இன்பம், இளமை, செல்வம், தோல்வி, முதுமை எல்லாமும் ஒரு கணத்தோற்றம் என்று உயிர்பெற்ற தமிழர் பாட்டில் உரத்துமொழிந்து உரமேற்றினார் மகாகவி பாரதி, இந்த வாழ்க்கை என்பது என்ன? தோற்றம், மறைவு என்ற இரு சொற்களுக்கு இடையில் தரப்பெறும் கோடிட்ட இடத்தை நிரப்புவது. அவ்வளவுதானே!

அதனை இன்பமாக, துன்பமாக, வெறுமையாக ஆக்கிக்கொள்வது நம் கையில்தான் இருக்கிறது. இது பொதுப்பார்வை. இன்று நம்மைச்சுற்றி நாலாபக்கமும் பார்க்க, ஏன் பல சமயங்களில் நம்மையே பார்க்க, ஒன்று தெரிகிறது. நம் அனைவரது கைகளிலும் செல்லிடப்பேசிதான் இருக்கிறது. உண்மையில், நாம்செல்லிடப்பேசிகளின் கைகளில் சிக்கி இருக்கிறோம்.

சுவாசம்போல் இடையறாது எழவேண்டிய சிந்தனையைத் தன்பால் ஈர்த்து, தடையறாது தன்னையே பார்த்துக் கொள்ளச் செய்வதில் செல்லிடப்பேசி நம்மை வென்றுவிடுகிறது. நம் உயிரனைய பொழுதுகளை ஒன்றுக்கும்






# காலம்

பயனின்றிச் சக்கையாக்கிக் கொன்று விடுகிறது. நாம் கணந்தோறும் அந்தக் கருவிமுன் செயலற்று ஒடுங்கி ஒன்றி நிற்கிறோமோ என்று தோன்றுகிறது.

கிருங்கை சேதுபதி

பெரும்பாலும் இளையோர்க்கான இலக்கியப் பயிலரங்குகளில் நான் கேட்டுத் தொடங்கும் வினா இதுதான். காலம் பொன் போன்றது எனும் பொன்மொழி சரியா? சரிதான் என்கிற பதில் சரமாரியாக எழும். ஒரு கண அமைதிக்குப் பின் இன்னொரு வினாவை எழுப்புவேன். பொன்னை இழந்தால், மீளவும் தேடிப் பெற்றுக்கொள்ளலாம். அல்லது மாற்றாக, புதியதாய் வாங்கிச் சேர்த்துக்கொள்ளலாம். ஆனால், காலத்தை? பெற முடியாது என்பதை அவர்கள் உணரும் கணத்தில் இன்னொரு கேள்வியையும் எழுப்புவேன்.




இழந்தால் பெற முடியாதது, எதுவோ? முடிப்பதற்குள் ஒரு சிலரிடமிருந்து பதில் வெளிப்படும். காலம் உயிர் போன்றது. அது




உயிருணரும் காலமாக நிறைந்து விரியும்.

உயிரினும் இனிய பொழுதுகளை எப்படியெல்லாம் தொலைக்கிறோம் என்று நமக்கு முன்னே பட்டியலிட்டுக் காட்டிப் பரிதவித்த ஆன்மாக்கள்தாம் எத்தனை எத்தனை? அரிதாய்க் கிடைத்த மானுடப் பிறப்பை வறிதாய்ப் போக்கி, சென்றது குறித்தே சிந்தை செய்து களித்தோ, கவலைப்பட்டோ அழித்த பொழுதுகள் எத்தனை எத்தனை?

இறந்த காலம் என்றும் வருங்காலம் என்றும் வகுத்துக் கழித்த நம் வாழ்நாளில் அழித்து ஒழித்தது நிகழ்காலத்தைத்தானே. உண்மையில் காலம் பிறப்பதும் இல்லை. இறப்பதும் இல்லை. இருப்பது. கணந்தோறும்




" Don't be a clock watcher. Just do what the clock does. Keep on going."

நிகழ்வது. அஃதறியாமல் பொழுதுபோக்கு எனும் புதுத்தொடரை உண்டாக்கி, அதனை டைம் பாஸ் என்று ஆங்கிலத்திற்கும் அறிமுகப்படுத்தி வைத்தவர்கள் நாம். அதனால் இழப்பு, பொழுதுக்கு அல்ல, நம் வாழ்வுக்குத்தான் என்று உணர்ந்தவர்கள் பல்வேறு வழிகளில் நமக்குக்காலந்தோறும் உணர்த்தி வந்திருக்கிறார்கள்.

சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார் செல்வர் என்றால், இந்தப் பாட்டுத் தொடரின் பொருளை இனியேனும் உணர்தல் கூடாதா என்றுதான் ஏக்கம் கொள்ள வேண்டியிருக்கிறது. இந்தத் தொடர், திருவாசகத்தில் எங்கிருக்கிறது என்பதையும் அந்தச் சின்னத்திரை வழியாகத்தான் பலரும் தேடித் தெரிந்துகொள்கிற நிலை.

இது வளர்ச்சிதான்; மாற்றம் கொண்ட முன்னேற்றம்தான். ஆனால், நூலைத்தேடி, அதன் உள்ளே முறைப்படி வளரும் வரிகள் உள்புகுந்து உரிய இடத்தை அடைகிறபோது, எழும் மெய்ஞ்ஞான அதிர்வுகளை, இந்தத் தொடர் பிறந்த சிந்தனைத் தடங்களை உணர்கிறபோது பெறும் விழுமிய சிந்தனைகளை இந்த




அவசரத் தேடல் அழித்துவிடுகிறது என்பதை அனுபவித்தால்தான் புரிந்துகொள்ள முடியும்.

இப்போக்கு நுனிப்புல் மேயும் பசுவின் செயல் ஒத்தது. அடிக்கரும்பைக் கடித்துச் சுவைக்கும் அனுபவம் தொலைத்தது. வேர்ப்பண்புகளை இதனால் விரைந்து தொலைத்துவிடுகிறோம் என்பதையும் மறக்கடித்துவிடுவது.

அவசர யுகம் என்று நாமே இதற்கொரு நாமகரணம் சூட்டி, நம்மைத் தொலைத்துவிடுகிறோம். இது எவ்வளவு பெரிய பொய்?

நம் முன்னோருக்கு இருந்த அதே காலமும் பொழுதும்தான் நமக்கும் வாய்த்திருக்கிறது. அவர்கள் தவமாய்ப் புரிந்து அனுபவித்த அந்தப் பொழுதுகளை, நாம் அவமாய்க் கழித்து அழித்துவிட்டு அல்லலுறுகிறோம். இத்தனை பரபரப்பும், பதற்றமும், அவசரமும் இதற்குமுன்னர் எவ்வாறு இல்லாமல் இருந்தன என்பதை எண்ணிப் பார்த்தால் உண்மை புரியும்.

மணி எத்தனை என்று கடிகாரம் பார்த்த காலம்போய், செல்லிடப்பேசி பார்க்கத் தொடங்குவதிலிருந்து முடங்குகிறது நம் பொழுது. கட்செவி நம் கண்ணையும் செவியையும் கருத்தையும் கவர்ந்துவிடுகிறது. முகநூலில் நம் முகம் புதைந்துவிடுகிறது. எத்தனை லைக் என்று எண்ணுவதில் நமது நொடிகள் கழிய, புதிய கருத்துகளை அறிவதில் எழுகிற ஆர்வத்தால் நம் காலமும் கடமையும் அதன்மீதான கருத்தும் கரைந்து விரைந்து இல்லாது ஒழிந்து போகின்றன. மீளவும் நம்மை எழுப்பிக் கூவும் அலுவலக அல்லது அன்றாடப் பணியின் அழைப்பால்தான் யதார்த்த உலகிற்கு மீள்கிறோம். இழந்த பொழுதுகளை ஈடுகட்ட விரையும் வாகனங்களால் சாலைகளில் நிகழும் விபத்துகள் எத்தனை? சமூகத்தில் நிகழும் வருத்தங்கள் எத்தனை?

இரவு—பகல் எதுவும் உணராமல், எதிரில் வருபவர் இருப்பவர் யாரென்றும் அறியாமல், நுகரும் எதனையும் இன்னதென்றறியாமல், செல்லிடப்பேசி திரையே கதியெனக்கிடக்கும்

## 4 things never come back in Life: spoken word, wasted time, past and neglected opportunity. So think twice and act nice.

இளைய தலைமுறை பற்றி எதுவும் சொல்லத் தெரியாமல் பெரியவர்கள் கைபிசைந்து நிற்கும் அவலத்திற்கு மாற்று எது என்று சொல்லத் தெரியவில்லை. இது தேவையற்றதென விலக்கவும் முடியவில்லை.

சின்ன நூல்கண்டா நம்மைச் சிறைப்படுத்தும்? என்ற கேள்விக்கு, இந்தச் சின்னஞ்சிறுதிரையே சிறைப்படுத்தும் என்பதைப் பதிலாக்கித் தந்திருக்கிறது காலம். சிலந்திவலை, யானையைச் சிறைப்படுத்தும் நிலைப்பாடு ஒத்தது இது. தினந்தோறும் இலவசமாய்க் கிடைக்கும் பதிவிறக்கம் செய்யும் வசதிகளை, கட்டணமின்றி பேசும் வசதிகளை அனுபவித்தே தீரவேண்டும்




என்கிற ஆவல் வெறியாகி, அவற்றுக்காகத் தன்பொழுதுகளை வலிந்து தொலைக்கும் போக்கு நாளுக்கு நாள் மிகுந்துவருகிறது.

அதிலும் பச்சிளங்குழந்தைகள் இந்தப் பழக்கத்திற்கு அடிமையாகி, அதிலிருந்து மீளத்தெரியாமல் அவதிப்படுவதும், அதிலிருந்து மீட்கமுடியாமல் பெரியவர்கள் அல்லலுறுவதும் நம் அன்றாட அவலம். அதனால் ஏற்படும் சாதக பாதகங்களையும் இந்தக் கருவிகொண்டுதான் எல்லாருக்கும் எடுத்துச் சொல்ல வேண்டியிருக்கிறது. கண்டவர்களும் அவசரமாக ஒரு விருப்பத்தைக் குறியிட்டுவிட்டு, அல்லது பிறருக்குப் பகிர்ந்தளித்துவிட்டு வசதியாய் மறந்துவிடுவதையும் பார்க்கிறோம். அதைவிடவும் அதில் வருகிற செய்திகளை உண்மை என்று நம்பிப் பின்பற்றுவதும், பரபரப்புண்டாகப் பரப்பிவிடுவதுமாகிய செயல்களால் ஏற்படும் சமூகத் தீமைகளைத் தவிர்க்கவும் முடியாமல் திண்டாடுகிறோம்.

வேடிக்கை என்னவெனில், இந்தத் திரைதனில் உலாவரும் பகுதிகளைத் தேடி எடுத்து ஒளிபரப்புவதையும், வெளியிடுவதையும் பெரிய ஊடகங்கள் செய்துவருவதுதான். அதில் பல சுவைமிகு தகவல்களும், புலனாய்வுத் தடயங்களும் கிடைப்பது உண்மைதான். ஆனால், புனிதமெனப் போற்றிப் பாதுகாத்த அந்தரங்கத்தின் ஆன்மாவைக் குலைத்ததுதான் அதிகம். யாராலும் யாரையும் நம்ப முடியாத அவலத்தை இப்போக்கு நிலைநிறுத்தி வருகிறது. பின்விளைவுகள் அறியாமல் தன்னையே முன்னிறுத்திப் படம் பிடிப்பதும் செய்திகளை உள்ளிடுவதும் பயனற்ற விளம்பர மோகத்தில் வீழ்ந்து பொழுதழிப்பதும், இக்கருவியை, உயிர்க்கொல்லி வரிசையில் இருத்திப் பார்க்க வைத்துவிடுகிறது.




இப்படியெல்லாம் இது குறித்துச் சிந்திப்பதிலேயே இந்த இளங்காலை கழிந்துவிட்டதே என்று காகம் கரைந்து எழுப்புகிறது. கடிகாரம் தன் போக்கில் ஓடிக் கொண்டிருக்கிறது.

உயிரினும் இனிய பொழுதுகள் கொள்ளைபோகச் சம்மதியோம் என்றும், இந்தச் சின்னஞ்சிறு கருவிக்கு அடிமையாய் இனி இருந்திடோம் என்றும் உறுதிகொள்ளச் சொல்கிறது பாரதியின் கவித் தொடர்.

பொழுதெனும் எங்கள் செல்வம் கொள்ளை கொண்டு போகவோ? என்று இன்றுபுதிதாய்ப் பாடி எழுகிறேன்.

உங்களையும் எழுப்ப விழைகிறேன். எழுக மானுடமே!

# தமிழ்

## நற்றமிழரின் நாடித்துடிப்பு


### January




### February




### March




### April

| S | M | T | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | | | | |

### May

| S | M | T | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

### June

| Su | M | Tu | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | | | | | | |

### July

| Su | M | Tu | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

### August

| Su | M | Tu | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

### September

| Su | M | Tu | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | | | | | |

### October

| Su | M | Tu | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |


### November

| Su | M | Tu | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

### December

| Su | M | Tu | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

அய் தமிழ் முகநூல்:
http://www.facebook.com/pages/Ithamil-Magazine
www.ithamil.com




editor@ithamil.com


VARSHA™
Ready to Cook
Made with Quality Natural Products
Idli / Dosa Wet Mix
இட்லி / தோசை மாவு
ఇడ్లీ దోస పిండి
ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು
ഇഡ്ഡലി / ദോശ മാവ്
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
100% Pure Vegetarian
ઈડલી ડોસા નું ખીરું
इडली/ दोसा आटा